சுவடி : 45
ஏடு : 07
மார்ச்சு - 2021

ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**இரா. பச்சமலை**
**வாலாசா வல்லவன்**
**சா. குப்பன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி. துரைசித்தார்த்தன்**
**முனைவர் முத்தமிழ்**

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**
**'சிந்தனையாளன்'**
**பெரியார் ஈ.வெ.ரா - நாகம்மை அறக்கட்டளை வளாகம்**
மனை எண் 277 / 2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை
அம்பத்தூர்
சென்னை - 600050.

கைப்பேசி
**94448 04980**
**86681 09047**
**95975 26990**

மின்னஞ்சல்
**sinthanaiyalantamilmonthly@gmail.com**


இதழ் வடிவமைப்பு
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179

இணையத்தில் படிக்க
**www.keetru.com**

ஆசிரியவுரை

# தேர்தலோ தேர்தல்!

## இறையாண்மையற்ற அடிமைகளுக்கான தேர்தல்



2021 ஏப்ரல் 6ஆம் நாள் தமிழகச் சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடைபெறும் என இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதேநாளில் புதுச்சேரி, அசாம், கேரளா, மேற்குவங்கம் மாநிலங்களுக்கும் தேர்தல் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளது.

08.08.1976-இல் தொடங்கப்பட்ட பெரியார் சம உரிமைக் கழகம், 13.03.1988-இல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமை கட்சி என்று பெயர் மாற்றம் பெற்று இயங்கிவருகிறது. கட்சி தொடங்கப்பட்ட நாளிலேயே, "இது தேர்தலில் ஈடுபடாத ஓர் அரசியல் கட்சி" என்பதை நாம் துலாம்பரமாக அறிவித்தோம். ஏன்? எனில், இந்திய அரசு என்பது பார்ப்பனப் பனியாக்களுக்கும், பன்னாட்டு நிதி மூலதனத்திற்கும் ஏவலராகச் செயல்படும் அரசு என்பதை உணர்ந்தும், அதன் தொங்கு சதைதான் தமிழ்நாட்டு அரசும் மற்ற மாநில அரசுகளும் என்று தெளிவாக நம் உணர்ந்திருந்ததால்தான் அப்படி அறிவித்தோம். நிற்க.

இந்தியாவில் கொஞ்சம் கொஞ்சமாகக் கால் பதித்த ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி தன் நிருவாக வசதிக்காக சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு மூன்று மாகாணங்களை உருவாக்கி ஆளுகை நடத்தியது. 1773-இல் தான் முதன்முதலாக நடுவண் அரசு என்ற ஒன்று இந்தியாவில் பிரித்தானியரால் உருவாக்கப்பட்டது. அந்த ஆண்டில்தான், இங்கிலாந்து நாடாளுமன்றம், 'இந்தியா ஒழுங்குமுறைச் சட்டம்' என்ற சட்டத்தை இயற்றியது. அதன்படி, கல்கத்தாவின் கவர்னர் இனி 'கவர்னர் ஜெனரல்' (தலைமை ஆளுநர்) என அழைக்கப்படுவார் என்று விதித்து சென்னையையும் பம்பாயையும் அவரின் ஆளுகைக்குக் கீழ் கொண்டுவந்தது.

இந்தியாவுக்கான பிரித்தானிய அரசில், இந்தியா(துறை) அமைச்சராக இருந்த சாமுவேல் மாண்டேகுவும், இந்தியக் கவர்னர் ஜெனரலாக இருந்த செம்ஸ்ஃபோர்டும் 1919ஆம் ஆண்டு கொண்டுவந்த 'மாண்டேகு-செம்ஸ்ஃபோர்டு' பரிந்துரைப்படி முதன்முதலாக மாகாணங்கள் தங்கள் வரவு - செலவுத் திட்டங்களைத் தயாரித்துக் கொள்ள சட்டம் செய்யப்பட்டது. இச் சட்டம்தான் சுதந்திர இந்தியாவில் நடைமுறையில் உள்ள சட்டத்துக்கு முன்னோடி. அச் சட்டத்தின்படி மாகாணங்களில் இரட்டை ஆட்சிமுறை உருவாக்கப்பட்டது.

இந்தியா பல மதங்களையும், பல் தேசிய இனங்களையும் பல நூறு மொழிகளையும் கொண்ட ஒரு துணைக்கண்டம். இந்திய தேசியக் காங்கிரசு 1885-இல் உருவாக்கப்பட்டது. அக்கட்சி 1929-இல் வரித்துக்கொண்ட குறிக்கோள் "வெள்ளையனிடமிருந்து விடுதலை பெறுவது" என்பதுதான்.

"யாருக்காக விடுதலை?" (Swaraj for whom?) என்ற வினாவை, 1922-இல், காங்கிரசு மாநாட்டிலேயே எழுப்பினார், மாமேதை ம.சிங்காரவேலர். அதற்கு காந்தி, நேரு எவரும் தெளிவான விடை சொல்லவில்லை. "விடுதலைக்காக விடுதலை" என்றனர், அவ்வளவுதான். அந்த விடுதலை 14.08.1947 இரவு 12 மணிக்கு வந்தது. இந்தியாவே மகிழ்ச்சியோடு கொண்டாடியது. பெரியார் ஈ.வெ.ரா மட்டும் அந் நாளை - "ஆகத்து 15 துக்கநாள்!" என அறிவித்தார்.

தென்னிந்தியப் பார்ப்பனரல்லாதாருக்கான, 'தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்' என்கிற நீதிக்கட்சி, 1916 திசம்பரில் உருவாக்கப்பட்டது. நீதிக்கட்சியின் நிறுவனர்களுள் ஒருவரான டாக்டர் டி.எம்.நாயர் 09.11.1917-இல், "கேரளம், கன்னடம், ஆந்திரம், தமிழ்ப் பிரதேசங்கள் அடங்கிய தென்னிந்தியா, இந்திய அரசிலிருந்து விலகி, நான்கு

பிரதேசங்களும் சேர்ந்த கூட்டரசு ஏற்படவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே எங்கள் 'தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம்' ஏற்படுத்தப்பட்டது. அதற்காகவே பாடுபடப் போகிறது'' என, 'ஜஸ்டிஸ்' ஆங்கில இதழில் அறிவித்தார்.

22.11.1925-இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தமிழ் மாகாணக் காங்கிரசு மாநாட்டில், வகுப்புவாரிப் பிரதிநிதித் துவக் கொள்கையை ஏற்காத காங்கிரசுக் கட்சியைக் கண்டித்து, எஸ்.இராமநாதன், என். தண்டபாணிப் பிள்ளை ஆகியோருடன் ''சாதி ஒழிக! மதம் ஒழிக! கடவுள் ஒழிக! இவற்றைக் காப்பாற்றும் பார்ப்பான் ஒழிக! காங்கிரசு ஒழிக!, காந்தி ஒழிக!'' என்று முழக்கமிட்டபடி காங்கிரசிலிருந்து வெளியேறினார், பெரியார் ஈ.வெ.ரா.

26.12.1926-இல், மதுரையில் நடைபெற்ற பார்ப்பனரல்லா தார் 10ஆவது மாகாண மாநாட்டில், பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை இயக்கம், பெரியார் ஈ.வெ.ரா அவர்களின் பெரு முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டது.

1925-இல்தான், இந்தியப் பொதுவுடைமைக் கட்சியும், இராஷ்டிரிய சுயம்சேவக் சங்கமும் (ஆர்எஸ்எஸ்) தோன்றின.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் குறிக்கோள், அன்றும் இன்றும், ''இந்தியாவில் பொதுவுடைமை மலர வேண்டும்'' என்பதே. அந்தச் சீரிய நோக்கம் கொண்ட அக் கட்சி இந்தியாவில் நிலவும் சாதியச் சமூக அமைப்புப் பற்றிக் கவலைப்படவே இல்லை. அதனால் அது, 1962-க் குப் பிறகு ஓங்கி வளரவே இல்லை. அது வருத்தத்துக்கும், ஆய்வுக்கும் உரியது.

1925-இல் தோற்றுவிக்கப்பட்ட ஆர்எஸ்எஸ், 30.01.1948 -இல் காந்தியார் கொல்லப்பட்ட பிறகு, 1948 பிப்ரவரியில் பூனாவில் கமுக்கமாகக் கூடி, ''இந்தியாவில் கி.பி.2000-இல் இராமராஜ்யத்தை அமைக்கவேண்டும்'' என்றும், அதற்காக, ''எல்லா அரசியல் கட்சிகளிலும் அரசுத் துறைகளிலும் ஊடுருவ வேண்டும்'' என்றும் தந்திரமாக முடிவு எடுத்தது.

அந்தக் கமுக்கக் கூட்டத்திற்கு, பார்ப்பனரின் மரியாதைக் குரியவராக விளங்கிய மகாத்மா சோதிராவ் புலேவின் பெயரன் சென்றிருந்தார். அவர்தான் இந்த உண்மையை வெளிப்படுத்தினார்.

காங்கிரசுக்குப் பணத்தை வாரிக்கொடுத்த டாட்டா, பிர்லா, பஜாஜ், டால்மியா முதலான இந்தியப் பழம்பெரும் முதலாளிகள்தான் ஆர்எஸ்எஸ்-க்கும் பணத்தை அள்ளிக் கொடுத்தனர். காங்கிரசுக்கு இணையாக ஆர்எஸ்எஸ் இயக்கமும் எல்லாத் தளங்களிலும் திட்டமிட்டு வளர்த் தெடுக்கப்பட்டது.

1946 முதல் 1967 வரை இந்தியாவைக் காங்கிரசு கட்சி இடையீடின்றி ஆண்டது. அது, இந்திய ஒன்றிய அரசைப் பார்ப்பன பனியா ஆதிக்கத்துக்கு வழிகோலும் வகை யிலேயே ஆட்சிசெய்தது. இந்திய வெகுமக்களுக்கு வேண்டுமென்றே கல்வி தராமல் செய்தது. காங்கிரசுக் கட்சியின் தவறான அணுகுமுறையால் ஜம்மு-காஷ்மீர் மக்களின் தேசியஇன எழுச்சியை அடக்கி ஒடுக்குவதையே தலையாயப் பணியாக மேற்கொண்டது. நேருவினால் தன் வாரிசாக - இந்தியத் தேசியக் காங்கிரசின் தலைவியாக 1955-இல் ஆக்கப்பட்ட இந்திராகாந்தி, 1967-இல் பிரதமர் பதவிக்கு வந்தவுடன், தானடித்த மூப்பாக நடந்து கொண்டார்; மாநிலக் கட்சிகளை ஒடுக்கினார்.

1975-இல் நெருக்கடி நிலையைக் கொண்டுவந்து எதிர்க் கட்சிகளை ஒடுக்கினார். எதிர்கட்சித் தலைவர்களைச் சிறையில் அடைத்துக் கொடுமைப்படுத்தினார்.

அதே காலகட்டத்தில் மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியை அரசமைப்புச் சட்டத்தின் பொதுப்பட்டியலுக்கு மாற்றினார். நடுவண் அரசின் பொதுப்பட்டியலில் உள்ள உரிமைகள் நடுவண் அரசுக்கும் மாநில அரசுக்கும் உரிமை உடையது என்ற போதிலும் நடுவண் அரசின் கையே மேலோங்கும் நிலை ஏற்பட்டது.

தமிழ்நாட்டின் மருத்துவம் பொறியியல் போன்ற உயர் கல்வி நிறுவனங்களைத் தொடங்குவதற்கு நடுவண் அரசின் அனுமதி பெறவேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழ் நாட்டு உயர் கல்வி நிறுவனங்களில் கூடுதலாக ஒரு மாணவரைச் சேர்க்கவேண்டும் என்றாலும் தில்லியில் அனுமதி பேறவேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்தில் இரண்டு முதுநிலைப் படிப்புகளுக்கான சேர்க்கை இரத்துச் செய்யப்பட்டு, மாநில அரசின் இடஒதுக்கீடும் கைவிடப்பட்டு மீண்டும் நடுவண் அரசின் இடஒதுக்கீட்டு முறையில் சேர்க்கை நடைபெற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதே இதற்குச் சான்று.

அதேபோல், 'நீட்' தேர்வை 2012ஆம் ஆண்டில் மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரசு அரசு கொண்டுவந்தது. 2013 ஆம் ஆண்டு நீட் தேர்வு நடத்த அறிவிப்பு வெளியிட்டது. பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்த்தன. தமிழ்நாடு அரசும் எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. 18.07.2013அன்று உச்சநீதிமன்றம் தடைவிதித்தது. 2014இல் மோடி தலைமையிலான பாஜக அரசு ஆட்சிக்கு வந்த பிறகு தனக்குச் சாதகமான நீதிபதி களை பதவிக்கு அமர்த்தி, சீராய்வு மனுவைத் தாக்கல் செய்து, 11.04.2016-இல் நீட் தொடர்பான தடையை நீக்கி உத்தரவைப் பெற்றது. நீட் தேர்வை நிரந்தரமாக்கவும் 19.11.2016இல் சட்டத்தை இயற்றிக்கொண்டது. 2017 முதல் நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டது. இதனால் தமிழக மாணவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு வடநாட்டு மாணவர்கள் தமிழகக் கல்லூரிகளிலேயே ஆக்கிரமிப்புச் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

புதிய தேசியக் கல்விக் கொள்கை என்ற ஒன்றைக் கொண்டுவந்து இந்தி பேசாத மாநில மாணவர்களின் மீது இந்தி, சமற்கிருதம் வலிந்து திணிக்கப்படுகிறது. அனைத் திந்திய அளவில் 5ஆம் வகுப்பு முதல் தேர்வுகள் நடத்தி, பார்ப்பனரல்லாத கிராமப்புற மாணவர்களை வடிகட்டும் போக்கை நடுவண் அரசு திட்டமிட்டுச் செய்கிறது. பெரும் போராட்டங்கள் நடத்தி கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றினாலொழிய நாம் இவற்றிலிருந்து விடுபட முடியாது.

நடுவண் அரசுத் தேர்வு முகமை என்ற அமைப்பை ஏற்படுத்தி தமிழ்நாட்டில் இயங்கும் நடுவண் அரசின் அனைத்து துறைகளிலும் வடநாட்டினரைத் திணிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

சரக்கு சேவை வரியைக் கொண்டுவந்து மாநில வரி வருவாயான வணிக வரியையும் நடுவண் அரசு பறித்துக் கொண்டது. மாநிலத்துக்கு உரிய பங்கையும் கொடுக்காமல் இழுத்தடிக்கிறது. மாநிலப் பட்டியலில் இருந்த வேளாண் துறையைத் தம் வயமாக்கிக் கொண்டு உழவர்களுக்கு எதிரான வேளாண் சட்டங்களை இயற்றி ஏழை உழவர்களை வஞ்சித்து பெருமுதாளிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது. நிற்க.

தமிழ்நாட்டில் டாக்டர் டி.எம்.நாயரை அடுத்து, தந்தை பெரியார் 30.09.1945-இல் 'தனிச் சுதந்தர நாடு' என்கிற பிசிறற்ற கோரிக்கையை முன்வைத்தார். தென்இந்திய மாநிலங்கள் நான்கும் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட பின்னர், 01.11.1956 முதல் தி.நகரில், கடைசியாக உரை ஆற்றிய 19.12.1973 வரையில் தனிச் சுதந்தரத் தமிழ்நாடு வேண்டும் எனப் பிசிறின்றிக் கோரினார்.

தொடக்கத்தில் 'திராவிட நாடு திராவிடருக்கே!' என்பதில் தீவிரமாக இருந்த அறிஞர் சி.என்.அண்ணாத்துரை, 1963-இல் "திராவிட நாடு பிரிவினையைக் கைவிட்டோம். ஆனால், பிரிவினைக்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன" என்று மாநிலங்களவையில் பேசினார்.

அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், "மாநிலத்தில் சுயஆட்சி! மத்தியில் கூட்டாட்சி!" என முழக்கமிட்டார், கலைஞர் மு.கருணாநிதி. இதுபற்றி, தந்தை பெரியார், "இது பிய்ந்த செருப்புக்குப் பட்டுக்குஞ்சம் கட்டுவது போன்றது" என்று அப்போதே சொன்னார். அதை யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

1972-இல், அதிமுக எனத் தனிக்கட்சி கண்ட எம்ஜிஆர், 1977-இல் இருந்து 12 ஆண்டுகள் தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆட்சிசெலுத்தினார். அறிஞர் அண்ணாவும், கலைஞர் கருணாநிதியும், நடிகர் எம்ஜிஆரும் வளர்த்தெடுத்த திரைப்படக் கவர்ச்சிக்கு, தமிழ்நாட்டு இளைஞர்களும் தாய்மார்களும் ஆளாயினர். இதன்பிறகு மாறிமாறி ஆட்சிக்கு வந்த செயலலிதாவும் கருணாநிதியும் தமிழின உரிமைகளைக் காப்பதில் போதிய அக்கறை காட்டவில்லை.

செயலலிதா மறைவுக்குப் பிறகு பதவியேற்ற ஓ.பன்னீர் செல்வமும், எடப்பாடி பழனிச்சாமியும் பாஜக-மோடி அரசின் எல்லாச் செயல்களுக்கும், கொடுமையான சட்டங்களுக்கும் துணை நிற்கின்றனர். மேலும், ஐந்தாண்டு கால ஆட்சியில், தமிழக அரசின் கடன் சுமையை 5 லட்சத்து 70 ஆயிரம் கோடியாக அதிகப்படுத்திவிட்டனர்.

கடந்த ஓராண்டில் மட்டும் 1 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ளது எடப்பாடி அரசு. மேலும், நடப்பு நிதியாண்டில் 84,686 கோடி ரூபாய் கடன் வாங்கவும் இலக்கு நிர்ணயித்திருக்கிறார் நிதியமைச்சர் ஓபிஎஸ்.

தமிழகத்திற்கு வழங்கும் பேரிடர் நிதியை போதுமான அளவில் தரவில்லை என்றும், பெட்ரோல் - டீசல் மீதான மேல்வரிக் கட்டணங்களில் தமிழக அரசின் பங்கைத் தரவில்லை என்றும், பல்வேறு திட்டங்களுக்கான நிதியை விடுவிக்கவில்லை என்றும், உள்ளாட்சிகளுக்கான மானியத்தைக் குறைத்துவிட்டது என்றும் மத்திய பாஜக அரசு மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை பட்ஜெட்டில் வைத்திருப்பதன் மூலம், பாஜக-வை ஆதரிக்கும் தமிழக அதிமுக அரசை மத்திய பாஜக அரசு ஏமாற்றுகிறது என வாக்குமூலம் தருகிறார் தமிழ்நாட்டு நிதியமைச்சர்.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் மட்டும் உலகப் பணக்காரர்களில் 8ஆவது இடத்தில் உள்ள அம்பானியின் செல்வம் 24 விழுக்காடு அதிகரித்துள்ளது. 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் கோடீசுவரர்கள் பட்டியலில் புதியதாக 40 பேர் இணைந்துள்ளார்கள். மறுபக்கம் இந்தியாவின் பொருளாதாரம் 7 விழுக்காடு கீழாகக் குறைந்துள்ளது என்கிறது ஆக்ஸ்ஃபாம் ஆய்வு.

இந்தியத் துணைக்கண்டம் ஏறக்குறைய 6000-க்கும் மேற்பட்ட உட்சாதிகளைச் கொண்ட வருண - சாதி பேத ஏற்றத் தாழ்வுகளைக் கொண்ட சமூக அமைப்பைக் கொண்டது. பல்வேறு மதப்பிரிவுகளைக் கொண்டது. வேறுபட்ட பண்பாட்டுப் போக்குகளும் வேறுபட்ட மரபினரும் இங்கே உள்ளனர். இவ்வளவு வேறுபாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி மக்கள் நாயக வளர்ச்சிப் போக்கில் கொண்டு செல்லும் சாத்தியம் இந்திய அரசுக்கோ அதை தாங்கிப் பிடிக்கும் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கோ உள்ளதா ? மண்ணின் சுதந்திரம் என்ற பெயரில் மக்களின் சுதந்திரம் அல்லவா பறிக்கப்படுகிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 370 வழங்கிய ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்புரிமையை ஒரே நாளில் இந்திய ஒன்றிய அரசு பறித்துவிட்டதே! தமிழ்நாட்டு அரசு சட்டம் இயற்றி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 9-ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்ட 69 விழுக்காடு இடஒதுக்கீடு இன்று என்ன ஆனது?


சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்படும் 70 ஆண்டுகளில், பல மொழிவழித் தேசிய இனங்களுக்கான மய்ய நாடாளுமன்றம் என்ற ஒன்று விவாதமாக்கப்பட்டு புதிய அரசமைப்புச் சட்டம் வகுக்கப்பட்டிருக்க வேண்டாமா? இந்தியா ஒரு உண்மையான ஐக்கியக் குடியரசு ஒன்றியமாக மலர்வதற்கு வழிவகை செய்திருக்க வேண்டாமா?

அதிக வாக்கு அடிப்படையிலான தேர்வு என்பதற்கு பதில் பிரதிநிதித்துவ மக்கள் நாயகம் என்ற முறையில் மாறி அமைந்திருக்க வேண்டாமா?

தேசிய இனங்களின் உரிமைகளைப் பறிக்கின்ற, மொழி உரிமையை நசுக்குகின்ற, கல்வி பெறும் உரிமையை தடுக்கின்ற, மக்கள் நாயக உரிமைகளை மறுக்கின்ற வெகுமக்கள் விரோத முதன்மை எதிரியான இந்துத்துவ பாசிச பாஜக-வை முறியடிப்போம்.

**இறைமை இல்லாத சட்டமன்றத் தேர்தலில் வாக்களிப்பது. மாநில உரிமைகளைப் பெற்றெடுக்கப் பயன்படாது. இவ்வளவு ஈனத் தனங்களையும் காப்பாற்றும் இன்றைய அரசியல் அமைப்பைத் தூக்கி எறிய எந்த வாக்கு வேட்டைக் கட்சியும் உறுதிகூறி, அதற்காக உழைக்காதபோது, மக்களை ஏய்ப்பதற்காகவே தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. இத் தேர்தலில் பதிவாகிற ஒவ்வொரு வாக்கும் நாம் இந்தியத்தின் அடிமைக் குடிமகன் என்பதையே பறைசாற்றும். தமிழகத் தன்னுரிமை காண - இறையாண்மை கொண்ட அரசாக மாறிட இத் தேர்தலைப் புறக்கணிப்போம், வாருங்கள்!** ●

# செங்களப் பேருழவர்
# தோழர் தா.பா சாய்ந்தார்!



இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் மூத்த தலைவர் தா. பாண்டியன், சிறுநீரகப் பாதிப்பால் சென்னை இராசீவ்காந்தி பொது மருத்துவமைனையில் மருத்துவம் பெற்று வந்த நிலையில் மருத்துவம் பலனின்றி நம்மைப் பிரிந்தார்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே உள்ள வெள்ளைமலைப்பட்டி சிற்றூரில் தாவீது (டேவிட்) - நவமணி இணையருக்கு நான்காவது மகனாக 18.05.1932-இல் பிறந்தவர் தா.பாண்டியன்.

உசிலம்பட்டியில் பள்ளிப்படிப்பை முடித்து, காரைக்குடி அழகப்பா கல்லூரியில் உயர்கல்வி பயின்று, அதே கல்லூரியிலேயே ஆங்கிலத்துறைப் பேராசிரியராகவும் பணியாற்றினார். 1953-இல், கல்லூரி மாணவராக இருந்த போதே பொதுவுடைமைக் கட்சி உறுப்பினரானார். தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் முதல் பொதுச் செயலாளரான அவர், மக்கள் இயக்கத்திற்குக் கலை இலக்கியப் பங்களிப்பின் தேவையை நன்கு உணர்ந்தவர். கலை இலக்கியப் பெருமன்றத்தில் காத்திரமாகப் பணியாற்றி வந்தபோது, பல்வேறு அரசு நிருவாக நெருக்கடிகளுக்கு ஆளானதால், பேராசிரியப் பணியை விடுத்து, சென்னை சென்றார். இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் முழுநேர ஊழியரானார். ஜனசக்தி ஏட்டிலும் எழுதத்தொடங்கினார். இதேகாலத்தில் சட்டமும் பயின்றார். ஜனசக்தி இதழின் ஆசிரியராக 16 ஆண்டுக் காலம் இருந்து பல அரிய கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார்.

1960-கள் வரை, பொதுவுடைமைக் கட்சியினர், தி.க-வைத் ‘திராவிடர் கலகம்’ என்று இழிவுபடுத்தியும், ‘வர்க்கப்பிளவு ஏற்படுத்துவோர்’ எனக் குற்றம்சாட்டியும் வந்த காலத்திலேயே தந்தை பெரியாரைப் புகழ்ந்தவர். ‘தந்தை பெரியார் ஒரு சமூக விஞ்ஞானி’ என்ற தலைப்பில் 18.03.1979-இல்,ஈரோட்டில், பெரியார் நூற்றாண்டு விழாவில் தா.பா பேசிய பேச்சை விரிவாக்கம் செய்து நூலாக வெளியிட்டுள்ளார். ஒரு நேர்காணலில், “பிறப்பால் இழிவுபடுத்தப் பட்டு, சாதியச் சாக்கடையில் ஊறித்திளைத்த இந்தத் தமிழினத்தைத் தம் கைத்தடியால் அடியோதண்டமாக அடித்துத் துவைத்து மான உணர்ச்சிபெற வைத்தவர் பெரியார். நூற்றுக் கணக்கான ஏதிலிக் குழந்தைகளைத் தம் பராமரிப்பில் ‘தந்தை’ என்று தன் பெயரையே கொடுத்துப் பள்ளிகளில் சேர்த்துப் படிக்கவைத்த அவரைத் ‘தந்தை பெரியார்’ என்று சொல்லாமல் வேறெப்படி அழைப்பது? என்று சங்கிகளின் செவிப்பறை கிழிய ஓங்கி அறைந்தவர். இருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளரான தா.பா.-தான், 21.01.1991 அன்று திருப்பெரும்புதூரில் இராசீவ் காந்தி பேச வேண்டிய கூட்டத்திற்கும் மொழிபெயர்ப்பாளராக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தார். அக் குண்டுவெடிப்பில் தா.பா-வும் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார். அன்றுமுதல் கடுமையான புலிகள் எதிர்ப்பாளராக இருந்தவர், 2009-இல் இந்திய அரசும் சிங்களப் பேரினவாதமும் கைகோர்த்து, தமிழர்களை இலக்கக்கணக்கில் கொன்றொழித்த ஈழப் போரின் கடைசி நாட்களில் தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு அதுமுதல் ஈழ விடுதலைக்கும், ஏழு தமிழர் விடுதலைக்கும் இறுதிவரை குரல்கொடுத்தார்.

2005 முதல் மூன்று முறை தொடர்ச்சியாக இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் மாநிலச் செயலராக இருந்தார். அக் கட்சியின் தேசியக் குழு உறுப்பினராகவும் இருந்து செயல்பட்டார். மார்க்சியத்தில் தேர்ந்த ஞானம் உள்ளவர். அதன் அண்மைக்காலப் பரிமாணங்களைக் கூர்ந்து பயின்று, தன்னைப் புதுப்பித்துக் கொண்டே இருந்தவர். திருக்குறளில் உள்ள பொதுமைச் சிந்தனைகளை எடுத்தியம்பி வந்தவர். பொதுவுடைமைச் சிந்தனையின் எதிர்காலம் குறித்துத் திறந்த மனத்துடன் விவாதித்து, மார்க்சியமும் பெரியாரியமும் இணைந்து செயலாற்றவேண்டிய புள்ளிகளை அடையாளம் கண்டிருந்தவர்.

சாதியக் கொடுமை, தேசிய இனச்சிக்கல் இவற்றைப் பேசாமல், தமிழகத்தில் பொதுவுடைமை இயக்கத்திற்கு வேலையும் இல்லை; வளர்ச்சியும் இல்லை என்பதை நன்கு உணர்ந்து உரைத்தவர். இடஒதுக்கீட்டின் தேவையைப் பொதுவுடைமைக் கட்சியினர்க்கும் உணர்த்தியவர். அனைத்துக் கட்சித் தோழர்ளோடும் அன்பொழுகப் பேசி, அனைவராலும் கொண்டாடப்பட்ட பேரறிவாளர்.

சில ஆண்டுகளாகவே சிறுநீரகப் பாதிப்பால் தொடர் மருத்துவம் பார்த்துவந்த, தா.பா, 2018இல், சென்னை இராசீவ் காந்தி அரசுப் பொதுமருத்துவமனையில் உள்ளிருந்து மருத்துவம் பெற்றுவந்தபோது, தோழர் வே.ஆனைமுத்து தம் 93 வயதிலும் நேரில் மருத்துவமனைக்குச் சென்று தோழர் தா.பா-வைக் கண்டு நலம் உசாவியபோது, இருவருக்குமே அச்சந்திப்பு நெகிழ்ச்சியாக அமைந்தது.

**பன்முக ஆளுமை மிக்கவராக இம்மண்ணை வலம்வந்த தா.பா, மீண்டும் உடல் நலிவுற்று, 26.02.2021 வெள்ளி காலை 10 மணிக்கு நம்மைப் பிரிந்தார் என்பது தமிழர்க்கும், இக்குமுகத்திலுள்ள மாந்தநேயப் பொதுமைச் சிந்தனையாளர் எல்லோருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு. தம் இறுதிமூச்சை நிறுத்திக்கொள்கிற சில நொடிகளுக்கு முன்புகூட “என் சிவப்புத் துண்டை என் தோளில் போட்டு விடுங்கள்” என்று சொல்லி, செங்களத்தில் ஆழ உழுத செங்களப் பேருழவர் தோழர் தா.பா. -விற்குச் செவ்வணக்கம் செலுத்துகிறோம்.**

**வெள்ளை மலைப்பட்டி செங்களத்தில் விதைக்கப்பட்டுள்ள தோழர் தா.பா புகழ் ஓங்குக!**

**- முனைவர் முத்தமிழ்**

# உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி-21)

# தமிழகம் கற்க மறந்த பாடம்!

பேராசிரியர் **த. செயராமன்**

**தலைமை ஒருங்கிணைப்பாளர், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பு**

1952-ஆம் ஆண்டு, அன்றைய கிழக்குப் பாகிஸ்தானில் (இன்றைய வங்கதேசம்), "எங்களுக்கு வங்க மொழியே ஆட்சி மொழி; பாகிஸ்தான் திணிக்கும் உருது மொழியை ஆட்சி மொழியாக ஏற்க முடியாது" என்று அறிவித்து, வங்காளிகள் நடத்திய உருதுமொழி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த நான்கு மாணவர்களின் ஈகத்தைப் போற்றும் வகையில், அவர்கள் கொல்லப்பட்ட நாளான பிப்ரவரி 21-ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளாக அறிவிக்கப்பட்டது.

1971-இல் இறையாண்மையுள்ள தேசமாக மலர்ந்த வங்கதேசம் 1998-இல் முன் வைத்த கோரிக்கையை ஏற்று, உலக அமைப்பாகிய யுனெஸ்கோ 1999-இல் "பிப்ரவரி 21 என்பது உலகத் தாய்மொழி நாள்" என்று அறிவித்தது. தங்கள் மொழி உரிமையை வலியுறுத்தி உயிர் ஈகம் செய்த நான்கு மாணவர்களுக்காக, அவர்கள் கொல்லப்பட்ட நாளையே உலக அளவில் தாய்மொழி நாளாக அறிவித்து, அதை உலக நாடுகளையும் ஏற்பளிக்கச் செய்ததைவிட சிறந்த நினைவஞ்சலியை எந்த நாடும் செய்துவிட முடியாது. அந்த ஏற்பளிப்பை வங்கதேசம் வெற்றிகரமாகப் பெற்றுக்கொண்டது.

பிப்ரவரி 21 என்பது தமிழக வரலாற்றிலும் முக்கியமானது. 1938-ஆம் ஆண்டு பள்ளிகளில் கட்டாய இந்தியை மதராஸ் (சென்னை) மாகாணத்தின் பிரதமர் இராசகோபாலாச்சாரி தலைமையிலான அரசு புகுத்தியபோது, அதை எதிர்த்து மூன்று ஆண்டுகள் போராட்டங்கள் நடைபெற்றன. இறுதியில் 1940ஆம் ஆண்டு பிப்ரவரி 21-ஆம் நாளில்தான் மதராஸ் மாகாண ஆளுநர் ஜான் எர்ஸ்கின் அவர்களால் பள்ளிகளில் கட்டாய இந்தி என்பது நீக்கம் செய்யப்பட்டது.

### மொழிப்போரில் வங்கமும், தமிழகமும்

தமிழகம் உள்ளிட்ட இந்தியத் துணைக்கண்டம் 1947-இல் விடுதலை பெற்றது. அத்துடன் வங்காளதேசத்தை உள்ளடக்கிய பாகிஸ்தானும் இந்திய விடுதலைக்கு ஒரு நாள் முன்னதாக விடுதலை பெற்றது. "மேற்கு பாகிஸ்தானுக்கும், கிழக்கு பாகிஸ்தானுக்கும் (வங்காள தேசம்) உருது மொழியே ஆட்சிமொழி" என்று பாகிஸ்தானிய அரசு அறிவித்ததையடுத்து கடும் முரண்பாடு தோன்றியது.

உருது மொழித் திணிப்பை எதிர்த்து, கிழக்கு பாகிஸ்தானில் (இன்றைய வங்காளதேசம்) கடும் போராட்டம் நடைபெற்றது. மாணவர்களின் இப் போராட்டத்தில் 1952 பிப்ரவரி 21 அன்று 4 மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதால், உந்துதல் பெற்ற வங்காளிகள், 1971-இல் இந்திய உதவியோடு மேற்கு பாகிஸ்தானில் இருந்து விடுபட்டு வங்காள தேசத்தை உருவாக்கிக் கொண்டனர்.

அதன்பிறகு, யுனெஸ்கோ அமைப்பிடம் முறையிட்டு, பிப்ரவரி 21-ஆம் நாளை உலகத் தாய்மொழி நாளாக அறிவிக்கச் செய்தனர்.

இதில் தமிழகம் கோட்டைவிட்ட வரலாறையும் நினைவில் கொள்ளவேண்டும்.

மொழிப்போரில் தமிழகத்தைவிட வங்கதேசம் மூத்தது அல்ல. தன் மொழிக்காக தமிழகத்திற்கு இணையாக வங்கதேசம் ஈகம் செய்துவிடவும் இல்லை. தமிழகத்தையும் உள்ளடக்கிய இந்தியத் துணைக்கண்டம் விடுதலை அடைந்தபோது, அதற்கான இந்திய அரசியலமைப்புச் சட்டம் (1946-1950) எழுதப்பட்டது. பாகிஸ்தான் கிழக்கு பாகிஸ்தானுக்கும் சேர்த்து உருது மட்டுமே ஆட்சி மொழி என்று அறிவித்ததை போல, இந்திதான் இந்தியாவின் ஒரே ஆட்சி மொழி என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் விதித்தது, அதைத் தமிழர்கள் எதிர்த்துப் போராடினார்கள்.

இந்திய விடுதலைக்கு முன், கட்டாய இந்தியை எதிர்த்தும் தமிழகத்தில் 1938 முதல் போராட்டம் நடந்தது.

1939-இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் 1,271 பேர் கைது ஆனார்கள். (இவர்களில் பெண்கள் 73, குழந்தைகள் 32). கடும் எதிர்ப்பைக் கண்ட சென்னை மாகாணப் பிரதமர் இராஜாஜி 125 பள்ளிகளில் மட்டுமே கட்டாய இந்தி என்றும், அதுவும் 6 முதல் 8- ஆம் வகுப்பு வரை கற்பிக்கப்படும் என்றும், தேர்வில் தேர்ச்சி பெறத் தேவையில்லை என்றும் அறிவித்தார். ஆனால் கட்டாய இந்திக்கு எதிர்ப்பு வலுத்தது. இந்நிலையில் 1939 சனவரி 15 அன்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டிருந்த நடராசனும், மார்ச் 13ஆம் நாளில் தாளமுத்துவும் சிறையிலேயே உயிர்நீத்தனர். இவ்வாறாக இந்தி எதிர்ப்புக்கு முதல் களப்பலிகளை 1939 இலேயே தமிழ்ச் சமூகம் அளித்தது.

அதேபோல, 1948-இல் மும்மொழித் திட்டத்தை எதிர்த்தும் போராட்டம் நடைபெற்றது. இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டம் 01.08.1952-இல் தொடங்கி நடைபெற்றது.

இந்தியை ஏற்க முடியாது என்று தொடர்ந்து போராடி வந்த தமிழர்களின் குரல் அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேருவை ஆட்டி வைத்தது.

"இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழி என்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயல்பாட்டுக்கு வந்த பிறகு 15 ஆண்டுகள் கழித்து, நடைமுறைக்கு வரும்" என்பது அரசியலமைப்புச் சட்ட அவையால் ஏற்கப்பட்டிருந்தது. அதன்படி,1965 சனவரி 26ஆம் தேதி இந்தி

அதிகாரபூர்வமான ஒரே ஆட்சி மொழி என்று நடைமுறைக்கு வரும் என்ற சூழலில், தமிழகத்தில் மீண்டும் ஒரு பெரும் மொழிப்போர் மூண்டது.

ஜவகர்லால் நேருவின் நடுவண் அரசு இயற்றிய 1963ஆம் ஆண்டின் அலுவல் மொழிகள் சட்டம் - பிரிவு 3, “இந்திய அரசின் அரசமைப்புச் சட்டம் விதித்துள்ளபடி 15 ஆண்டுகள் கெடு முடிந்த பிறகும், இந்தியுடன் சேர்ந்து ஆங்கிலமும் இந்தியாவின் ஆட்சி மொழியாகத் தொடரலாம்” என்று கூறியது. இந்தியோடு ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாகத் தொடர்வதற்கான ஓர் உறுதியை 1963 அலுவல் மொழிகள் சட்டம் வழங்கியது.

*“Not withstanding the expiration of the period of fifteen years from the commencement of the Constitution, the English language may, as from the appointed day, continue to be used in addition to Hindi.”*

ஆனால், இச்சொற்றொடரில் உள்ள ‘may’ (தொடரலாம்) என்பதை ‘shall’ (தொடரும்) என்று மாற்ற வேண்டும் என்று மாநிலங்களவையில் அறிஞர் அண்ணா வாதிட்டார். “இரண்டு சொற்களுக்கும் ஒரே பொருள்தான் என்பதால், சட்ட வரைவில் திருத்தம் தேவை இல்லை” என்று பிரதமர் நேரு வாதிட்டார். “இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும்” என்று நேரு வாக்குறுதி அளித்தார். இதனால் திருத்தங்கள் இல்லாமலேயே சட்டம் நிறைவேறியது. இவ்வாறு ‘தொடரலாம்’ என்ற சொல்லை கைவிடக்கோரி ‘தொடரும்’ என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று அறிஞர் அண்ணாவால் வலியுறுத்தப்பட்ட இந்தக் கோரிக்கை “ஆங்கிலம் தொடரவேண்டும்” என்பதை வலியுறுத்துவதாக இருந்ததே ஒழிய, “தமிழ் நாட்டின் ஆட்சிமொழியும் தொடர்புமொழியும் தமிழாகவே இருக்கவேண்டும்” என வலியுறுத்துவதாக அமையவில்லை.

**“மொழிப் புறக்கணிப்பு என்பது மொழி - இன அடையாளத்தைச் சிதைத்துவிடும்; தமிழ்ச் சமூகத்தை உதிரிகள் ஆக்கும்; தாயகப் பகுதியிலிருந்து தமிழினம் ஒரு கட்டத்தில் வெளியேற்றப்படும். இச்சூழலில் தமிழர்கள் மொழியை இழந்து, இன அடையாளம் இழந்து, சொந்த மண் இழந்து, அடிமைப்பட்ட ஏதிலிகளாக மாறுவார்கள்.”**

1965 ஜனவரி 26-ஆம் நாளைத் துக்க நாளாக அறிஞர் அண்ணா அறிவித்த நிலையில், சென்னை மாகாணத்தின் காங்கிரஸ் முதல்வர் பக்தவச்சலம் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் 25.01.1965 அன்று தொடங்கி, 15.03.1965 வரை 50 நாட்கள் தொடர்ந்தது; 18 நாட்கள் அரசு நிர்வாகமே செயலிழந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 243-ஆம் விதியைத் திருத்தக்கோரி 400 பேருக்கும் மேலாக, 1000 பேர் வரையிலும் இப் போராட்டத்தில், இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி “நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப்படும்” என்று உறுதியளித்தார். இந்தி பேசாத மாநிலங்களில் ஆங்கிலம் அலுவல் மொழியாக நீடிக்கும் வகையில் ‘அலுவல் மொழிகள் சட்டப் பிரிவு - 3’ திருத்தப்பட்டது. அந்த ஆண்டு சென்னை மாகாணத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று, காங்கிரஸ் தூக்கி எறியப்பட்டது.

1968-ஆட்சி மொழித் திருத்தச் சட்டம், “இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சி மொழியாக இருக்கும்” என்று அறிவித்தது. இதுவே தமிழக மொழிப்போர் வரலாற்றின் சாரம்.

**1952-இல், நான்கு மாணவர்களை மட்டுமே பலி கொடுத்த வங்கம் தங்கள் ஈகியர்களின் நினைவாக பிப்ரவரி 21-ஆம் நாளை உலகத் தாய்மொழி நாளாக அறிவிக்கச் செய்ய முடிந்தது. ஆனால், 1939-இல் இருவரையும், 1965-இல் கிட்டத்தட்ட 1000 பேரையும் பலிகொடுத்த தமிழகம் தங்கள் ஈகியர்களை நினைவு கொள்ளும் வகையில், தாய்மொழி நாளாக அறிவிக்கக் கோரத் தவறியது.**

**தமிழகத் தலைவர்கள் முன்வைத்தது, “ஆங்கிலமும் இந்தியுடன் இணை ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்” என்பதே! தமிழகத்தால் வங்கத்தைப் போன்று அப்படி ஒரு கோரிக்கையை ஏன் முன்வைக்க முடியவில்லை?**

மொழிப்போரில் இறங்கிய வங்கதேசம் விடுதலை எனும் இலக்கை உயர்த்திப் பிடித்தது,

1971-இல் சுதந்திர வங்க தேசத்தை உருவாக்கிக் கொண்டது. அதனால்தான் தங்கள் ஈகியரின் இறப்பு நாளை உலகத் தாய்மொழி நாளாக அறிவிக்கச்செய்ய முடிந்தது. ஆனால், இந்தியாவுக்குள் இணங்கி வாழ்வது என்ற கருத்தைத் தங்கள் அரசியல் போக்காக ஏற்றுக் கொண்டிருந்த தமிழகத் தலைமைகள் ஆங்கிலத்தை இணை ஆட்சிமொழியாக ஆக்க மட்டுமே கோரினார்கள். ஆக, கோளாறு என்பது ‘இந்தியாவுக்குள் இணங்கி வாழ்வது’ என்ற கருத்தியலில்தான் இருக்கிறது.

தமிழ்ச் சமூகம் ஒன்றை உணர வேண்டும். சொந்த மொழியில் கல்வி கற்க முடியாது; சொந்தத் தாய்மொழியில் படித்தால், சொந்தத் தாய்நாட்டில் வேலை வாய்ப்பு இல்லை; தமிழ்நாட்டில் தமிழிலேயே நிர்வாகத்தை நடத்த முடியாது; தமிழகத்தில் நீதிமன்றங்களில் நீதிமொழியாகத் தமிழை எவ்வளவு மன்றாடினாலும் கொண்டுவர முடியாது; தமிழகக் கோயில்களில் வழிபாட்டு மொழியாகத் தமிழ் இருக்காது - என்றால், தமிழர்கள் ஓர் அடிமைப்பட்ட இனம் என்பதை உணரவேண்டும்.

மொழிப் புறக்கணிப்பு என்பது மொழி - இன அடையாளத்தைச் சிதைத்துவிடும்; தமிழ்ச் சமூகத்தை உதிரிகள் ஆக்கும்; தாயகப் பகுதியிலிருந்து தமிழினம் ஒரு கட்டத்தில் வெளியேற்றப்படும். இச்சூழலில் தமிழர்கள், மொழியை இழந்து, இன அடையாளம் இழந்து, சொந்த மண் இழந்து, அடிமைப்பட்ட ஏதிலிகளாக மாறுவார்கள் என்பதை உணர வேண்டும்.

ஓர் இனத்தின் அடிப்படை உரிமையும், அவ்வினத்தின் மொழி-இன அடையாளத்தைப் பாதுகாக்க சிறந்த வழியும், அதன் தாய் மொழியைக் கல்வி மொழியாகக் கொள்வதும், அதை ஊக்குவிக்க வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிப்பதுமே ஆகும். தாய்மொழி வழிக் கல்வி என்பது ஒவ்வோர் இனத்திற்கும் அடிப்படை உரிமையாகும். தாய்மொழி வழிக் கல்வி பற்றிய தெளிவு இல்லாமல், எம்மொழிவழிக் கல்வி என்ற தேவையில்லாத வீண் விவாதம் தமிழகத்தில் மட்டுமே நடந்துகொண்டிருக்கிறது. ஓரினம் தன் மொழியில்தான் கல்வி கற்க முடியும். அதுவே இயற்கையானது. அந்நிய நிறுவனங்களின் எதிர்பார்ப்பு அல்லது அந்நிய எசமானர்களின் தேவைக்கு ஏற்ப, அவர்கள் மொழியில் அல்லது அவர்கள் விரும்பும் மொழியில் கல்வி கற்பது என்பது இயற்கைக்கு முரணானது என்பது மட்டுமின்றி, நாம் ஓர் அடிமை என்பதற்கான அடையாளமும் ஆகும்.

### ஆங்கில வழிக் கல்வி என்பது ஒரு சதி

தாய்மொழிவழிக் கல்வி என்பது சிந்தனைகளின் திறவுகோல்; மனத்தின் ஆளுமையை விரிவுபடுத்தும் சிறந்த கருவி. ஆனால், ஆங்கிலமே வாழ்க்கை என்ற சிந்தனை இங்கு விதைக்கப்பட்டிருக்கிறது. ஆதிக்க சக்திகளின் கைக் கருவியாக இன்று ஆங்கிலம் என்பது நிலவுகிறது. குறிப்பிட்ட உயர்நிலைச் சமூகங்களின் மேலாதிக்கத்தை நிறுவக்கூடிய கைக் கருவியாகவும், வெகுமக்களை ஓரங்கட்டக் கூடிய ஒரு சதியாகவும் ஆங்கிலவழிக் கல்வி என்பது அமைந்திருக்கிறது. பெரும்பான்மை மக்களுக்கு வாய்ப்புகளை மறுக்கும் வகையில் ஆங்கிலவழிக் கல்வி பயன்படுத்தப்படுகிறது. பெரும்பான்மையரை வாய்ப்பு வட்டத்தில் இருந்து வெளியேற்றுவது; அவர்களைத் தகுதியற்றவர்களாக முத்திரை குத்துவது என்பதே இதனுடைய நோக்கம்.

தமிழ்நாட்டில், 1960-கள் வரை தமிழே கல்வி மொழியாக இருந்தது. 1970-களில் தொடங்கி, 1980-களில் ஆங்கிலத் தனியார் பள்ளிகள் புற்றீசல்போல எண்ணிக்கையில் அதிகரித்தன. இன்று, ஆங்கில வழிக் கல்வி நிலையங்கள், தெரு ஓரங்களிலும்கூட, எவ்விதக் கட்டமைப்பு வசதியும் இன்றி, வணிக நோக்கத்தோடு நடத்தப்படுகின்றன. ஆங்கில அறிவு பெற்றால்தான் வேலைவாய்ப்பு என்ற நிலையைத் தனியார் நிறுவனங்கள் மட்டுமின்றி, அரசே நிலைநிறுத்துகிறது. ஆங்கில வழியில் கல்வி கற்றால்தான் ஆங்கில மொழிப்புலமை கிடைக்கும் என்ற உளவியலைப் பொதுமக்களும் பெற்றுவிட்டார்கள். ஆங்கிலப் புலமை என்பது ஆங்கிலம் புழங்கும் வீடுகளில், அல்லது சமூகத்தில் மட்டுமே சாத்தியம். அத்தகைய வீடுகள் மேல்தட்டு சாதிகளை, ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவையாகவே இருக்கின்றன. ஆங்கிலம் என்பது தங்கள் சமூக வகுப்பின் தகுதிக் குறியீடாக (Class Marker ), உயர்குடி நிலையை அடையாளப் படுத்துவதாகக் கருதப்படுகிறது. கல்விப் பாரம்பரியமற்றோர் எனப்படும் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். சிறு நகரங்களில் உள்ள ஆங்கில பள்ளிகள் சிறார்களைச் சேர்த்து அவர்களை ஆங்கிலம் அறியாதவர் களாகவும், தமிழும் அறியாதவர்களாகவும் உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றன. இப்போது ஆங்கிலப் பள்ளிகள் தமிழ் மண்ணில் ஓர் அந்நியக் கூட்டத்தை உருவாக்கி இருக்கிறது. இப்பள்ளிகளில் படித்தவர்கள் சமூக அக்கறை இல்லாதவர்களாகவும், மொழி உணர்வு இல்லாதவர்களாகவும், தாய்மண் பற்று அற்றவர்களாகவும் உருவாக்கப்பட்டுள்ளனர். இப்படி, தாய் மண்ணிலிருந்தும், தாய் மொழியிலிருந்தும் மக்களை அந்நியப்படுத்தும் கல்வி என்பது மிகவும் அபாயகரமானது. அது ஓர் இனத்தை விரைவில் அழித்துவிடும். எதிரிகளுக்குக் கையாளாகி சொந்த இன அழிப்புக்கு மாற்றானுக்குத் துணை நிற்கச் செய்யும்.

### தமிழ்மொழி வழிக் கல்வி முயற்சிகள்

கல்விமொழிச் சிக்கலின் பரிமாணத்தை உணர்ந்து, ஐந்தாம் வகுப்பு வரையிலாவது தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி, கடந்தகாலத்தில் தமிழ் அறிஞர்கள் 25.04.1999 அன்று, சென்னை வள்ளுவர்கோட்டத்தில் சாகும்வரை உண்ணாநிலைப் போராட்டத்தை தொடங்கினர். 19.11.1999 அன்று தமிழக அரசு, "ஐந்தாம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வி நடைமுறைப்படுத்தப்படும்" என்ற அரசாணையை வெளியிட்டது. ஆனால், மெட்ரிகுலேஷன் முதலாளிகள் சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகித் தங்களுக்குச் சாதகமான ஒரு தீர்ப்பையும் பெற்றார்கள். 24.04.2000 அன்று சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, "தமிழ் பயிற்று மொழியும் இல்லை; ஒரு பாடம் மொழியும் இல்லை" என்ற நிலை ஏற்பட்டது. இதன்பிறகு தமிழக அரசின் 'கற்பித்தல் சட்டம் - 2006' இயற்றப்பட்டது. தமிழகத்தில் தமிழ் ஒரு பாடமாக கூட இல்லாத நிலை ஏற்பட்டிருந்தபோது, கர்நாடகம், மராட்டியம் ஆகியவை பத்தாம் வகுப்பு வரை அவர்களுடைய மொழிகளைத் தங்கள் மாநிலங்களில் பள்ளிகளில் கட்டாயமாகப் படித் தாக வேண்டும் என்று சட்டம் செய்தன. அதையொட்டி, தமிழகத்திலும் "தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும்" என்றும், "ஆண்டுக்கு ஒரு வகுப்பு வீதம், 2007 இல் முதல் வகுப்பு தொடங்கி, படிப்படியாக 2017- இல் பத்தாம் வகுப்பு வரை தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும்" என்று தமிழக அரசு சட்டம் இயற்றியது. இதை எதிர்த்து கன்னியாகுமரி மாவட்ட மலையாளிகள் சமாஜம் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் வழக்கு தொடர்ந்தது. உயர்நீதிமன்றம் "தமிழ் நாடு அரசின் சட்டம் செல்லுபடியாகும்" என்று தீர்ப் பளித்தது. இவ்வழக்கு மேல்முறையீடு செய்யப்பட்ட போது, உச்சநீதிமன்றமும் "இச்சட்டம் செல்லும்" என்று தீர்ப்பு வழங்கியது. ஆகவே, தமிழ்நாட்டின் பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமாகத் தொடர்கிறது.

தமிழக மக்கள் தமிழ்வழிக் கல்வியை எதிர்க்கும் உளநிலையைப் பெற்றுவிட்டார்கள். இதற்குக் காரணம், வேலைவாய்ப்பில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்படாதது தான். தமிழில் படித்தால் வேலை கிடைக்காது என்று மக்கள் தீர்மானமாக நம்புகிறார்கள். தமிழில் படிப்பது தற் கொலைக்குச் சமம் என்று கருதுகிறார்கள். தமிழில்

படிப்பதன் மூலமாக தமிழின அடையாளம் நிலைநிறுத்தப் படும் என்பதால், அதை இந்திய ஒன்றிய அரசுகள் ஆதரிக்க வில்லை. தமிழில் படித்தால் வேலைவாய்ப்புகள் கிடைப்பது கடினம் என்பதால் மக்களும் அதை ஏற்கவில்லை. இந்நிலையில்தான் தமிழுணர்வாளர்கள் மட்டும் தமிழ் மொழி வழிக் கல்வி பற்றிப் பேசிக்கொண்டிருக் கிறார்கள்.

## 'ஒரே நாடு, ஒரே மொழி' இந்துத்துவ அரசின் இலக்கு நோக்கியப் பயணம்!

இந்திய நடுவண் அரசு எப்போதுமே இந்தியை அதி காரத்திலும், சமற்கிருதத்தைப் பண்பாட்டுத் தளத்திலும் உயர்நிலையில் வைப்பதில் மிகக் கவனமாகத் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. இதில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பால் வழிநடத்தப்படும் பாரதிய ஜனதா கட்சியின் அரசு கூடுதல் முனைப்புக் காட்டி வருகிறது. ஓர் இந்து ராஜ்யத்தை விரைவில் படைத்துவிட வேண்டும் என்பது அதனுடைய நோக்கம். 'ஒரே நாடு, ஒரே மொழி' என்ற நிலைபாட்டுடன், இந்தி படித்தால்தான் இனி வேலைவாய்ப்பு என்ற உள நிலையை மக்களிடையே நிலைநிறுத்தி வருகிறது.

## அஞ்சல் துறை அக்கவுண்டன்ட் தேர்வு – 2021

இந்தியாவில் 1,54,000 அஞ்சல் அலுவலகங்கள் உள்ளன. இந்த அலுவலகங்களுக்கான அலுவலர்கள் தேர்வு 2021 பிப்ரவரி 14ஆம் நாள் நடத்தப்படும் என்று ஆங்கிலத்திலும், இந்தியிலும் அதிகாரபூர்வமான அறிவிப்பு வெளியானது. இதுகுறித்து மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத்துக்குக் கடிதங்கள் எழுதப்பட்டபோது, அவர் 'தமிழிலும் தேர்வு நடத்தப்படும்' என்றார். 2020-இலும், இதே பிரச்சனை எழுந்தது. அப்போது 'போஸ்ட் மாஸ்டர்' எனப்படும் அஞ்சல் நிலையத் தலைமை அதிகாரிகளுக்கான தேர்வு நடத்தப்பட்டு, அத்தேர்வில் தமிழ் உள்ளிட்ட மொழிகள் புறக்கணிக்கப்பட்டமையால், அது நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, தேர்வுமுடிவுகள் நீதிமன்றத்தால் ரத்துச் செய்யப்பட்டன. அமைச்சர் ரவிசங்கர் அப்போதும் 'தேர்வுகள் தமிழிலும் நடக்கும்' என்றார். ஆனால், அதன் பிறகும் தமிழில் நடத்தப்படவில்லை. இனி வேலை வாய்ப்புப் பெறுவது என்பது இந்தி படித்தால் மட்டுமே சாத்தியம் என்ற நிலையை நடைமுறையில் நடுவண் அரசு உருவாக்கி வருகிறது.

## தொல்லியல் பட்டயப்படிப்புத் தேர்வில் தமிழ் புறக்கணிப்பு

2020ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், தொல்லியல் துறை பட்டயப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான அறி விப்பு வெளியானது. அதிலும் தமிழ்மொழி திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டது. இதுகுறித்து பிரதமர் மோடிக்குத் தமிழக முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிச்சாமி கடிதம் எழுதினார். அக் கடிதத்தில், "பட்டயப்படிப்பு வகுப்பில் சேருவதற்கான கல்வித்தகுதியில் தமிழ் புறக்கணிக்கப் படுகிறது. இந்தியாவிலுள்ள 48,000 கல்வெட்டுகளில் 28,000 கல்வெட்டுக்கள் தமிழிலேயே உள்ளன. ஆகவே தமிழில் பட்டம் பெற்றோரும் தகுதியுடையோராகச் சேர்க்கப்பட வேண்டும்" என்று கடிதம் எழுதினார். தமிழில்தான் கல்வெட்டுகள் அதிகம் உள்ளன என்பதும், இந்திய வரலாற்றில் 2000 ஆண்டுக் காலமாக எழுத்தறிவு பெற்ற மக்களாக விளங்கி வருபவர்கள் தமிழர்களே என்பதும், இந்திய நடுவண் அரசுக்கு நன்கு தெரியும். இருந்தாலும், தொல்லியல் துறையில் தமிழ் படித்தவர்களை அனுமதிக்க இந்திய அரசு விரும்பவில்லை. வரலாற்றை இந்துத்துவத் தேவைக்கு ஏற்ப மாற்றி அமைக்கவேண்டும் என்ற நோக் கில் இந்திய அரசு செயல்பட்டு வருகிறது. தொல்லியல் துறையையும், வரலாற்றுத் துறையையும் இந்துத்துவ அறிவாளிகளால் நிரப்பவேண்டும் என்ற முனைப்போடு செயல்படக்கூடிய இந்திய பாசக அரசு, தொல்லியல் பட்டப் படிப்புத் தகுதியில் தமிழைத் திட்டமிட்டே புறக்கணித்தது.

## தொலைக்காட்சியில் சமற்கிருதச் செய்தித் திணிப்பு

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எட்டாவது அட்ட வணையில் 'மொழிகள்' என்ற தலைப்பில் 22 மொழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை, சாதாரணமாக அனை வரும் கருதுவதுபோல, 'தேசிய மொழிகள்' என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிடவில்லை. இதில் குறிப் பிடப்பட்டிருக்கும் மொழிகளில், சமற்கிருதத்துக்கும், இந்திக்கும் கொடுக்கக்கூடிய அதிஉயர்நிலையைப் பிற மொழிகளுக்கு இந்திய அரசு தரவில்லை. பட்டியலில் உள்ள மொழிகள் சமமாக நடத்தப்படவில்லை. இந்தியர் என்றால் சமற்கிருதம் அறிந்திருந்தாலும், அறியா விட்டாலும், சமற்கிருதச் செய்தியைக் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்ற நிலையை மேற்கொண்டு, இந்திய நடுவண் அரசு சமற்கிருதத்தைத் திணிக்கிறது. தமிழ் அறிந்தவர்கள் மட்டுமே பார்க்கும் பொதிகைத் தொலைக் காட்சியில் சமற்கிருதத்தில் செய்தி அறிக்கை கட்டாயமாக வழங்கப்படுகிறது. "டெல்லி தூர்தர்ஷனில் சமற்கிருதச் செய்தி வெளியாகும் அதேநேரத்திலோ, அல்லது அதற்கு அரை மணி நேரத்திற்குள்ளோ, சமற்கிருதச் செய்தியை ஏனைய மொழித் தொலைக்காட்சிகள் வழங்க வேண்டும்" என்று உத்தரவிட்டிருக்கிறது. அதன்படி, சமற்கிருதச் செய்தி காலை 7:15 முதல் 7:30 வரை அறிவிக்கப்படுகிறது. இந்திய மக்கள் 137 கோடிப் பேருள், இந்தியாவில் சமற் கிருதம் பேசுவோர், அரசு கணக்கின்படி, 15,000 பேர் மட்டுமே என்ற நிலை இருக்கும்போது, இந்தியாவின் ஒட்டுமொத்த மக்களும் கேட்குமாறு சமற்கிருதச் செய்தி அறிக்கையை ஒளிபரப்ப வேண்டிய தேவை என்ன? ஆட்சியாளர்களுக்கு இருக்கக்கூடிய இந்து மதவாத இலக்குக்கு ஏற்ப, சமற்கிருத - இந்தி மொழித் திணிப்பைச் செய்து வருகிறார்கள் என்பதுதான் உண்மை.

## தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியில் பதில்

மத்திய ரிசர்வ் படை குரூப்-பி, குரூப்-சி பிரிவுகளில் 780 பணியிடங்களுக்கு, 20.12.2020 அன்று எழுத்துத்தேர்வு நடைபெறும் என்ற நியமன அறிவிப்பு வெளியானது. அந்த அறிவிப்பின்படி, வடஇந்தியாவில் 5, தென்னிந்தியா வில் 2, மேற்கே 1, கிழக்கே 1 என 9 தேர்வு மையங்கள் அமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியானது. தமிழகத் திலும், புதுச்சேரியிலும் தேர்வு மையங்கள் இல்லை என்ற காரணத்தால், தேர்வு மையங்கள் தமிழகத்தில் அல்லது புதுச்சேரியில் அமைக்கப்படவேண்டும் என்று வேண்டு கோள் விடுத்துக் கடிதம் எழுதப்பட்டது. இதற்கு மத்திய

உள்துறை அமைச்சர் நித்யானந்த் ராய் இந்தியில் பதில் கடிதம் அனுப்பினார். உள்துறை அமைச்சகத்திற்கு இது குறித்து எழுதப்பட்ட கடிதத்திற்குப் பதிலே வரவில்லை. இதனால் மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் 2020 நவம்பர் 27-இல் வழக்குப் பதிவு செய்துள்ளார்.

### நடுவணரசின் போக்கு அரசியல் சட்டத்துக்கு எதிரானது

நடுவணரசின் போக்கு இந்திய அரசியல் சட்டத்திற்கு, இந்திய அரசியல் சட்டப் பிரிவு 19 (1) (அ) வழங்கியிருக்கும் உரிமைகளுக்கு முரணானது. 1963-ஆம் ஆண்டு இயற்றப் பட்ட அலுவல் மொழிச் சட்டம் - பிரிவு 3-இல், "இந்தியை ஏற்காத மாநிலங்களுக்கு ஆங்கிலமே அலுவல் மொழி" என்று தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்திய அரசு அதைப் புறக்கணிக்கிறது. துணைப்பிரிவுகள் 1-4, "இந்தியை ஏற்காத மாநிலங்களுக்கு, இந்தி ஆட்சி மொழி என்பது பொருந்தாது" என்றும், "அம் மாநிலச் சட்டமன்றங்கள் இந்தியை ஏற்றுத் தீர்மானம் இயற்றி, நாடாளுமன்ற இரு அவைகளும் அத் தீர்மானத்தை ஏற்கும் வரை, இந்திபேசாத மாநிலங்களில் நிர்வாக விடயங்களில் இந்தி பயன்படுத்தப்படாது" என்றும் உறுதி கூறியுள்ளது. ஆகவே, இந்திய அரசியல் சட்டமும், அலுவல் மொழி குறித்த சட்டமும் (1963) தெளிவாக வரையறுத்திருந்தும், அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு, இந்தி பேசாத மாநிலங்களின் உரிமைகளை நசுக்குவதில் இந்திய நடுவணரசு முனைப்பாக இருக்கிறது.

### பேரிடர் எச்சரிக்கைகூடத் தமிழில் தர மறுப்பு

நடுவணரசு 'நிவர்' புயல் எச்சரிக்கைகள் வெளியிட்ட போதும் (26 நவம்பர் 2020), அவை தமிழில் வெளியிடப் படவில்லை. அந்தந்த மக்களுடைய மொழிகளில் எச்சரிக்கைகள் வெளியிடப்படும்போதுதான், அந்த மக்கள் இயற்கைப் பேரிடர்களை சந்திக்கக்கூடிய நட வடிக்கைகளில் விரைந்து ஈடுபடமுடியும். மிக ஆபத்தான காலகட்டத்திலும்கூட நடுவணரசு இந்தி வெறிகொண்டு அலைகிறது; தமிழில் எச்சரிக்கை செய்யத் தவறியது.

### தமிழ்நாட்டில் தமிழ் இல்லாப் பள்ளிக்கூடங்கள்

தமிழ்நாட்டில் கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் 49 உள்ளன. இவற்றில் 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை இந்தி கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. இப் பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமாகக்கூட இல்லை. இவற்றில் தமிழாசியர்களே கிடையாது. இந்தி மற்றும் சமற்கிருதத்தில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை மாணவர்கள் தேர்வு பெற்று மேல் வகுப்புகளுக்குப் போகமுடியும். இப் பள்ளிகளில் பயிற்றுமொழி இந்தியும், ஆங்கிலமும் மட்டுமே. இப் பள்ளிகளில் படித்தால்தான் உயர் அரசுப்பணிகளில் வாய்ப்புக் கிடைக்கும் என்ற நிலையும் நிலவுகிறது. இப்பள்ளிகள் மாநில அரசுகளைக் கேலி செய்யும் சின்னங்களாகவே விளங்குகின்றன.

### தாய்மொழிக் கல்வியில் அரசே கோளாறு செய்கிறது

தமிழ்நாட்டில் ஏழு வகைக் கல்வி முறைகள் உள்ளன. அரசுப் பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள், ஓரியண்டல் பள்ளிகள், ஆங்கிலோ-தமிழகப் பள்ளிகள், நவோதயா பள்ளிகள், கேந்திர வித்யாலயா பள்ளிகள் என்று ஏழு வகையான கல்வி முறைகள் பின்பற்றப்படுகின்றன. இது கல்வி முறையில் ஒரு வகையான ஏற்றத்தாழ்வு நிலை யையும், மாணவர்களுக்கு மாறுபட்ட கல்வி வாய்ப்பு களையும் வழங்கி வருகிறது.

சென்னை மாகாணத்தை ஆங்கிலேயர்கள் ஆண்ட போது தமிழில் படிக்க வாய்ப்பு இருந்தது. இந்திய விடுதலைக்குப் பிறகு, சென்னை மாகாணத்தைக் காங்கிரசு கட்சி ஆண்டபோதும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியே இருந்தது. ஆனால், அதன் பிறகு ஆண்ட அரசுகள் ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, தமிழ்மொழி வழி வகுப்புகளை மூடிவருகின்றன. ஆங்கில வழிப் பிரிவுகள் என்பவை 2010 முதல் தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளிலேயே தொடங்கப்பட்டுவிட்டன. 2013-14 ஆண்டில் கடலூர் மாவட்டத்தில் 172 அரசு பள்ளிகளில் ஒன்றாம் வகுப்புத் தமிழ்ப் பிரிவே இல்லை. மேலும், 21 நடுநிலைப் பள்ளிகளில் தமிழ்ப் பிரிவே இல்லை என்ற நிலை ஏற்பட்டது. இதேநிலை தமிழ்நாட்டின் பிற மாவட் டங்களிலும் நிலவுகிறது. தமிழ் மக்கள் விரும்பினாலும் கூடத் தமிழ்வழி வகுப்புகளில் சேரமுடியாத நிலை, குறிப்பாக சென்னையில், நிலவுகிறது.

### தமிழ்வழியில் படித்தோருக்கு முன்னுரிமை அளிக்கத் தவறிய தமிழ்நாடு அரசு

தமிழ் வழியில் கல்வி கற்றோருக்குத் தமிழ்நாட்டில் வேலை அளிக்காவிட்டால் வேறு எங்கு வேலை கிடைக் கும்? இதுகுறித்து ஓர் ஒழுங்கற்ற முயற்சியைத் தமிழக அரசு கடந்த காலத்தில் செய்தது.

2010 சூன் 23 முதல் 27 வரை தமிழ்நாடு அரசு செம் மொழி மாநாட்டை நடத்தியது. அதில் 27ஆவது தீர்மானம் "தமிழ்வழிக்கல்வி பெற்றோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும்" என்று கூறியது. அரசு வேலை வாய்ப்பில் 20% முன்னுரிமை ஒதுக்கீடு என்று நிர்ணயித்து, 2010 செப்டம்பர் 7ஆம் தேதி தமிழ்நாடு அரசு ஓர் அவசரச் சட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி "அரசு வேலைவாய்ப்பில் 20% தமிழ்வழியில் கல்வி பயின் றோர்க்கு ஒதுக்கப்படும்" என்று அறிவித்தது; சென்னை உயர்நீதிமன்றத்தில் நகலெடுக்கும் பொறியை இயக்கும் வேலையும் அளித்துத் தொடங்கி வைத்தது. இந்த அவசரச் சட்டத்தின் மூலம் தமிழில் படித்தோருக்கு கீழ்நிலைப் பணிகளை மட்டுமே வழங்க முடிந்தது.

மத்திய அரசுப்பணிகள், மாநில அரசுப்பணிகள், தனியார் நிறுவனங்களின் வேலைகள் என்று ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, மாநில அரசுப் பணிகள் என்பவை மிகக் குறைவானவையே. அவற்றையும் கூட முழுமையாகத் தமிழ்வழியில் பயின்றோருக்கு ஒதுக்க தமிழ்நாடு அரசு முன்வரவில்லை. மாநில அரசின் குறைவான வேலைவாய்ப்பிலும்கூட, 20% மட்டுமே தமிழ்நாடு அரசு ஒதுக்கியது. தமிழ் வழியில் கல்வி பயின்றோருக்கு முன்னுரிமை என்பது நடைமுறையில் நிறைவேற்றப்படவில்லை.

2018-ஆம் ஆண்டு, சட்டக் கல்லூரியில் தமிழ்வழிப் படித்தோருக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டது. அரசு சட்டக் கல்லூரிகளில் 186 உதவிப் பேராசிரியர் இடங்களுக்கான தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தியது. இதில் தமிழ்வழிப் படித்தோருக்கு 20% முன்னுரிமை அளிக்கப்படவில்லை. காரணம், பேராசிரியர்கள் பணிக்கு விண்ணப்பித்தோர் முதுநிலைப் பட்டப்படிப்பைத் தமிழில் பெறவில்லை என்ற காரணத்தை ஆசிரியர் தேர்வு வாரியம் காட்டியது. ஆனால், குறிப்பிட்ட பாடங்களில் முதுநிலைப் பட்டப் படிப்பு தமிழில் இல்லை என்பதே உண்மை. இத்தகைய சூழ்நிலையில் இளநிலை பட்டப் படிப்பு வரை தமிழ்வழியில் கற்றோருக்கு வாய்ப்புகள் அளிக்கவேண்டும். ஆனால், வாய்ப்புகள் அடியோடு மறுக்கப்படுகின்றன. இதேநிலை பொறியியல் கல்லூரிகளுக்கும் ஏற்பட்டது. பொறியியல் கல்லூரிகளில் 187 உதவிப் பேராசிரியர் இடங்களுக்காக தேர்வு செய்யப் பட்டது. அதில் 38 இடங்கள் தமிழ்வழியில் பயின்றவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், முதுநிலை பொறியியல் கல்வி தமிழில் இல்லை என்பதைக் காரணமாகக் கொண்டு, முன்னுரிமை என்பது எவருக்கும் அளிக்கப்படவில்லை. தமிழக அரசின் அரசாணை ஒரு தெளிவில்லாததாக வரைவு செய்யப்பட்டிருப்பதே இக் குழப்பங்களுக்குக் காரணம் ஆகும். பட்டப்படிப்பு வரை தமிழில் படித்தவர்களுக்கு அப் பணியிடங்களை வழங்கியிருக்க வேண்டும். ஆனால், தமிழ்வழியில் படித்தவர்களுக்கு வாய்ப்புகளை மறுக்கும் நோக்கிலேயே ஆசிரியர் தேர்வு வாரியம் செயல்பட்டிருக்கிறது.

### நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகத் தமிழ்மொழி அனுமதிக்கப்படவில்லை

பீகார், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில், உயர்நீதிமன்றங்களில், அம்மாநில மொழியான இந்தி வழக்காடு மொழியாக ஏற்கப்பட்டுள்ளது. இம் மாநிலங்களைப் பொறுத்தவரை, இந்தி என்பது வட்டார மொழி. சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக ஏற்கவேண்டும் என்று 1996-இலும், 2006-இலும், சட்டமன்றத் தீர்மானங்கள் இயற்றப் பட்டுள்ளன. ஜெயலலிதா அம்மையார் தமிழக முதல்வராக இருந்த காலத்திலும் அதற்கான முயற்சிகள் செய்யப் பட்டன. ஆனால் 2012-இல், “தமிழை சென்னை உயர் நீதி மன்றத்தின் வழக்காடு மொழியாக ஏற்க முடியாது” என்று நடுவண் அமைச்சர் பி.பி.சவுத்ரி மறுப்பு தெரிவித்து விட்டார். “உச்சநீதிமன்ற அனைத்து நீதிபதிகள் அமர்வு இசைவு அளிக்கமுடியாது என்று அறிவித்துவிட்டது” என்று காரணம் கூறினார். தமிழை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக ஏற்க மறுப்பது என்பது இந்திய அரசியல் சட்டத்திற்கும், ஆட்சிமொழிச் சட்டத்துக்கும் (1963) எதிரானது.

அரசியல் சட்டம் 348(2), “குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்று, ஓர் ஆளுநர் அம் மாநிலத்தின் ஆட்சி மொழி அல்லது இந்தியை நீதிமன்ற மொழியாக ஏற்கலாம்” என்று குறிப்பிடுகிறது. அதுபோன்றே, ஆட்சிமொழிச் சட்டம் (1963) - பிரிவு-7, “ஆங்கில மொழியுடன் மாநிலத்தின் அதிகாரபூர்வ மொழி அல்லது இந்தி மொழி மாநில நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாகப் பயன்படுத்த ஆளுநர் அங்கீகாரம் வழங்கலாம்” என்று கூறுகிறது.

2006 திசம்பர் 6-ஆம் நாள், தமிழ்நாடு அரசு நிறைவேற்றிய சட்டமன்றத் தீர்மானம், ஆளுநர் ஒப்புதலோடு குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த அப்துல் கலாம் சட்டத்தை உடனடியாக ஏற்கும் வகையில், தமிழ்நாடு முதல்வர் ஆளுநரிடம் சட்டமன்றத் தீர்மானத்தை நேரிலும் அளித்திருந்தார். ஆனால், “முறைப்படி அந்தத் தீர்மானம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்” என்ற விதிமுறைப்படி, மத்திய அரசின் சட்டம் மற்றும் நிதி அமைச்சகத்துக்கும் தமிழக அரசு அனுப்பி வைத்தது. ஆனால், அத் தீர்மானத்தை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கே மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் அனுப்பவில்லை. “உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஒரு வட்டார மொழியை உயர்நீதிமன்ற மொழியாக அறிமுகப்படுத்துவது இப்போது உகந்ததாக இருக்காது” என்று கூறிவிட்டதாக அமைச்சகம் பதில் கூறிப் பிரச்சனையை முடித்துக் கொண்டது.

2004இல் செம்மொழி என்ற தகுதி வழங்கப்பட்ட தமிழ் மொழிக்கு, “நீதிமன்ற வழக்காடு மொழியாகப் பயன்படுத் தக் கூடிய தகுதி இல்லை” என்று நடுவண் அரசு கூறி விட்டது. அப்பட்டமாகத் தமிழ்மொழியை அது புறக்கணிக்கிறது. தமிழர்களை இரண்டாம் நிலைக் குடிமக்களாகக் கருதுகிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

**அரசியல் சட்டமே உரிமைகளை அளித்தாலும் கூட, அதை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய நடுவண் அரசுக்கு விருப்பமில்லை. இதே நிலைதான் ஒவ்வொரு தளத்திலும், தமிழுக்கும், தமிழர்களுக்கும் நடைமுறையாக இருந்து கொண்டிருக்கிறது.**

### வங்கத்தால் முடிந்தது, தமிழகத்தால் முடியவில்லை! ஏன்?

1952-இல், நான்கு மாணவர்களைப் பறிகொடுத்த வங்கம் தன் இறையாண்மையுள்ள தேசத்தை 1971-இல் நிறுவிக் கொண்டதோடு, உலக அளவில் தம் மொழிப்போர் ஈகியர்களுக்கான ஓர் அங்கீகாரத்தை பெறும் வகையில், அவர்கள் இறந்த நாளை உலகத் தாய்மொழி நாளாக அறிவிக்க கோரி அதை வெற்றிகரமாகப் பெற்றுக் கொண்டது.

ஆனால், 1939 முதல் 1968-வரை நீண்ட இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி, ஆயிரம் பேருக்கு மேல் உயிர்களை ஈகம் செய்த தமிழ்நாடு இறையாண்மை அரசியலை நோக்கி நகரவும் இல்லை; தமிழ் மொழியை தமிழகத்தின் ஒரே ஆட்சி மொழியாக ஆக்கிக் கொள்ளவும் இல்லை; உலக அளவில் தமிழக ஈகியர்க்கு ஓர் அங்கீகாரத்தைப் பெறவுமில்லை.

இந்தியை நுழையவிடாமல் தடுக்கிறோம் என்ற பெயரில், ஆங்கிலம் முழுமையாக ஏற்கப்பட்டது; தமிழகத்தின் கதவு அகலமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்தி என்ற எசமான மொழிக்கு இணையாக, ஆங்கிலம் என்ற அந்நிய மொழியைப் பயன்படுத்துவதை ஏற்றுக்கொண்டால் அதுவே போதும் என்று, பெரிய விலை கொடுத்து, ஒரு சிறிய சலுகையைப் பெற்றுக் கொண்ட தோடு மனநிறைவு எய்தி, இந்தியத்துக்கு இணங்கி, அடக்க ஒடுக்கமாக, பம்மிப் பதுங்கி அரசியல் வாழ்வு நடத்திக் கொண்டிருக்கிறது தமிழினம்.

**கூடுதல் அபாயம் சூழ்ந்து கொண்டிருக்கிறது!**

இப்போது 1938-ஐ விடவும், 1965-ஐ விடவும், தமிழ் மொழி மிகப்பெரும் அபாயக் கட்டத்தில் சிக்கி இருக்கிறது.

இனிவரும் காலத்தில் தமிழர்களின் மொழி உரிமை எஞ்சி வாழுமா என்ற கேள்வி எழுகிறது.

இந்தியாவின் ஒரே ஆட்சி மொழி இந்தி என்றும், இந்தியர்களின் புனித மொழி, பண்பாட்டு மொழி, தேசிய அடையாளம் சமற்கிருதம் மட்டுமே என்றும் கூவிக் கொண்டிருக்கிற, இந்து ராஷ்டிரத்தைப் படைப்பதை தம் வரலாற்று இலக்காகக் கொண்டிருக்கக்கூடிய இந்துத்துவ மத வெறி அரசு, எதிர்கால இந்து ராஷ்டிர இந்தியாவை வடிவமைப்பதற்கான கல்விக்கொள்கையை உருவாக்கி உள்ளது.

புதிய தேசியக் கல்விக் கொள்கை என்பதை உருவாக்க அமைக்கப்பட்ட கஸ்தூரிரங்கன் குழுவின் அறிக்கை, ''நடுநிலைப் பள்ளி வரை இந்தி, ஆங்கிலம், தொடர்புடைய மாநிலத்தின் மொழி ஆகியவற்றை உள்ளடக்கிய மும் மொழிகளையும் கொண்ட பாடத்திட்டம் கட்டாயமாக்கப் படவேண்டும்'' என்று இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறைக்குப் பரிந்துரை செய்தது.

இப்போதைக்கு மாநில அரசுகள் இதை மறுத்துத் தங்கள் நிலைபாட்டைக் கூறியிருந்தாலும், மாநில அரசு களை வழிக்குக் கொண்டுவரும் பாசிச வழிமுறைகளை இந்திய அரசு அறிந்தே வைத்திருக்கிறது.

**தமிழர்கள் வரலாற்றிலிருந்து பாடம் கற்க வேண்டும்**

தன்னுடைய மொழியில் படிக்கவும், அம் மொழியில் படித்தால் வேலைவாய்ப்பை உத்தரவாதப்படுத்தவும், வீட்டிலும், நாட்டிலும், உயர்நீதிமன்றத்திலும், வழிபாட்டுத் தளங்களிலும், பயன்படு மொழியாகத் தமிழை தங்களால் ஆக்கவும் முடியாது என்றால், அது ஓர் அடிமைப்பட்ட இனத்திற்கான அடையாளம்; தாங்கள் ஓர் அடிமைப்பட்ட இனம் என்ற உண்மையைத் தமிழர்கள் கடந்தகால வரலாற்றிலிருந்து உணர வேண்டும்.

**தமிழர்கள் தாங்கள் விடுதலை பெற்ற மக்கள் என்ற கற்பனை வாழ்விலிருந்து முதலில் மீளவேண்டும்.**

**மொழி, இன உரிமைகளை மறுக்கும் இந்தியத்தின் கீழ் தங்கள் நிலை எவ்வளவு பரிதாபகரமான நிலையில் உள்ளது என்பதை, எவ்வித வெட்க உணர்வும் கொள்ளாமல், அடுத்த தலைமுறைக்கு உணர்த்த வேண்டும். ஏனெனில், நம் போராட்டங்களைத் தொடர வேண்டியவர்களாக அவர்கள் தான் இருக்கிறார்கள்.**

**தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பாடம் வங்கத்திடம் இருக்கிறது!** ●

## வெற்றிவாகைச் சித்தார்த்தன்

தண்டூன்றும் கிழவர்கள், பிணியாளர்கள்,
சாப்பிணங்கள், துறவோர்கள் ஆகியோரைக்
கண்டு, ஊன்றும் உலகியலை உணர்ந்துகொண்டால்
கவின்மகனே (சித்தார்த்தன்) துறவேற்பான் என்று
மன்னன் (சுத்தோதனன்)
வண்டூன்றும் மலர்ச்சோலைப் போன்ற மூன்று
மாளிகையில் அரண்மனைக்குள் வாழ வைத்தான்
மொண்டூற்றும் எழில்மேனிப் பாவையர்கள்
மொய்த்தின்பக் கலைவிருந்தில் 'மகனைத்' தோய்த்தார்.

மணம்புரிந்து (யசோதரை) மகன்பெற்ற (இராகுலன்)
சித்தார்த்தன்தான்
மண்ணுலகில் துயர்க்காட்சி பலநாள் கண்டு,
'கணம் நடந்து காலமோட மாந்தன் வாழ்வில்
கவலைவரும்; பிணிமூப்புச் சாவு நேரும்.
பணம்குவித்து மேலவற்றைத் தடுக்கும் ஆற்றல்
மன்னருக்கும் இல்லை'யெனும் உண்மை ஆய்ந்தான்
உணங்குமிந்த உலகியலில் நீங்கி இன்ப
உயரறிவின் ஒளிநெறியைத் தேடத் தேர்ந்தான்.

'வெண்கொற்றக் குடையாட்சி விடுத்துச் செல்வன்
வெங்கானம் செல்வானோ' என்று மன்னன்
கண்கொற்ற எழிற்பெண்கள் சூழ வைத்தான்
கலைநுகர்வை அவர்களீந்தும் துயிலில் ஆழ்ந்தான்
பெண்சுற்றம் அதுகண்டு தூங்கலானார்
பின்னிரவில் திருமகனே விழித்துப் பார்த்தான்.
'விண்பற்றும் அவ்அழகியரா இவர்கள்?'
வாய்பிளந்து ஒழுகுமெச்சில் விகாரம் கண்டான்.



நீருக்கும் நுரைவாந்தி உண்டு; நீரில்
நின்றுள்ள குமிழிக்கும் நொடிச் சாவுண்டு
பாருக்குள் மானிடனும் அவைபோலாவான்
பாழுலகில் நிலைத்திருக்கப் 'புதிது' காண
யாருக்கும் சொல்லாமல் (அவ்) இரவிலேயே
அரண்மனையை அரசமகன் நீங்கிச் சென்றான்.
ஊருக்கு வெற்றி தருமுன்னே தன்னுள்
ஊறழித்து வெற்றி காணத் துறவு பூண்டான்.

உடல்வருத்தி உணவொழித்துத் துறவோர் கொள்ளும்
ஒருநோற்றல் வழிச்செலாது தனது உள்ளக்
கடல் எழுப்பும் மாசு அலைகள் முற்றும் நீக்கிக்
கடுந்தூய்மைக் கண்டபின்பு, காட்டில் தேடி
அடல்தரும் ஓர் அரசமரம் (போதிமரம்) கீழமர்ந்து
அகம்நிறுத்தி ஒருங்கொன்றி ஆழ்ந்து ஆழ்ந்து
தொடர்இரவின் முழுநிலவின் கடை யாமத்தில்
தூயஒளிப் 'புத்த பதவி' எய்தி வென்றான்.

இருபத்தொன்பது அகவையில் துறவு பூண்டு
இருமூன்று ஆண்டுகளாய் அலைந்து காட்டில்
பொருந்துமொரு தன்வழியில் நோற்று நோற்று,
போதிசத்துப் பதவிகண்டு, சங்கம் தோற்றி
அருநெறிகள் நாலிரண்டும் (எட்டு) வாய்மை நான்கும்
அருளி மும்மணிக் கொள்கை நிறுவி என்றும்
ஒருகடவுள் சுட்டாது மானுடத்தை
உய்வித்த முதல் சிந்தனையாளன் புத்தன்!

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**



**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

வாணியம்பாடி நகரச் செயலாளர்

***ஒய்வறியாக் களப்பணியாளர்***

# தோழர் சீனி. பழனி

**(10.05.1971 - 01.02.2021)**

**2021**
**மார்ச்**
**14** பிற்பகல் 2 மணி
**ஞாயிறு**

**சீனி.பழனி இல்லம்**
மேட்டுப்பாளையம்
வாணியம்பாடி



## படத்திறப்பு - நினைவேந்தல்
## குடும்பப் பாதுகாப்பு நிதியளிப்பு



*வரலாறு ஆனார்..!*

## தோழர் சீனி. பழனி

*பெரியார் – அம்பேத்கரின்*
*கொள்கைக்குன்றை இழந்தோம்..!*
*அறிஞர் ஆனைமுத்துவின்*
*பெருந்தொண்டரை இழந்துவிட்டோம்..!*

*மார்க்சியப் பெரியாரியப்*
*பொதுவுடைமைக் கட்சியின்*
*வாணியம்பாடி நகர*
*அரண் நீ !*
*சாதி – மதத்தில் ஊறிய*
*பிற்போக்காளருக்கு*
*முரண் நீ !*
*மாற்றுக்கட்சித் தோழர்களும்*
*விரும்பும் பழம் நீ*
*தோழர் சீனி பழனி!*

*உன் மறைவு*
*கொல்லை நோயினும்*
*பெருந்துயர்..!*
*உன் அரும்பாட்டை*
*நிறுத்திக் கொண்டாய்*
*தமிழ்க் குமுகத்துக்குக்*
*பேரிழப்பு..!*

*வைகறை மலரின் முகம்*
*தண்குளிர்ப் பனியின் அகம்*
*தெளிந்த ஊற்றின் பேச்சு*
*பகுத்தறிவைச் சுவாசித்த மூச்சு..!*

*எளிமை வாழ்விலும்*
*வாய்மை தவறாதவர்*
*வளைந்து எந்நிலையிலும்*
*விலை போகாதவர்..!*

*மார்க்சியத்தை உள்வாங்கிய*
*கடும் போராட்டக்காரர்*
*பெரியாரை அடியொற்றி*
*வாழ்ந்த ஆர்ப்பாட்டக்காரர்*
*அம்பேத்கரின் சிந்தனையில்*
*உறுதிமிக்க களப்பணியாளர்..!*

*கட்சியே குடும்பமாய்..*
*இயக்கத் தோழர்களையே*
*உறவுகளாய்க் கொண்ட*
*சுயவாழ்வு வாழாத*
*சுயமரியாதைக் காரர்*
*முதிராச் சாவடைந்தார்..!*

*கீழுலகம் மேலுலகம் என்ற*
*வழமைக் கற்பிதத்தை உடைக்கும்*
*உறங்குவதே சாக்காடு என்ற*
*வள்ளுவன் வாய்மொழியை*
*வழிமொழிந்து..*

*முற்போக்கருக்கு உரைக்க*
*பிற்போக்கர்களும் கரைய*
*உடற்கொடை வழங்கி*
*மருத்துவ அறிவியலுக்கு*
*மெய்யியல் புத்தகமானார்*
*வரலாறு ஆனார் சீனி பழனி..!*

– நா. மதனகவி –



## *சீரிய சிந்தனையாளர்*
## *சிறந்த களப்பணியாளர்*
## தோழர் சீனி. பழனி...

- திருப்பத்தூர் மாவட்டம். வாணியம்பாடி. மேட்டுப்பாளையம் திரு.சீனிவாசன் - பாப்பாத்தி இணையரின் தலைமகன்
- பத்தாம் வகுப்பு வரை பயின்றவர்
- சீனி. பழனி - இலதா இணையருக்கு மூன்று பிள்ளைகள் - ப. தமிழருவி, ப. தமிழ்க்குடிமகன், ப. தமிழிசை
- இருசக்கர வண்டியிலேயே இறுதிவரை ஆடை வணிகம் செய்தவர்
- இளமைக் காலத்தில் பிற்போக்குப் பக்தியில் ஊறித் திளைந்தவர்; பல அரசியல், இலக்கியக் கூட்டங்களில் பங்கெடுத்ததன் விளைவாக பகுத்தறிவுப் பாதைக்குத் திரும்பினார்
- பெரியாரியல் அறிஞர் தோழர் வே. ஆனைமுத்துவின் கொள்கைப் பணிகள் மீது ஈர்ப்புக் கொண்டார்
- 2007-இல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி (மா.பெ.பொ.க) உறுப்பினராக இணைந்தார்; 2011-இல் ஆலங்காயம் ஒன்றியச் செயலாளர்; 2018 முதல் வாணியம்பாடி நகரச் செயலாளராய்க் களப்பணியாற்றினார்
- ஒவ்வோராண்டும் சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீடு மற்றும் மாநாடுகளுக்கு இரண்டு மாதத்திற்கு முன்பே திட்டமிட்டு விளம்பரங்கள், நன்கொடை திரட்டும் வேலைகளைத் தொடங்கிவிடுவார்...
- குடும்பம் வறுமையில் வாடியபோதும் தன்னைப் பொதுவாழ்வில் இணைத்துக்கொண்டு தமிழ்நாட்டு உரிமைக்காகவும் தமிழரின் உரிமைக்காகவும் பல போராட்டங்களில் பங்கெடுத்தவர்...
- புதிய வேளாண் திருத்தச் சட்டங்களை எதிர்த்தும், தமிழ்நாடு நாள் விழா கொண்டாடியதற்காகத் தோழர் பொழிலன் உள்ளிட்ட தோழர்கள் சிறைப்படுத்தப்பட்டதைக் கண்டித்தும் நடைபெற்ற போராட்டங்களிலும் பங்கேற்றுக் கைதானவர்
- மாற்று கட்சித் தோழர்களோடும் அன்போடு பழகி, அவர்கள் முன்னெடுக்கும் நிகழ்வுகளிலும் போராட்டங்களிலும் பங்கெடுத்துவந்த பண்பாளர்
- சீரிய சிந்தனையாளர், சிறந்த களப்பணியாளர் தோழர் சீனி. பழனி மறைவு தமிழ்ச் சமூகத்திற்கே பேரிழப்பு..!

### முன்னிலை

**மேட்டுப்பாளையம் ஊர் நிர்வாகிகள்**

**கோவி. இரவி** நாட்டாண்மை • **கா. இளங்கோவன்** உதவிநாட்டாண்மை
**அ. ஜேபியார்** கணக்குப்பிள்ளை • **சே. மதியழகன்** பூசாரி
**மோ. விக்னேசு** பூசாரி • **இராசேந்திரன்** அழைப்பாளர்

**மற்றும்**

பெரியார் தொண்டர் **கேசவன்** • புலவர் **மு.சு. தங்கவேலன்** • தோழர் **அற்புதராசு**
ஆசிரியர் **சீனி. சிவஞானம்** • தோழர் **கா. புருசோத்தமன்** • தோழர் **ந. வேலு**
வழக்குரைஞர் **தேவக்குமார்** • தோழர் **முகமது நயீம்** • தோழர் **மு. திருப்பதி**

### தலைமை

தோழர் **நா. மதனகவி** திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க

### படத்திறப்பு

தோழர் **சா. குப்பன்**
தலைமைக்குழு உறுப்பினர், மா.பெ.பொ.க

### நிதியளிப்பு

தோழர் **மோ.சி. சங்கர்**
வேலூர் மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க

### புகழுரை

தோழர் **சி. பெரியசாமி**
துணைப் பொதுச்செயலாளர், மா.பெ.பொ.க

தோழர் **தி. துரைசித்தார்த்தன்**
துணைப் பொதுச்செயலாளர், மா.பெ.பொ.க

முனைவர் **முத்தமிழ்**
தலைமைக்குழு உறுப்பினர், மா.பெ.பொ.க

தோழர் **இரா. திருநாவுக்கரசு**
புதுச்சேரி மாநிலச் செயலாளர், மா.பெ.பொ.க

தோழர் **ந. செவ்வேள்**
துணைப்பொதுச்செயலாளர், த.ஒ.வி.இ

தோழர் **இரா.ப. சிவா**
வேலூர் மாவட்டச் செயலாளர், தி.வி.க

தோழர் **கோவேந்தன்**
தொகுதிச் செயலாளர், வி.சி.க

தோழர் **கோ. அன்புச்சேரன்**
நகரத் தலைவர், திராவிடர் கழகம்

தோழர் **சண்முகம்**
மாவட்ட ஒருங்கிணைப்பாளர், மக்கள் பாதை

மருத்துவர் **கு. ஞானசேகரன்**
மருத்துவரணிச் செயலாளர், வி.சி.க

தோழர் **இரா. முல்லை**
மாவட்டச் செயலாளர், தமிழக விவசாயிகள் சங்கம்

புலவர் **அ. சகாதேவன்**
தலைவர், தமிழ்ச் சிந்தனையாளர் மன்றம்

தோழர் **அரங்க. சிவலிங்கம்**
தமிழக வாழ்வுரிமைக் கூட்டமைப்பு

தோழர் **ஏ.சி. வெங்கடேசன்**
பொதுச்செயலாளர், த.அ.வி.ச.ஒருங்கிணைப்புக்குழு

தோழர் **உரூபன்**
பொதுச்செயலாளர், தமிழ்நாடு தொழிற்சங்க நடுவம்

தோழர் **மு. பிரதாபன்**
புரட்சிகர இளைஞர் முன்னணி

தோழர் **இராசேந்திர பிரசாத்**
தலைமைக்கழகப் பேச்சாளர், தி.மு.க

தோழர் **தென்றல் தமிழரசன்**
மாவட்டத் துணை அமைப்பாளர், தி.மு.க.(ஆ.தி.ந)

**நன்றியுரை : சீனி.ப. தமிழ்க்குடிமகன்**

# தமிழ்த்தேச விடுதலைத் திசைவழிக்கு எதிராய் பார்ப்பனியத்தின் உள்ளடி வேலைகள்

● பொழிலன் ● 2



பார்ப்பனிய அதிகாரத்தை நிறுவும்படியான அதிகாரம் வாய்ந்த ஓர் அரசை உருவாக்கும் நோக்கத்தில் 1925-இல் தோற்றுவிக்கப்பட்ட ஆர்எஸ்எஸ்-இன் செயல்பாடுகளை, அதன் தொடக்ககாலத்திலிருந்து இன்றைய காலம் வரை நான்கு வகையாகப் பிரித்து அறியலாம் :

1. **காந்தி கொலை செய்யப்பட்ட காலம்வரை**
2. **காந்தி கொல்லப்பட்ட காலத்திலிருந்து நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட காலம்வரை**
3. **நெருக்கடி கால நிலையிலிருந்து பாபர் மசூதி இடிக்கப்பட்ட காலம்வரை**
4. **பாபர் மசூதி இடிக்கப்பட்ட காலத்திலிருந்து மோடியின் இப்போதைய ஆட்சிக் காலம் வரை**

இந்தக் காலங்களில் அதன் இலக்கு நோக்கி மக்களை எப்படியெல்லாம் திரட்டினார்கள் என்பதும், எல்லா அமைப்புகளுக்குள்ளும் எப்படி ஊடுருவினார்கள் என்பதும், அவற்றையெல்லாம் எப்படித் தன்வயப்படுத்தினார்கள் என்பதும் நாம் அறியப்பட வேண்டிய முகாமைச் செய்திகள்.

### காந்தி கொலை செய்யப்பட்ட காலம் வரை

ஆர்எஸ்எஸ் தொடங்கப்பட்ட 1925ஆம் ஆண்டு முதல் 1937 வரை எட்கேவர் காங்கிரஸ் கட்சியிலும் இயங்கிக்கொண்டு இருந்தார் என்பது முகாமையானது. எனவே, அந்தக் காலங்களில் காங்கிரசோடு தொடர்பு கொண்டிருந்த பொதுவுடைமைக் கட்சியினர் சிலரும்கூட ஆர்எஸ்எஸ்-உடன் தொடர்புடையவர்களாகவே இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மராட்டியக் கொங்கனிப் பகுதிகளைச் சார்ந்த சித்பவன பிராமணர்களான திலகர், சாவர்க்கர் உள்ளிட்டோரின் தொடர்பில் நாக்பூரைச் சேர்ந்த பிராமணர்களே ஆர்எஸ்எஸ்-க்கான வித்தாக இருந்தாலும், அவர்களில் பெரும்பான்மையோர் கல்கத்தாவில் விவேகானந்தா நிறுவனங்களிலும் அங்குள்ள ஆசிரமங்களிலும் பயிற்சி பெற்றவர்களாக இருந்தனர்.

1938-இல் சாவர்க்கர் எழுதிய ‘நாம் அல்லது நமது தேசியத்தின் விளக்கம்’ எனும் நூலும், எட்கேவரின், ‘தேசம்’ என்பதை இந்துத்துவத்தோடு தொடர்புபடுத்திய ஆய்வும் ஆர்எஸ்எஸ் பேசக்கூடிய அடிப்படைக் கருத்துகளை வலுப்படுத்தி விளக்கப்படுத்தின.

சாவர்க்கர் தொடங்கியிருந்த ‘இந்துமகா சபை’யும், ஆர்எஸ்எஸ்-உம் இணைந்தே பல வேலைத்திட்டங்களை வகுத்துக்கொண்டன.

சித்பவனப் பார்ப்பனர்கள் எங்கெல்லாம் அரசு வேலைகளில் இருக்கிறார்களோ அங்குள்ளவர்களெல்லாம் ஆர்எஸ்எஸ்-இல் இணைக்கப்பட்டனர். அரசின் அதிகாரத் துறைகளில், படைத் துறைகளில், காவல் துறைகளில் உள்ளீடாக நுழைந்தே ஆர்எஸ்எஸ் வளர்க்கப்பட்டது.

அமைச்சர்கள் அளவில் இருந்த காங்கிரசுக்காரர்களுள் பலரும் ஆர்எஸ்எஸ்-இன் உறுப்பினர்களாக இருந்தனர்.

எட்கேவர் மறைவுக்குப் (1940) பிறகு, நாக்பூரைச் சேர்ந்த பிராமணர் கோல்வால்கர் கல்கத்தா விவேகானந்த ஆசிரமத்தின் வழிகாட்டலில் செயல்பட்டார். 1939-இல் ஆர்எஸ்எஸ்-இன் பொதுச் செயலாளராக இருந்த அவரின் தலைமையில் இன்னும் கூடுதலான வேலைகள் நடந்தன.

1942-இல் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் ஆர்எஸ்எஸ் ஈடுபடாமல் ஒதுங்கியது மட்டுமன்றி, ஆங்கிலேயருக்கு ஆதரவாகப் பல வேலைகளைச் செய்தது என்பதும், பலரையும் காட்டிக்கொடுத்தது என்பதும் வரலாற்றில் அறியப்படவேண்டிய செய்திகள்.

ஏறத்தாழ ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட வகையில் எழுச்சியோடு அப் போராட்டம் நடைபெற்றிருந்தபோதிலும், அப்

> “
> **1942-இல் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் ஆர்எஸ்எஸ் ஈடுபடாமல் ஒதுங்கியது மட்டுமன்றி, ஆங்கிலேயருக்கு ஆதரவாகப் பல வேலைகளைச் செய்தது; பலரையும் காட்டிக்கொடுத்தது**
> ”

போராட்டச் செயல்பாடுகளில் ஆர்எஸ்எஸ் ஈடுபடாமல் ஒதுங்கி இருந்தது.

அந்த இயக்கத்திற்குப் பின்னர் வன்மையாக இசுலாமிய எதிர்ப்பை அதிகப்படுத்தி இந்துக்கள் என்கிற பார்வையை விரைவுபடுத்தியது ஆர்எஸ்எஸ்.

பல பகுதிகளாக இருந்த அரசுப் பகுதிகளையெல்லாம் இந்தியாவிற்குள் இணைக்க, காங்கிரசிலிருந்த படேலின் முயற்சிக்கு ஆர்எஸ்எஸ்-இன் துணை அதிகமாக இருந்தது கவனிக்கத்தக்கது.

காசுமீரை இணைப்பதற்கு, காசுமீர் மன்னர் அரி சிங்கை 1947-இல் சந்தித்துப் பேசி இணைக்கிற வேலைகளில் கோல்வால்கரையே பட்டேல் ஈடுபடுத்தினார் என்பதும் அறியப்பட வேண்டியது.

1948 சனவரி 30ஆம் நாள் இந்து மகா சபை - ஆர்எஸ்எஸ்-இன் திட்டமிடலில் காந்தியைக் கோட்சே சுட்டுக் கொன்றதன் பின், பிப்ரவரி மாதத்தில் ஆர்எஸ்எஸ் தடைசெய்யப்பட்டது.

காந்தியை ஆர்எஸ்எஸ் கொல்லவில்லை எனப் பொய்கூறியது மட்டுமன்றி, தடைசெய்யப்பட்டபின் ஆர்எஸ்எஸ் தலைவர்கள் பலர் பதுங்கிக்கொண்டனர். பலர் அடிபணிந்து காங்கிரசுத் தலைவர்களிடமெல்லாம் மன்றாடித் தடைநீக்கம் செய்யக் கேட்டுக்கொண்டனர்.

1949 சூலை 11ஆம் நாள் தடைநீக்கப்படுவதற்கு முன்பாக, பட்டேல் கோல்வால்கரைச் சந்தித்துப் பேசியது கவனிக்கப்படவேண்டியது. ஆர்எஸ்எஸ்-ஐப் பாதுகாப்பதில் பட்டேல் மிகமிக அக்கறை கொண்டு தொடர்ந்து போராடியதும் அறியப்பட வேண்டியது.

ஆக, காங்கிரசுக் கட்சியின் தலைவர்கள் சிலரைத் தன் உறவுக்குள் வைத்துக்கொண்டே அரசின் நிர்வாகத் துறைகளிளெல்லாம் ஆர்எஸ்எஸ் தனக்கான ஆதரவாளர்களை அமர்த்திக்கொள்ளும் வகையில் ஊடுருவியது.

### காந்தி கொல்லப்பட்ட காலத்திலிருந்து நெருக்கடி காலநிலை அறிவிப்பு வரை

ஆர்எஸ்எஸ்-இன் திட்டங்களுக்கு ஏற்ப அரசின் அனைத்துத் திட்டங்களும் பல ஊர்களின் பெயர்கள் எல்லாமும் சமசுக்கிருதப் பெயர்களாகவும் வைதீகப் பெயர்களாகவும் சூட்டப்பட்டன.

காந்தி கொலை செய்யப்பட்டதற்குப் பின், ஆர்எஸ்எஸ் தடைசெய்யப்பட்டு மீண்டும் தடை நீக்கம் செய்யப்பட்ட பின், சில காலம் ஆர்எஸ்எஸ் வளர்ச்சி இல்லாமல் இருந்தது. முழு நேரப் பணிகளில் இருந்த பலரும் விலகி இருந்தனர் என்றாலும், அதன் கொள்கை அளவிலிருந்து அவர்கள் விலகிவிடவில்லை.

அவர்களுள் பலர், ஆர்எஸ்எஸ் தொடர்புடைய கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட பள்ளி, கல்லூரிகளைத் தொடங்கிச் செயல்பட்டனர்.

இதனால், தேர்தலில் ஈடுபாடு கொள்வதற்கான திட்டத்தை ஏற்று ‘ஜனசங்கம்’ கட்சியை அதற்காக ஈடுபடுத்தி 1952 தேர்தலில் அக்கட்சி பங்கேற்றது.

அதற்கு முன்பாக 1949-இல் மாணவர்களுக்கு என்று ‘அகில பாரத்திய வித்தியார்த்தி பரிசத்’தும், 1955-இல் ‘பாரதிய மஸ்தூர் சங்க’மும் 1952-இல் ‘வனவாசிகள் கல்யாண் ஆஷ்ரம்’ எனும் அணி அமைப்புகளும் கட்டப்பட்டு வேலைகள் நடந்துவந்தன.

இதற்கிடையில் 1960-இல் கோல்வால்கர் ‘சிந்தனைக் கொத்து’ நூலைக் கொண்டுவந்து, அதனடிப்படையில் கொள்கையைப் பரப்பியது; மொழி வழியாக மாநில அமைப்புகள் உருவெடுப்பதை ஆர்எஸ்எஸ் கடுமையாக எதிர்த்தது; இந்தியைத் தேசிய மொழியாக அறிவிக்க வலியுறுத்தியது; இந்துக்களின் பாதுகாப்புக்காக அறிக்கைகளை விட்டது என அதன் பணிகள் நடந்தன.

1973-இல் கோல்வால்கர் மறைவுக்குப்பின் தேவரசு பொறுப்பேற்ற நிலையில் பல புதிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

1952, 1957, 1962, 1971 தேர்தல்களில் பாரதீய ஜன சங்கத்தின் வளர்ச்சி நிலையையும், அவை எங்கெங்கு வளர்ந்தன என்பதையும் கவனிக்க வேண்டும்.

| ஆண்டு | நா.உ.எ | காங்கிரசு | பா.ஜ.ச | மாநிலங்கள் |
|---|---|---|---|---|
| 1952 | 482 | 371 | 1 | உத்திரப்பிரதேசம் |
| 1962 | 494 | 361 | 5 | உபி (2), மகாராட்டிரம் (2), இந்து மகாசபை (1) |
| 1967 | 520 | 283 | 10 | உபி (7), மத்தியப்பிரதேசம் (3) |
| 1971 | 518 | 352 | 34 | மபி (10), உபி (12), ராசசுதான் (3), தில்லி (6), பஞ்சாப் (1), சண்டிகர் (1), பீகார் (1) |

* நா.உ.எ – நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை,
பா.ஜ.ச – பாரதிய ஜன சங்கம்

அக்காலத்தில் ஆர்எஸ்எஸ்-இன் கொள்கைப் பரப்பு இதழாக 1942-இல் ‘தி ஆர்கனைசர்’ ஆங்கில இதழும், 1948-இல் ‘பஞ்ச சன்யா’ எனும் இந்தி இதழ் கிழமை இதழாகவும் கொண்டுவரப்பட்டது.

இந்தி இதழின் ஆசிரியராக வாஜ்பாய் இருந்தார்; இப்போது அதன் ஆசிரியராகத் தருண் விஜய் பொறுப்பேற்று நடத்தி வருகின்றார்.

காங்கிரசில் நேருவுக்கு எதிராக இருந்தாலும் பட்டேலும், இலால்பகதூர் சாஸ்திரியும் பிறரும் ஆர்எஸ்எஸ்-உடன் நெருக்கமாகவே இருந்தனர்.

1947-இல், தில்லி சட்டம் - ஒழுங்கைச் சரிசெய்ய தில்லி படைத்துறைத் தலைவர், ஆர்எஸ்எஸ்-ஐச் சந்தித்ததும், 1949-இல் ஆர்எஸ்எஸ் தடை நீக்கப்படுவதற்கு முன்பும் பின்பும் பட்டேலைப் பலமுறை சந்தித்துப் பேசியதும், 1963-இல் குடியரசு நாள் அணிவகுப்பில் ஆர்எஸ்எஸ் தொண்டர் களும் அழைக்கப்பட்டு பங்கேற்கிறபடி இலால்பகதூர் சாஸ்திரி செய்ததும், நேருவின் மறைவுக்குப் பின் சாஸ்திரி இந்தியத் தலைமை அமைச்சரானதால் ஆர்எஸ்எஸ் மகிழ்வு தெரிவித்து உறவு கொண்டாடியதும், 1965-இல் சாலைப் போக்குவரத்தை ஒழுங்குசெய்ய ஆர்எஸ்எஸ் தொண்டர்களை இந்திய அரசே அமர்த்தி யதும், ஆர்எஸ்எஸ் அரசு அதிகாரங்களில் மட்டுமல்லாது தேர்தல்களில் வெற்றி அடைகிற வகையில் பல வேலைகள் செய்துகொள்ளவும் பயன்பட்டது.

1963-இல், நேரு மறைவுற்ற ஆண்டு ஓர் ஊக்கமான நிகழ்வாக அதற்கு அமைந்தது.

இலால் பகதூர் சாஸ்திரி துணையில் பெருமளவில் ஆர்எஸ்எஸ் வளர்ந்தது.

விவேகானந்தர் நூற்றாண்டு விழாவை எல்லாப் பகுதிகளிலும் முன்னெடுக்கிற நிகழ்வின் நிழலில் ஆர்எஸ்எஸ் இந்திய ஒன்றியத்தின் எல்லா மாநிலங் களிலும் ஊடுருவத் தொடங்கியது.

விவேகானந்த கேந்திரா எனும் அமைப்பைத் தொடங்கி அதற்குள் பிற கட்சியினரை இணைப்பதுபோல் இணைத்து அவர்களைப் படிப்படியாக ஆர்எஸ்எஸ் தொடர்பினராக ஆக்கியது.

இந்நிலையில், இந்திராகாந்தி தலைமை அமைச்சராக இருந்தபோது நடந்த ஊழல்களும், அவரின் அதிகார வெறிப் போக்குகளும் மக்கள் நடுவில் எதிர்ப்பை உரு வாக்க, காங்கிரசை எதிர்த்துக் களம் காணத் திட்டமிட்டார் செயப்பிரகாஷ் நாராயணன்.

பிரசா சோசலிசுட் கட்சி - (செயபிரகாஷ் நாராயணன் தலைமையிலான கட்சி), லோக்தள், பழைய காங்கிரசுக் கட்சி (காமராசர் மறைவுக்குப் பின்), சுதந்திராக் கட்சி (இராஜாஜி மறைவுக்குப்பின்), பாரதிய சன சங்கம் (ஆர்எஸ்எஸ்-இன் தேர்தல் கட்சி) ஆகியவற்றை இணைத்து உருவாக்கிய ‘ஜனதாக் கட்சி’ காங்கிரசை எதிர்த்துத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றது.

இந்திரா காந்தியின் அரம்பப்போக்கை வீழ்த்திட இந்த அளவு ஒருங்கிணைவு நடந்ததும், அதில் பாரதிய ஜன சங்கம் இணைந்ததும், ஆர்எஸ்எஸ்-ஐ ஒரு சிறந்த இயக்கம்போல் மக்களிடையே காட்டிடப் பயன்பட்டது. அதுமட்டுமன்றி ஆர்எஸ்எஸ்-இன் தலைவர் தேவரசின் 1964ஆம் ஆண்டின் பேச்சு, ஆர்எஸ்எஸ்-ஐப் புதிய முகத்தில் மக்களிடம் காட்டியது.

இப்படியாக வாய்ப்பியத் தன்மையில் உருமாறி இயங்குவதும், மாற்றி மாற்றிப் பேசுவதும் வைதீகப் பார்ப்பனியத்தின் இயல்பு என்பதை மக்கள் எளிதே இன்றுகூட உணரமுடியாத சூழலில், அப்போது உணர்ந் திருக்க வாய்ப்பில்லை.

அவருடைய பேச்சில்,

> *“தீண்டாமை தவறு இல்லை என்றால் இந்த உலகத்தில் எதுவுமே தவறில்லை*

என்றும்,

> *“புதிய கண்டுபிடிப்புகள் வந்துவிட்டாலும் அறிவியல் வந்துவிட்டாலும் ராகுவையும் கேதுவையும் கிரகணத்தின் போது சூரியன் விழுங்குகிறான் என்று நம் பள்ளிப் பாடப் புத்தகங்களில் இப்போதும் எழுதிக் கொண்டிருக் கின்றனர்... இருக்கலாமா? நிலை மாறிவிட்டது; அதுபோலவே சூழ்நிலையும் முகாமையான தாகிவிடுகிறது... மரபுப் பெருமைகள் சமகால அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப் படுவதாக இருக்கவேண்டும்”*

என்றும்,

> *“பல நூற்றாண்டு களாக நம் தலித் சகோதரர்கள் மிக அதிகமாகத் தொல்லைகள் பட்டு வரு கின்றனர். அவற்றைக் குறித்து நம் மனங்களில் வலி உண்டாகிறது, சமன்மை இன்மையை மாற்றும் வகையில் நம் மனநிலை இருக்க வேண்டும்...*
>
> *அடுத்து இந்து தேசத்தை ஒருங்கிணைத்தாக வேண்டும். இன்று ஒருங்கிணைப்பு மிகத் தேவையானது. நான்கு வர்ணமுறை இன்றும் தொடர்ந்து வருவது தொடர்பான என்னுடைய நிறை வின்மை அச்சத்தில் முளைத்ததுதான்...*
>
> *இந்துக் குமுகத்தில் இது கடைப்பிடிக்கப் பட்டால் அது தீண்டாமையை ஒழிக்கக் கட் டாயம் உதவாது என்பதில் ஐயமே வேண்டாம்”*

என்றெல்லாம் அவர் பேசியது ஆர்எஸ்எஸ்-இல் இணைய வேண்டுமெனத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களிடையே பரப்புவதற்கு அவர்களுக்குப் பயன்பட்டது.

பொதுவுடைமைக் கருத்துக் கொண்டிருந்த செய பிரகாஷ் நாராயணன், பாரதிய ஜன சங்கத்தையும் இணைத்து ஜனதாக் கட்சியை உருவாக்க அதற்குத் தேவரசின் இத்தகைய பேச்சுகளும் காரணமாக இருந்தன.

ஆனால், மிக விரைவிலேயே செயப்பிரகாஷ் நாரா யணனும், இராஜ்நாராயணனும் “ஆர்எஸ்எஸ் திருந்தவே இல்லை” என்பதை வெளிப்படுத்திக் கண்டிக்கலாயினர்.

ஆக, ஆர்எஸ்எஸ், அரசியலுக்குள் நுழையவும், வெகு மக்களை ஈர்க்கவும் தன் பேச்சில் காட்டிய மாற்று உத்தி அதற்குப் பெரிய அளவில் பயன்பட்டது.

“இந்துக்களை ஒன்றிணைக்க வேண்டும்; இந்தியாவை இந்து நாடாக அமைக்க வேண்டும்” எனும் நிலையில் அவர்களின் நோக்கத்தைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டும்.

சித்பவன் பார்ப்பனர்கள் மட்டுமே ஆர்எஸ்எஸ் இல்லை; மற்ற அனைத்துச் சாதியினரையும் இணைக்க

வேண்டுமானால் வைதீகப் பார்ப்பனியக் கருத்துகளை, கோட்பாடுகளை அனைத்துச் சாதியினரின் அறிவிலும் புகட்டிட வேண்டும் என்பதையே ஆர்எஸ்எஸ் அப்போது செய்யத் தொடங்கியது.

இந்திராவின் நெருக்கடிகால ஆட்சியில், ஜனதாவிற் குள் புகுந்து தன் களப் பணிகளைப் பெருமளவில் திட்ட மிட்டுச் செய்திட ஆர்எஸ்எஸ் அதை நன்கு பயன்படுத்திக் கொண்டது.

## நெருக்கடி கால நிலையிலிருந்து பாபர் மசூதி இடிக்கப்பட்ட காலம்வரை

நெருக்கடி கால ஆட்சியில் ஆர்எஸ்எஸ், ஜமாய்த் இசுலாமி உட்பட 27 அமைப்புகள் தடை செய்யப்பட்டன. தடை செய்யப்பட்ட காலத்தில் ஆர்எஸ்எஸ் இயக்கத்தினர் பலர் தலைமறைவாகப் பணியாற்றியதாக ஆர்எஸ்எஸ் பெருமைப்பட்டுக் கொண்டது.

நெருக்கடி காலநிலை ஓராண்டில் செயப்பிரகாஷ் நாராயணன் எடுத்த முயற்சியால் ஜனதாக் கட்சியில் இணைந்து ஆர்எஸ்எஸ் ஜன சங்கத்தைத் தேர்தலில் நிறுத்துவதைப் பார்த்து, இந்திரா காந்தி தேவரசுக்குத் தூது அனுப்பி, ஜனதாவில் சேராமல் இருந்தால் ஆர்எஸ்எஸ் தடையை நீக்கிவிட்டுத் தொண்டர்களை விடுதலை செய்வ தாகக் கேட்டதும், ஆர்எஸ்எஸ் அதற்குக் காலம் கடந்து விட்டது என அறிவித்ததுமாகச் சொல்லப்படும் நிகழ்வு கவனிக்கவேண்டிய செய்தி.

இந்திராகாந்தி கொண்டுவந்த நெருக்கடி கால ஆட்சிக் குப் பிறகு நடந்த தேர்தலில், பாரதிய ஜனசங்கம் உள் ளடங்கிய ஜனதாக் கட்சியே பெருமளவில் வென்றது.

1977-இல், மொத்தம் 542 நாடாளுமன்றப் பதவிகளில், 345 இடங்களில் ஜனதாக் கட்சி வெற்றி பெற்றிருந்தது. ஏறத்தாழ 95 இடங்கள் தங்களுக்குக் கிடைத்தது என ஆர்எஸ்எஸ் சொல்லிக்கொண்டது.

ஜனதாக் கட்சியில் ஜன சங்கத்தைச் சேர்த்ததெல்லாம் ஆர்எஸ்எஸ்-இன் வெகுமக்கள் ஆதரவைத் திரட்டு தலுக்கு வழியமைத்ததாக ஆகிவிட்டது.

காங்கிரசு உள்ளிட்ட இந்தியக் கட்சிகள் எல்லாம் ஆர்எஸ்எஸ்-ஐ நடுவாக வைத்துச் சுழலும்படி செய்து கொண்டது, ஆர்எஸ்எஸ். அதன் தொடர்ச்சியாக,

> *“முசுலீம்களும் ஆர்எஸ்எஸ்-இல் இணையலாம்”*

என ஆர்எஸ்எஸ் தீர்மானித்தது.

> *“முசுலீம்கள் இந்தியாவைத் தங்கள் நாடாகக் கருதினால், தங்களின் கடந்த காலம் இந்த நிலத்தைச் சேர்ந்தது என்று நம்பினால், இந்துச் சடங்குகளைச் செய்ய அவர்கள் ஒப்புக் கொண் டால், ஆர்எஸ்எஸ்-இன் கதவு அவர்களுக்குத் திறந்திருக்கும்”*

என்று அறிவித்தனர். மும்பையில் முகமத் கரீம் சக்லா,

> *“நான் மதத்தால் முசுலீம்; ஆனால் இனத்தால் இந்து”*

என்று அறிவித்ததாக ஆர்எஸ்எஸ் பெருமை கொண்டது.

‘இந்தியன்’ என்று கூட ஓர் இனம் இல்லாதபோது, ‘இந்து’ என்பது எப்படி இனமாகும்? என்ற கேள்விகள் ஆர்எஸ்எஸ் மீது அப்போது வைக்கப்படவில்லை.

அதுமட்டுமன்றி ஜனதாக் கட்சியை எப்படியாவது முழுமையாக விழுங்கிவிட வேண்டுமென்று ஆர்எஸ்எஸ் திட்டமிட்டது.

அதில், அனைவரையும் ‘இந்துவாக’ ஆக்குகிற முயற்சியும், இந்தியாவை ‘இந்து நாடு’ என அறிவிப் பதையும் ஜனதாக் கட்சியினர் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஜெயபிரகாஷ் நாராயணன் மறைவுக்குப்பின் ஜனதாக் கட்சிக்குள் குடுமிப்பிடி சண்டைகள் நடந்தன.

ஜனதாக் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர், 1980-இல் இந்திரா காந்தியே மீண்டும் ஆட்சிக்கு வந்ததை ஆர்எஸ்எஸ் பெரிய வருந்தத்தக்க நிகழ்வாகவே பார்த்தது.

பாரதிய ஜன சங்கத்தின் பத்தாவது தலைவராக இருந்த தீன்தயாள் மறைவு பெரும் சிக்கலைக் காங்கிரசுக்குக் கொடுக்கும் என எதிர்பார்த்ததும் நடக்கவில்லை.

இந்திரா கொண்டு வந்த மன்னர் மானிய ஒழிப்பினை ஆர்எஸ்எஸ் எதிர்த்தது. அதேபோல் வங்கிகளைத் தேசிய மயம் ஆக்கியது மிகப்பெரும் தவறு என ஆர்எஸ்எஸ் அறிவித்தது.

ஆனால், எதுவும் இந்திரா காந்திக்கு எதிராக எடுபட வில்லை.

ஆனால், இந்தக் காலக்கட்டமே ஆர்எஸ்எஸ் மிக வீச்சாக பரந்துபட்டு எல்லா மொழித் தேசங்களுக்குள்ளும் ஊடுருவி அந்த அந்த மொழித் தேசச் சூழலுக்கு ஏற்ப மாற்றிமாற்றிப் பேசி ஒருங்கிணைத்த காலம் என்று அறியலாம்.

இந்திராகாந்தியின் ஆட்சி, ஊழல், முறையற்ற ஆட்சி என்கிற அளவில் மட்டுமன்றி பிற மொழித்தேச வளர்ச்சி களை நசுக்கிய வகையிலும், பார்ப்பனியத்தை வளர்த்த வகையிலும் எல்லாம் வெறி உணர்வோடு நடந்தன.

எனவேதான், அந்தந்த மொழித் தேச உணர்வு அடிப்படையிலும், ஒவ்வொரு தேச மக்களும் தங்களுக் கான உரிமைகளுக்கு - விடுதலைக்குப் போராடத் தொடங்கினர்.

காஷ்மீரம், பஞ்சாப், அசாம், நாகலாந்து, மிசோரம், மணிப்பூர், மேகாலயா, தமிழ்நாடு, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு தேசங்களின் உணர்வுகளையெல்லாம் ஆர்எஸ்எஸ் எப்படியெல்லாம் திசை திருப்பியது, ஊடுருவி அழித்தது என்பது கவனமாக அறியப்பட வேண்டியவை.

ஜனதாக் கட்சிக்குள் இருந்து செயல்பட்ட ஜன சங்கத் திற்கு, ஜனதாக் கட்சியின் கதவுகள் மூடப்பட்டு விட்டதால் ‘பாரதிய ஜனதா கட்சி’ என்கிற தேர்தல் கட்சியான வடிவத்தை ஏப்ரல் 1980-இல் முன்னெடுத்தது.

ஆனால், அதற்கு முன்பாக 1980-இல் சனவரியில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆர்எஸ்எஸ் பங்கேற்க வில்லை.

1984 தேர்தலில் ஆந்திராவில் ஒன்று, குஜராத்தில் ஒன்று என்ற அளவில் இரண்டு இடங்களில் மட்டுமே ஆர்எஸ் எஸ்-இன் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றிருந்தது. காங்கிரஸ் 374 இடங்களில் வெற்றி பெற்றது. அதன்பிறகு ஆர்எஸ்எஸின் பணி முடுக்கமானது.

**அசாமில் ...**

அசாமில், விடுதலை முன்னணி வலுப்பட்டுக் கொண் டிருந்த நேரத்தில் அங்கு இயங்கத் தொடங்கிய 'அனைத்து அசாம் மாணவர் சங்கம்', 'அசாம் கன பரிசத்' - அமைப்பு களுக்குள்ளும் ஆர்எஸ்எஸ்-இன் சங்பரிவார்கள் உள் நுழைந்தனர்.

அசாமிற்குள் நுழைந்திட்ட வங்காள ஏதிலி (அகதி) களில் இந்துக்கள் - இசுலாமியர்கள் எனும் வேறுபட்ட பார்வை தேவை என்பதாகத் தூண்டி நச்சுக் கருத்துகளைப் பரப்பினர்.

அங்கு, ஆர்எஸ்எஸ் இயக்கங்களைச் சங்பரிவார் துணை கொண்டே இயக்கினர்.

விவேகானந்தர் கேந்திராவை அசாமிலும் நிறுவி மருத்துவம், கல்விக் கூடங்கள் அமைத்து அதன் வழியாக மக்களை ஈர்த்து ஆர்எஸ்எஸ்-சிற்குக் கொண்டுவரும் பணிகளை விடாமல் செய்து வந்தனர்.

இன்றைக்கு மோடி குடியுரிமைச்சட்டத் திருத்தத்தை முதலில் அசாமில் நடைமுறைப்படுத்திக் கலவரத்தை உருவாக்கியது வரை பல்வேறு வகையில் ஆர்எஸ்எஸ்-இன் நச்சு ஊடுருவல் நடைபெற்று வருகிறது.

**கிழக்குத் தேசங்களில் ...**

அருணாச்சலப் பிரதேசத்தில் வாழ்ந்த ஆர்எஸ்எஸ்-காரரான இதழியலாளரைப் பகுதிநேரமாக விவேகானந்த கேந்திராவை உருவாக்கிக் கவனிக்கச் செய்தது.

அதை நிறுவிய பின் அந்தக் கேந்திரத்தின் வழியாகப் பள்ளிக் கூடங்கள் நடத்துவதாக அந்த தேச முதல்வரிடம் பேசி அதற்காகப் பெருமளவில் நிலத்தை ஒதுக்கி இலவய மாகப் பெற்றதுடன், அதில் கட்டடம் கட்டவும், மேசை நாற்காலிகள், பிற கருவிகள் என அனைத்தையும் இலவய மாகவே பெற்றனர்.

1926 முதல் ஆர்எஸ்எஸ் முழுநேரப் பொறுப்பாளராக இருந்த ஏக்நாத் ரானடே, முழு அதிகாரக் கட்டுப்பாட்டில் இயங்கும் விவேகானந்தா கேந்திரா மூலம் 1977-இல் அறக்கட்டளை உருவாக்கப்பட்டது.

அருணாச்சலப் பிரதேசத்தில் மட்டும் ஏறத்தாழ 40 பள்ளிக்கூடங்களை அக் கேந்திரத்தின் வழியாக நிறுவி ஆளுகை செய்கிற அளவில் ஆர்எஸ்எஸ் முழுமையாக அந்த மொழி மாநிலத்தில் ஊடுருவிக் களப் பணிகள் செய்யத் தொடங்கியது.

இதற்காகப் பிற எல்லா மொழித் தேச ஆர்எஸ்எஸ் சாகாக்கள் பலரையும் அந்த கிழக்குத் தேசங்களுக்கு அனுப்பியது, ஆர்எஸ்எஸ்.

1970-கள் வரைகூட, பெருமளவில் தொடர்பில்லாத அப்பகுதிகளைப் பிற்காலத்தில் முழுமையாகக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு அத்திட்டம் பெரும் அடித்தளமாக அமைந்தது.

அங்கு நடைபெறும் கிறித்துவ மதச் செயல்பாடுகளால், ஏதோ அந்த மொழி மாநிலங்கள் பறிபோய்விடும் நிலைக்கு ஆளாக்கப்படுவதுபோல் காட்டி, பெரிய அச்சத்தை உருவாக்கிப் பல வெளியீடுகள், ஆய்வு நூல்கள் வெளியிட்டு வருகிறது.

இந்தவகையில் 'இந்தியன் சர்ச்' என்கிற பெயரில் 'விராக் பாச் போரே' - என்ற இதழியல் பொறுப்பாளரின் நூல் குறிப்பிடத்தகுந்தது.

ஏறத்தாழ இதே நிலைப்பாடுகளில்தான் நாகலாந்து, மணிப்பூர், மேகாலயா, மிசோரம் பகுதிகளிலும் ஊடுருவத் தொடங்கியது, ஆர்எஸ்எஸ்.

சாதி சங்கங்கள் வைத்து அதை ஊக்கப்படுத்தி வளர்த்தது, பிராமணர்களிடையே சங்கங்கள் உருவாக்கிச் செயல்பட வைத்து, அதைப் பயன்படுத்துவது போன்ற வையும் ஒரு வேலைத் திட்டமாக நடந்து வருகிறது.

**பஞ்சாபில் ...**

பிற தேசங்களில் நுழைந்தது போலன்றி, பஞ்சாப் சீக்கியர்களிடையே ஆர்எஸ்எஸ் நுழையத் திட்ட மிட்டதில் உள்ள பல நுணுக்கங்களையும் கவனமாக அறிந்தாக வேண்டும்.

சீக்கியர்களிடையே பரவியிருந்த காலிசுத்தான் விடுதலை இயக்கச் செயல்பாடுகள், சீக்கியர்களே மேலாண்மைக்கு உரியவர்கள் எனும் எண்ணங்களை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்ட ஆர்எஸ்எஸ், 'இராஷ்டிரிய சீக்கியர் சங்கம்' எனும் பெயரில், அதுவும் ஆர்எஸ்எஸ் என வருகிறபடியான ஓர் அமைப்பை உரு வாக்கியது.

> *"இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் உறவை ஏற்படுத்தி இந்துத்துவ கருத்துகளைப் பாது காப்பதற்கே சீக்கிய மதம் தோற்றுவிக்கப் பட்டது"*

- என்றும்,

> *"ஒவ்வொரு குடும்பத்திலும் மூத்த மகனைச் சீக்கியனாக்குவார்கள்"*

- என்றும் புரட்டல் பேசி, விஷ்வ இந்து பரிஷத் அதற்கான விரிந்த பொறுப்புகளை எடுத்துக்கொண்டு ஏறத்தாழ ஆறு நிறுவன அமைப்புகளைச் சீக்கிய ஒற்றுமைக்காக அமைத்தது.

ஆனால், 2004 சூலை 23ஆம் நாள், சீக்கியத் தலைமையகம்,

> *"ஆர்எஸ்எஸ்-இன் தூண்டலில் நடைபெறும் இராசுட்டிரிய சீக்கிய சங்கம் தவறானது"*

- என்றும்,

> *"அது ஆர்எஸ்எஸ் பின்புலத்தில் சூழ்ச்சியாய் இயங்குவது"*

- என்றும் வெளிப்படுத்தித் தடை செய்தது.

ஆனாலும், அது விடாமல் செயல்பட்டு வருகிற நிலையில், 2009-இல் அந்த சீக்கியச் சங்கத் தலைவர் குண்டாசிங்கை காலிஸ்தான் சீக்கிய இளைஞர் ஒருவர் கொலை செய்தார்.

அதன் பிறகும், விடாமல் தொடர்ந்து அந்த சீக்கிய சங்கத்தை நடத்தி வருவதும், ஆர்எஸ்எஸ் குரு ஏகர்சிங் என்பார் இப்போது அச் சங்கத்தின் தலைவராகச் செயலாற்றி வருகிறார் என்பதும் முகாமையாகக் கவனிக்கப்படவேண்டியது ஆகும்.

### மராட்டியத்தில் ...

மராட்டியத்தில்தான் ஆர்எஸ்எஸ் முதன் முதலில் வேரூன்றித் தொடங்கியிருந்தது. மேற்குக் கடற்கரையோரத் தேசங்களில் உள்ள சித்பவன் பார்ப்பனர்கள் எல்லோரையும், ஆர்எஸ்எஸ் அதன் வலைக்குள் முழுமையாகக் கொண்டிருந்தது.

திலகர், சாவர்க்கர், எட்கேவர், கோல்வால்கர், தேவரசு என எல்லா சித்பவன் பார்ப்பனர்களும் தொடர்ந்து அந்த வேலைகளைச் செய்துவந்தனர்.

அவர்களைக் கடந்து மகாத்மா பூலே அவர்களாலும் அம்பேத்கர் அவர்களாலும் ஒருங்கிணைக்கப்பட்டிருந்த பெருவாரியான தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களைத் திரட்டுவதற்கு ஆர்எஸ்எஸ் போட்ட சூழ்ச்சித் திட்டம் கவனத்திற்கு உரியது.

1983-இல் ‘சமர்சதா மஞ்ச்’ என்கிற அமைப்பை ஏப்ரல் 14 அன்று திட்டமிட்டுத் தொடங்கியது. அந்த நாள் அம்பேத்கர் பிறந்த நாள் என்பதோடு, எட்கேவர் பிறந்த நாளாகவும் சொல்லி இணைத்துப் பெருவிழாவை எடுத்தது.

**பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரை வைக்கச் சொல்லி ஆர்எஸ்எஸ் ஆதரவு தெரிவித்தது. சமர்சதா மஞ்ச் சார்பில் ஆர்எஸ்எஸ், அம்பேத்கர் யாத்திரை ஒன்றைத் திட்டமிட்டு நடத்தியது. அந்த யாத்திரையில் அம்பேத்கர் படம், பூலே படத்துடன் மநு நூல் படத்தையும் வைத்துக் கொண்டு 7000 கிலோமீட்டர் தொடர்ந்து 47 நாள்கள் மராட்டியம் முழுமையும் அந்த யாத்திரை சுற்றி வந்தது.**

சமர்சதா மஞ்சு சார்பில் இலக்கிய நிகழ்ச்சிகள், சமூக நிகழ்ச்சிகள் நடத்தி ‘கட்கோ பாவா சமதா’ விருது என்கிற பெயரில் இந்திய ஒற்றுமை இலக்கியங்களுக்குப் பரிசுகளைக் கொடுத்துப் பலரையும் இணைத்தது.

மராட்டியத்தில் பராதிகள், கோபாலர்கள், மே தங்கி, ஜோசி, தேவதாசிகள், பில்கன், மாரியவைலே போன்ற பழங்குடியினரிடையே களப்பணி செய்து அவர்களின் வளர்ச்சிக்குத் துணைசெய்து அவர்களையெல்லாம் அதன் அரங்குக்குள் கொண்டுவந்தது.

பிள்ளையார் ஊர்வலத்தை நடத்தி வருவதும், சிவாஜியை முன்னிறுத்தி வெகுமக்களைத் திரட்டுவதும், சிவசேனை இயக்கப் போக்குகளையும் தங்களுக்கு வாய்ப்பாக்கிக் கொண்டதும் - என மராட்டியத்தில் ஆர்எஸ்எஸ்-ஐப் பெரிதாக வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைத்தன.

### பிற பகுதிகளில் ...

அவ்வாறாகவே ஒவ்வொரு மொழித்தேச மாநிலங்களுக்குள்ளும் நுழைந்து, அம்மொழி மாநில மக்களைத் தங்களின்கீழ் திரட்டிக் கொள்ள பல்வேறு தனித்தனி முயற்சிகளை ஆர்எஸ்எஸ் முன்னெடுத்தது.

கர்நாடகாவில் ‘இந்து சமேஜோத்சவம்’ என்கிற பெயரில் இந்துக்களைச் சமநிலைப்படுத்தி ஒருங்கிணைந்த பெருவிழா என்கிற பொருளில் ஒரு பெரும் விழாவை முன்னெடுத்தது.

கர்நாடக ஆர்எஸ்எஸ்-உம், விஸ்வ இந்து பரிஷத்தும் இணைந்து நடத்திய விழாவில் இந்துமத மடாதிபதிகளையும், வைதீக பிராமண ஆச்சாரிகளையும் ஒருங்கிணைத்து ஒன்றாக உணவு உண்ணும்படியும் செய்தது.

அதேபோல் 1982 முதல் ஆண்டுதோறும் ‘இந்து சங்கமம்’ எனும் பெயரில் ஒரே வகை உடை அணிந்து முதல் முறையாக வெங்காலூரில் 20,000 பேரும் கூடி ஒற்றுமையாக இருக்க வேண்டும் எனும் அறிவிப்பைச் செய்தது.

> “அம்பேத்கர் யாத்திரையில் அம்பேத்கர் படம், பூலே படத்துடன் மநு நூல் படத்தையும் வைத்துக் கொண்டு 7000 கிலோமீட்டர் - 47 நாள்கள் மராட்டியம் முழுமையும் சுற்றி வந்தது.”

கேரளத்தில், நம்பூதிரிகளின் தலைமையில் ஆர்எஸ்எஸ் பெருமளவில் வேலையைத் தொடங்கியது.

ஆட்சி அதிகார அளவில், ஆர்எஸ்எஸ் பெரிய அளவில் கேரளத்தில் காலூன்றவில்லையானாலும், குமுக ஆளுமை அளவில் அதன் உள்நுழைவு ஊடுருவல் சொல்லும்படியாக உள்ளதை அறியவேண்டும்.

கேரளத்தின் குருவாயூர், சபரிமலை, ஐயப்பன், பகவதி அம்மன் விழா போன்ற ஒருங்கிணைப்புகளை இந்துக்களின் ஒருங்கிணைப்பாகக் காட்டி, நம்பூதிரி, நாயர்களோடு ஈழவர்களை, புலையர்களை ஒருங்கிணைக்கத் திட்டங்களை அமைத்துக் கூடுதல் கவனம் செலுத்துகிறது, ஆர்எஸ்எஸ்.

அதேபோல், வெளிநாடுகளிலும் திட்டமிட்டு அந்தந்த நாடுகளுக்கென்று தனித்தனித் திட்டங்களோடும் பெயர்களோடும் இயங்கி வருகிறது.

தென்னாப்பிரிக்காவில் ‘தெற்காசிய நண்பர்கள்’ என்கிற பெயரிலும், மியான்மரில் ‘சனதன் தர்ம சுயம் சேவக் சங்கம்’ என்கிற பெயரிலும், மொரீசியசில் ‘மொரீசியசு சுயம் சேவக் சங்கம்’ என்கிற பெயரிலும், அமெரிக்காவில் ‘இந்து சுயம் சேவக் சங்கம்’ என்கிற பெயரிலும் திட்டமிட்டு இயங்கத் தொடங்கியது.

(தொடரும்)

# திராவிடத் தொன்மையைப் பறை சாற்றும் அகழ்வாராய்ச்சி ஆய்வுகளும் அறிவியல் முடிவுகளும்

**குட்டுவன்**

கீழடியில் கிடைக்கின்ற புதிய புதிய தரவுகள் தமிழர் களின் நாகரிகத்தின் காலத்தை, கிறித்துப் பிறப்பதற்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துச் செல்கின்றது.

கேரள மாநிலத்தின் பட்டணம் என்ற ஊரில் நடை பெற்ற அகழ்வாராய்ச்சியின் முடிவுகள் திராவிட நாகரிகத்தின் தொன்மையையும், அக்காலகட்டத்தில் ரோமாபுரிப் பேரரசுடன் கொண்ட வர்த்தக உறவுகளையும் வெளிக்கொணர்ந்துள்ளது என்பதை இந்து குழுமத்தி லிருந்து வெளிவரும் 'பிரண்டலைன்' மாத இதழில் அக்டோபர் 2019-இல் வெளிவந்த கட்டுரை சுட்டியுள்ளது.

*(Pattanam Excavation - Excavations in Kerala's Pattanam reaffirm its trade links with Rome by P.J. Cherian Giulia Rocco)*

இதில், இரு அகழ்வாராய்ச்சி ஆய்வாளர்கள் பல அரிய புதிய தகவல்களை அளித்துள்ளனர்.

தமிழர்களின் தொன்மை வரலாற்றை மென்மேலும் வெளிக்கொணரும் அகழ்வாராய்ச்சி முடிவுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராக இருந்த சேஷ ஐயங்கார், சென்னைப் பல்கலைக்கழகத்தின் (1914) வரலாற்று மற்றும் அகழ்வாராய்ச்சி துறையின் தலைவராக இருந்த பேராசிரியர் கிருஷ்ணசாமி ஐயங்கார், 1915-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் பொருளாதாரப் பேராசிரியராகவும் துறைத் தலைவ ராகவும் பொறுப்பேற்று 1922-ஆம் ஆண்டுவரை பணிபுரிந்துள்ள பேராசிரியர் கில்பர்ட் சிலேட்டர் ஆகிய அறிஞர்கள் திராவிட இயக்கத்தின் தொன்மையைப் பற்றித் தனித்தனியாக ஆய்வு செய்து, நூல்களை வெளி யிட்டு திராவிட நாகரிகத்தின் தொன்மையினைப் பறை சாற்றி, ஆய்வுத் தளத்தின் முன்னோடிகளாக விளங்கு கின்றனர்.

குறிப்பாக கிருஷ்ணசாமி ஐயங்கார், 'திராவிடக் கட்டடக்கலை', 'இந்தியாவின் பண்பாட்டிற்குத் தென் இந்தியாவின் பங்களிப்பு' போன்ற நூல்களை வழங்கி யவர். இவரும் திராவிடர்களின் தனித்தன்மையைப் பற்றியும், அவர்களுடைய தனித்துவமான பண்பாடு களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்பெயின் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்து, மும்பை, புனித சேவியர் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணிசெய்த பாதிரியார் ஹென்றி இராஸ், சிந்து சமவெளி நாகரிகத்தைப் பற்றிப் பல முன்னோடி யான ஆய்வுகளை மேற்கொண்டார்.

"சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகம்தான்" என 1922-ஆம் ஆண்டிலேயே இராஸ் குறிப்பிட்டார்.

இதைப் பற்றி இந்தியாவின் புகழ்மிக்க வழக்கறிஞர் பாலி நாரிமன், 2010-இல் வெளிவந்த 'என் நினைவு மறைவதற்கு முன்' (Before Memory Fades) என்ற தன் வாழ்க்கை வரலாற்று நூலில், "தாம், பாதிரியார் இராஸிடம் பயின்ற மாணவர்; வரலாற்றுப் பாடத்தை இராஸ் மாணவர் களுக்குப் பயிற்றுவிக்கும்போது சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என்பதற்கான பல தரவுகளை எடுத்துக் காட்டுவார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியர் இராஸ் சிறப்புச் சொற்பொழிவை அக்காலகட்டத்தில் வழங்கியுள்ளார். அதில், திராவிட நாகரிகத்தின் சிறப்பு களைப் பட்டியலிட்டுள்ளார்.

சேஷ ஐயங்கார், 1933-இல், 'திராவிட இந்தியா' என்ற நூலில், "தனித்த நாகரிகக் கூறுகளையும், மொழி, பண்பாட்டுக் கூறுகளையும் பெற்ற தமிழர்கள் ஆரிய நாகரிகத்திற்கு முற்பட்டவர்கள்; வடக்கிலிருந்து வந் தவர்கள்தான் ஆரியர்கள்" என்றும், "தமிழர்கள், மலை யாளிகள், கன்னடத்தவர் மற்றும் தென் இந்தியாவில் வாழ்ந்த பழங்குடியினர் ஆகியோர் திராவிட இனத்தின் முதன்மைக்குடிகள். திராவிடர்கள் இந்தியத் துணைக் கண்ட முழுவதும் வாழ்ந்தனர். பலுசிஸ்தான் தொடங்கி மத்திய இந்தியத் துணைக்கண்ட பகுதிகள் வரை வாழ்ந்த மக்களின் மொழிகளின் தொடர்பு திராவிட மொழிகளின் கூறுகள்தான்" என்பதைச் சுட்டிக்காட்டினார்.

1915-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் பொருளாதாரப் பேராசிரியராகவும் துறைத்தலைவ ராகவும் பொறுப்பேற்று, 1922-ஆம் ஆண்டுவரை பணிபுரிந்த பேராசிரியர் கில்பர்ட் சிலேட்டரின் திராவிட நாகரிகத்தைப் பற்றிய முன்னோடியான கருத்துகள் மிகச்சிறந்த முறையில் இன்றளவும் நிலைத்து நிற்கிறது.

கில்பர்ட் சிலேட்டர் எழுதிய 'இந்தியப் பண்பாட்டில் திராவிடக் கூறுகள்' (The Dravidian Elements in Indian Culture) என்ற நூலில் "'திராவிடன்' என்ற சொல் இன அடிப்படையில் அமையாமல் மொழி அடிப்படையில் அமைந்து இந்தியாவில் வாழும் மக்கள் பிரிவினரைக் குறிக்கின்றது" எனக் குறிப்பிட்டார்.

*(The word 'Dravidian' indicates a linguistic rather than a racial section of the people of India).*

“நீண்ட நெடிய நாகரிக வரலாற்றில் தமிழ் தனது தூய்மையை நிலை நாட்டியுள்ளது. தமிழிசை ஏழு வகை பகுப்பினைப் பெற்று, பல உலக நாகரிகங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.” “தமிழ் மொழி வியக்கத் தக்க அளவிற்கு நுண்ணியமான தர்க்கக் கூறுகளை உள்ளடக்கிய மொழியாகும்.” *(The Tamil Language is extraordinary in its subtlety and sense of logic)* என்றும் பேராசிரியர் சிலேட்டர் குறிப்பிட்டுள்ளார்.

“திராவிடர்கள் நுட்பமான கருவிகளைப் பயன்படுத்தி வேட்டையாடுவதில் வல்லமை பெற்று இருந்திருக்கலாம். மேலும், இன்றிருக்கும் மொழிகளிலிருந்தே வேட்டைத் தொழிலை மேற்கொண்டிருந்த பண்டைய திராவிட இன மக்களின் மனநிலைகளைப் பற்றி சில நுண்ணிய ஓரளவு தெளிந்து கொள்ளக்கூடிய விளக்கம் கிட்டுகிறது.

திராவிட மொழிகளில் தமிழே தூய்மை மிக்கது என்பதால் அதன் வழியாகவே சில கருத்துகளைப் பெற முடியும். நாம் காணும் தமிழ் மிகப் பரந்த ஒரு நாகரிகத்தின் நீண்டகால வளர்ச்சியின் விளைவே ஆகும்” என்றும்;

“அந்நாகரிகத்தைத் தோற்றுவித்து அம்மொழியை முழுதும் செம்மைப்படுத்திய மனப்பண்பு திராவிடர்கள் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டிருந்த தங்களின் மூதாதையரிடத்தில் (Hunting Ancestors) இருந்தே வந்திருக்க வேண்டும். அத்தகைய மனப்பண்பு ஒரு வேளை அந்த மூதாதையர்களிடம் முழுமையாக வளர்ச்சியடையாமல் இருந்திருக்கலாம்” என்றும் சிலேட்டர் குறிப்பிட்டுள்ளார்.

“நெல் பயிரிடுதலே திராவிட நாகரிகத்தின் பொருளியல் அடிப்படை என்பது தெளிவாகிறது. நெல்லுடன் கூட வேறு பல்வகை தினைப் பயிர்களும் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால், இவை நெல்லுக்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலையில்தான் வைக்கப் பட்டன. அத்துடன் தினைப்பயிர்களைப் பயிரிடும்போதும் கலப்பை முதலிய உழவுக் கருவிகள் நெற்பயிரிலிருந்து மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டன. நெற்பயிருக்கு அவை மிகவும் உகந்தவையாயும் உள்ளன” என்றும் சிலேட்டர் விளக்குகிறார்.

*The rice growing is obviously the economic basis of Dravidian culture. Many sorts of millets are grown in addition to rice but only as a pis aller, and the ploughs and other implements used for cultivating the millets are borrowed from rice cultivation, for which they are much suitable - (Chapter - 4, p.110)*

“நெசவுத் தொழில், பட்டுத் தொழில் ஆகியன திராவிடர்கள் இந்தியாவில் தொன்மைக் காலத்தில் பின்பற்றிய தொழில்கள்” என்றும் குறிப்பிடுகிறார். இத்தகையத் தொழில்கள் பின்பு சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களையும் மாற்றங்களையும் விளக்கியுள்ளார்.

திராவிட இயக்க நாகரிகத் தொன்மையையும், தமிழின் தொன்மையையும் குறைத்துக் காட்டி மறைக்கின்ற போக்குகளுக்கு 2018-ஆம் ஆண்டு தில்லிக்கு அருகே உள்ள அரியானா மாநிலத்தில் உள்ள ராகிகர்கியில் எடுக்கப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சி சரியான விடையை அளித்துள்ளது.

1375 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மொகஞ்சதாரோ ஆய்வைவிட இந்த நிலப்பரப்பின் அளவு இருமடங்கு அதிகம்.

இந்த ஆய்வினை மேற்கொண்ட இந்தியாவின் மூத்த தொல்பொருள் ஆய்வாளர் வசந்த் சிவராம் சிண்டே, டெக்கான் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராவார்.

இந்த ஆய்வில், 37 புதைக்கப்பட்ட தொல் குடிகள் இடங்களை அகழ்ந்தார்கள். மானுட இயல் கூறுகளின் படி விஞ்ஞான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அங்குக் கிடைத்த எலும்புகளைக் கொண்டு (டி.என்.ஏ.) மரபணு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் அடிப்படையில், ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் சமற்கிருதப் பேராசிரியர் மைக்கேல் விட்சேல் ஓர் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

இந்த மரபணு ஆய்வு, கடந்த பத்தாண்டுகளாகப் பல்வேறு உண்மைகளை வெளிக் கொண்டு வந்துள்ளது. இதுவரை இந்தியர்களின் மரபணு கிடைக்கவில்லை. ஹரியானா ராகிகர்கியில் கிடைத்த மனித மரபணுவின்படி உள்ளூரிலேயே மனித நாகரிகம் தோன்றியுள்ளது. இது சிந்து சமவெளி நாகரிகத்தை விடப் பழமையானது. கிடைக்கப்பெற்ற எலும்புகளின் ஆய்வின்படி உள்ளூரி லேயே உருவான பண்பாடுதான் மற்ற பகுதிகளுக்கும் சென்றுள்ளது.

இந்த மக்களின் நாகரிகமும் அவர்களின் பண்பாடும் பழமையான தென்னிந்திய மக்களின் நாகரிக மரபு வழியாகத்தான் வந்துள்ளது. சில ஈரான் நாட்டின் விவசாயி களுடைய சிறிய அளவிலான கலப்பும் இதில் உள்ளது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.


தென்னிந்தியத் தொல்குடி மக்களின் மரபணுக் களுக்கும் ராகிகர்கியின் வாழ்ந்த மக்களின் மரபணுக் களுக்கும் ஒற்றுமை இருப்பதால், சிந்து சமவெளி நாகரிக காலத்தில் மக்கள் பேசியது திராவிட மொழியே என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு பல உண்மைகளைச் சொல்கிறது.

இதுவரை பெரிதாகப் பேசப்பட்டது ஆரிய மொழியான சமற்கிருதம் என்பதை முறியடிக்கிறது. இதை முன் னிறுத்திய ஜெர்மன் ஆய்வாளர் மாக்ஸ் முல்லர் கருத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளது.

ஆரிய சமாஜத்தை உருவாக்கிய தயானந்த சரசுவதி, “ஆரியர்கள் உலகம் தோன்றியவுடன் திபெத் வழியாக இந்த நாட்டிற்கு வந்தார்கள்” என்ற பொய்யுரையும் முறியடிக்கப்படுகிறது.

“கிறித்துப் பிறப்பதற்கு 8000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கு ஆரியர்கள் வந்தார்கள்” என்ற பால கங்காதாரத் திலகர் கருத்தும் பொய்யாக்கப்படுகிறது. “தில கரின் கருத்துதான் உண்மையானது” என்று ஆர்எஸ்எஸ். தலைவர் கோல்வால்கர் கூறியதும் பொய்யாயிற்று.




சுவாமி விவேகானந்தர், “ஆரியர்கள் இந்தியாவில் தோன்றியவர்கள்; அப்போது ஆப்கானிஸ்தான் இந்தியப் பகுதியாகவே இருந்தது” என்ற கருத்தும் முறியடிக்கப் படுகிறது. “சமற்கிருத மொழி திராவிட மொழிகளுக்கு நெருக்கமான உறவு கொண்டிருந்தது” எனும் பாண்டிச் சேரி அரபிந்தோ கூற்றும் பொய்யாகிறது.

இதுவரை பரப்பப்பட்ட - நம்பப்பட்ட ஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்தது, வேதகால நாகரிகத்தின் தொடர்ச்சி எல்லாம் பொய்யானது என்றும் இவ்வாய்வில் வெளிவந்துள்ளது. மேலும், “சிந்து சமவெளி நாகரிகத் திற்கும், வேதகால ஆரியர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை இந்த நாகரிகம் தனித்தன்மையானது” எனத் தற்போது கூறப்பட்டுள்ளது.

தொல்பொருள் தரவுகள், மொழியியல் தரவுகள், உடற்கூறு மரபணுத் தரவுகள் ஆகியவற்றைக்கொண்டு அறிவியல் கண்ணோட்டத்தோடு செய்யப்பட்ட இந்த ஆய்வு, ஆரியர்களின் நாகரிகத்திற்கும் இப்பகுதியில் தோன்றிய நாகரிகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என உறுதி செய்துள்ளது.

2021-இல், நமித் அரோரா என்ற ஆய்வாளர், இந்தி பேசும் வடஇந்தியாவில் பிறந்து, பின்பு வடக்கு கலி போர்னியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பல ஆண்டுகள் இணையத் தொழில் உட்படப் பல தொழில் தளங்களில் பணியாற்றியவர். அகழ்வாராய்ச்சியின் மீது தணியாத பற்று கொண்ட காரணத்தால், இவர் இந்தியாவினுடைய பல அகழ்வாராய்ச்சி இடங்களுக்குப் பயணம் செய்து பல தரவுகளை அறிந்து ‘இந்தியர்கள் - ஒரு நாகரிகத்தின் சுருக்கமான வரலாறு’ (Indians - A Brief History of a Civilization) என்ற நூலை 2021-இல் வெளியிட்டுள்ளார்.

இந்நூலில், ஹரப்பா - மொகஞ்சதாரோவில் காணப் படுகிற நகர அமைப்புகள், நீர்வழிச் சாலைகள் மற்றும் அங்கு கண்டெடுக்கப்பட்ட இறந்தவர்களின் மரபணு சார் இனக்கீற்று அமில (DNA) ஆராய்ச்சி முடிவுகளின்படி, “ஹரப்பாவில் வாழ்ந்தவர்களுக்கும் தற்போது வாழும் தென்னிந்தியர்களுக்கும் மரபணுக்கள் ஒத்துப்போகின்றன” எனக் குறிப்பிடுகிறார்.

மேலும், இதை உறுதிப்படுத்தும் வகையில் தற்போது உள்ள திராவிட மொழிக் குடும்பத்திற்கும், அங்கு காணப்படுகிற எழுத்து வரி வடிவங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் குறிப்பிடுகிறார். (Indians - A Brief History of a Civilization, p.33-34)

குறிப்பாக, தென்னிந்தியாவின் விஜயபுரியில் நடை பெற்ற அகழ்வாராய்ச்சி அடிப்படையில் பல கருத்துகளை வெளிக்கொண்டு வந்துள்ளார். “இறந்த உடலை எரிப்பது திராவிட நாகரிகம் அல்ல. புதைப்பதுதான் அவர்களின் மரபாக இருந்தது” என்பதையும் விளக்குகிறார். இதற்கு ஒரு சான்றையும் அவர் குறிப்பிட்டிருப்பது நமக்கு வியப்பை அளிக்கிறது. “ஹரப்பா மரபு தென் இந்தியாவில் நிறைந்து இருக்கிறது” என்றும் குறிப்பிடுகிறார்.

“பிராமணர்களுக்கு எதிர்ப்பான திராவிட இயக்கம், தமிழ்நாட்டில் புதைக்கும் பழக்கத்தை மீட்டெடுத்தது” எனக் குறிப்பிட்டு, “கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் உடல்கள் புதைக்கப்பட்டு நினைவிடங்களாக இருப்பது இதற்கு ஒரு சான்று” என்றும் கூறுகிறார். ஏனோ தெரியவில்லை, இந்த ஆசிரியர் அறிஞர் அண்ணா நினைவிடத்தைக் குறிப்பிடவில்லை.

இவ்வாறு வடநாட்டில் பிறந்து, இந்தி மொழி பேசுகிற வரலாற்று ஆய்வாளர்கள் பலர் தங்களின் வரலாற்றுப் படைப்புகளில் திராவிட நாகரிகத்தின் தொன்மையையும், தமிழ் மொழியின் சிறப்பையும் குறிப்பிட்டு வருவது பலருக்கு அதிர்ச்சியைத் தருகிறது.

இதே கருத்தைத் தாங்கி 2018-இல் ‘அவுட்லுக்’ ஏடு, “இது தென்னிந்திய அரசியல் கட்சிகளுக்குக் கிடைத்த புதிய தீனியாகும்” என்றும், “அதே நேரத்தில், வடநாட்டில் இந்துத்துவா கொள்கையைப் பரப்பி வருபவர்களுக்குத் திராவிடமும் ஆரியமும் இருந்தது எனக் கூறுபவர் களுக்கு இது ஏற்புடையதாக அமையாது” என்றும் குறிப்பிட்டுள்ளது.

*(The close match of Rakhigarhi DNA with South Indian tribal populations also suggests that the Indus valley culture spoke en early Dravidian language. While this may be fodder for South Indian political parties, it would be much harder to digest for the popular North Indian Hindutva narriative of ancient national harmony).*

**வரலாற்றைத் திசை திருப்பும் ஆர்எஸ்எஸ் - பாஜக - சங் பரிவார அமைப்புகள் இனியாவது திருந்துவார்களா?**

**தங்களின் பொய்ப் பிரச்சாரங்களை நிறுத்துவார்களா?**

**தமிழ்நாட்டிலும் சிலர், “திராவிடமும், தமிழும் எதிரெதி ரானது என்று குறுக்குச்சால் ஓட்டும் குறுமதியினர் இதைப் படித்துத் திருந்துவார்களா?**

# பாற்கடலும் கொரோனா தடுப்பு ஊசியும்

- இராமியா -

நம் நாட்டில் கொரோனா தடுப்பூசி போடுவது 16.1.2021 அன்று தொடங்கப்பட்டது. அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகத் தலைவர் முதன்முதலாக இந்தத் தடுப் பூசியைப் போட்டுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து நிதி ஆயோக் உறுப்பினர்களும், இம்மருந்தைத் தயாரித்த நிறுவனத்தின் தலைவரும் இத் தடுப்பு மருந்தைச் செலுத்திக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து நமது தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அவர்களும் தடுப்பூசி போட்டுக்கொண்டதோடு, இத் தடுப்பு மருந்து பாதுகாப்பானது என்றும், இதன் பாதுகாப்பு குறித்து எதிரிகள் (காவிகளின் மொழியில் கூறவேண்டுமென்றால் - இசுலாமியர்கள், கிறித்தவர்கள், கம்யூனிஸ்டுகள், தி.மு.க.வினர்) பரப்பும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொய் சொல்லுவதிலும், உண்மைச் செய்திகளைத் திரித்துச் சொல்லுவதிலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்கள் காவிகள். நோய்த் தடுப்புக்காக ஒரு புதிய மருந்தை ஊருவாக்கும்பொழுது பின்பற்றவேண்டிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டு உள்ளனவா என்ற வினாவைத்தான் மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் எழுப்பி இருக்கிறார்கள். அவ்வாறு செய்யாத வரையில் அம்மருந்தின் நம்பகத்தன்மையை அறிவியலாளர்கள் எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும் என்று தான் வினவியிருக்கிறார்கள். உடனே நமது தலைமை அமைச்சர் மோடி, இம்மருந்தைப் பற்றி எதிரிகள் வதந்தி களைக் கிளப்பிவிடுவதாகக் குற்றம் சாட்டிவிட்டார்.

மோடி இப்படிச் சொல்கிறார் என்றால், காவிக் குஞ்சுகள் அதற்குப் பல படிகள் மேலே போய்விடுகிறார்கள். "இம்மருந்தின் நம்பகத் தன்மையைக் குறித்து வினவு பவர்கள் தேசத்துரோகிகள்" என்றும், "கம்யூனிஸ்ட் சீனா வின் கைக்கூலிகள்" என்றும், "இந்திய அறிவியலாளர் களை ஒதுக்கிவிட்டு, சீனாவின் வளர்ச்சிக்காகக் குரல் கொடுப்பவர்கள்" என்றும் அவர்கள் கூக்குரலிடுகின்றனர்.

சீனா கம்யூனிஸ்ட் பாதையிலிருந்து விலகி, முதலாளித் துவப் பாதையில் சென்றுகொண்டிருப்பதைக்கூட புரிந்து கொள்ளாத இவர்கள், இந்தியா இன்று கொடூரமான கொடுங்கோலரிடம் மாட்டிக்கொண்டு இருப்பதை என்றுதான் புரிந்துகொள்ளப் போகிறார்களோ?

சரி! மறுபடியும் தடுப்பு மருந்து பற்றிய செய்திக்கு வருவோம்.

அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் கழகத் தலைவரும், இன்னும் இதில் தொடர்பு உள்ள பலரும், இத் தடுப்பூசியை போட்டுக்கொண்டிருக்கிறார்களே! இது இம் மருந்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தவில்லையா? என்று கேட்கிறார்கள்.

மருந்தின் நம்பகத்தன்மையைக் குறித்து யாரும் கேட்கவில்லை; அம் மருந்தைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும் முன் செய்து முடிக்கப்பட வேண்டிய சோதனைகளை ஏன் மேற்கொள்ளவில்லை என்றுதான் கேட்கிறார்கள். இதற்கு விடை அளிக்காமல் வேறு ஏதோதோ பற்றித்தான் மோடியும், காவிகளும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் போக்கு தேவர்களும், அசுரர்களும் இணைந்து பாற்கடலைக் கடைந்ததாகச் சொல்லப்பட்ட கதையைத்தான் நினைவூட்டுகிறது. பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் கிடைத்தவுடன் அதை இரு பிரிவினரும் பங்கு போட்டுக் கொள்வதைப் பற்றிச் சச்சரவு ஏற்பட்டதாம். அப்பொழுது திருமாள் மோகினி வடிவத்தில் வந்து இரு பிரிவினருக்கும் அமிழ்தம் அளிப்பதாக உறுதி கூறி, அப் பாத்திரத்தை வாங்கிக்கொண்டாராம். அப்படிப் பிரித்து அளிக்கும் பொழுது தேவர்களுக்கு அமிழ்தத்தையும், அசுரர்களுக்கு வெறும் நீரையும் அளித்தாராம். அரசுரர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டது அமிழ்தமா? இல்லையா? எனத் தெரிந்து கொள்வதற்குள் விநியோக வேலை முடிந்துவிட்டதாம்.

இதை மனத்திற்கொண்டு தடுப்பூசி மருந்து செலுத்தப் பட்ட நிகழ்வை ஒப்பிட்டுப் பார்க்கலாம். மிக முக்கிய நபர்களுக்குச் செலுத்தப்பட்டது தடுப்பூசி மருந்துதானா அல்லது வேறு ஒன்றா என்பதை யார் உறுதிப்படுத்துவது?

சரி, அது மருந்துதான் என்றால் அது முறையான சோதனைக்கு உட்பட்டுத்தான் இருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம். அப்படியென்றால் அதை ஏன் வெளிப்படை யாக அறிவிக்க மறுக்கிறார்கள்?

காவிகளை - பார்ப்பனர்களைப் பொறுத்த மட்டில், அவாள் சொல்லும் எதையும் எதிர் வினா தொடுக்காமல் ஏற்றுக்கொள்ளும் மக்கள் கூட்டத்தை உருவாக்கிட வேண்டும் என்று விரும்புபவர்கள். அப்படி உருவாக்கி னால்தான், வெளிப்படையாக வருணாசிரம அதர்மச் சமுதாயத்தை முழுமையாக அமைத்துவிட முடியும் என்று நினைக்கிறார்கள். அதற்காக, எதிர்வினை தொடுப்பவர் களை அனைத்து விதங்களிலும் ஒடுக்க முயல்கிறார்கள்.

**நாளை இப்படியும் நடைபெறலாம்; காவிகளுக்கும் அவாளுக்கு இணங்கி நடப்பவர்களுக்கும் உண்மையான தடுப்பு மருந்தையும், எதிர் வினா தொடுப்பவர்களுக்கு நோய் உருவாக்கும் மருந்தையும் செலுத்தும் திட்டமும் செயல் படுத்தப்படலாம்.**

**அதற்காகவே வெளிப்படைத் தன்மை இல்லாத ஒரு சூழ்நிலையை இவர்கள் உருவாக்கிக்கொண்டு இருக்கலாம்.**

**மக்கள் இதற்கு எதிரான தீர்வைப் பற்றிச் சிந்திப்பது காலத்தின் கட்டாயம்.**

# உழைக்கும் மக்களின் பொன்னுலகிற்கான வழி

**இரா. திருநாவுக்கரசு**

"உலக தொழிலாளர்களே! ஒன்று சேருங்கள்! உங்களிடம் இழப்பதற்கு ஒன்றுமில்லை, அடிமைச் சங்கிலியைத் தவிர! ஆனால், அடைவதற்கோ பொன் னுலகம் காத்திருக்கிறது" - என்றார் மாமேதை மார்க்ஸ்.

வர்க்க அடிப்படையில் இந்த உலகம் பிரிந்துகிடப்பதை ஆய்வுக்குட்படுத்தி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே வர்க்க விடுதலைக்கான தீர்வாக முன்மொழியப்பட்ட முழக்கம் தான் அது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மேதை இலெனின் ருஷ்யாவிலும், மாசேதுங் சீனாவிலும், சேகுவேரா, ஃபிடல் காஸ்ட்ரோ ஆகியோர் கியூபாவிலும் மெய்பித்துக் காட்டினர். இந் நாடுகளிலெல்லாம் மக்கள் வர்க்கங்களாக மட்டுமே பெரிதும் பிளவுண்டு கிடந்தனர்.

ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் தென் அமெரிக்கா விலும், நடைபெற்ற புரட்சிபோல இந்தியாவில் நடை பெறுவதற்கான அறிகுறியே இல்லையே ஏன்?

இந்தியாவில் உழைக்கும் மக்களை வர்க்கங்களாகவும் சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள், சாதிகளாகவும் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தினர் கீழ்ச் சாதிகளாகவும், சுரண்டப்படும் நிலப் பிரபுவத்துவ - முதலாளித்து வர்க்கத்தினர் மேல் சாதி களாகவும் தம்மை வைத்துக்கொண்டனர். அதற்கேற்ப சமூக ஒழுக்கச் சட்டங்களை எழுதி வைத்துக்கொண்டனர்.

இந்த 21-ஆம் நூற்றாண்டிலும் மேற்குறிப்பிட்ட சமூக சட்டங்களைப் பழுதில்லாம் நடைமுறைப்படுத்துகின்றனர்.

தம் மீது ஆதிக்கம் செலுத்தும் வகுப்பினர் மீது பாதிப்புக்குள்ளாகும் வகுப்பினர் வெகுண்டு எழுவது இயற்கையின் விதி. அப்படித்தான் மேற்குலக நாடுகளி லெல்லாம் நடைபெற்றன. ஆனால், இந்தியாவில் அந்த விதி பொருந்தவில்லை. சுரண்டப்படும் கீழ்ச்சாதி மக்கள் மீது சுமத்தப்பட்ட கர்ம விதிப்பயனே இதற்குக் காரணம்.

முதல் புரட்சி நடைபெற்ற 1905-க்கு முன்பு ருஷ்யாவில் அனைத்து அதிகாரங்களும் ஜார் இரண்டாம் நிக்காலஸ் என்ற கொடுங்கோல் மன்னனிடமே குவிந்து கிடந்தன. அவன் பிரபுக்களையும் அதிகாரிகளையும் கொண்டு அரசு எந்திரத்தை இயக்கிக்கொண்டிருந்தான்.

அதேவேளையில் ருஷ்ய மக்கள் இன ரீதியிலும் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். தொழிலாளர் 12 - 15 மணி நேரங்கள் உழைக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர்களின் உரிமைகள் நசுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பேச்சுரிமை, எழுத்துரிமை தடை செய்யப்பட்டிருந்தன. நாடாளுமன்றம் கிடையாது, மக்கள் சுதந்திரம் கிடையாது.

அப்போது கல்வியறிவற்ற விவசாயத் தொழிலாளர்கள் தான் ருஷ்யா முழுக்கப் பரவிக் கிடந்தனர்.

நில உடைமையாளர்கள் பெரும்பாலும் முதலாளித்துவ வர்க்கத்தினருக்கு நெருக்கமானவர்களாகவே இருந்து வந்தனர். ருஷ்ய மக்கள் பெரும்பாலும் தங்களைக் கூலி களாக நிலவுடைமையாளர்களிடமோ, முதலாளிகளிடமோ விற்க வேண்டியிருந்தது. இந்தக் கொடிய சூழ்நிலையில் தான் உழைக்கும் மக்கள் அமைப்பாக அணி திரண்டனர்.

எட்டு மணி நேர வேலை, தொழிலாளர்களுக்கு ஒன்று கூடும் சுதந்திரம், விவசாயிகளுக்கு நிலம், பேச்சு, எழுத்து, ஊடகச் சுதந்திரம், திருச்சபையையும் அரசையும் பிரிப்பது, போரை நிறுத்துவது, நாடாளுமன்றக் குடியரசுக்கான அரசமைப்பு அவையை உருவாக்குவது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்திப் பல வடிவங்களில் போராட் டங்களை நடத்தினர். அப் போராட்டத்தில் பலர் கொல்லப் பட்டனர்.

ஒரு தத்துவத்தின்கீழ் ஆயுதமேந்தி அணிதிரண்ட தொழிலாளர் வர்க்கத்தின் அந்தப் போராட்டம் உலக அரங்கில் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டப் பாதையில் ஒரு புதிய வெளிச்சத்தைத் தந்தது என்று சொல்லலாம். அது ஒரு முதலாளித்துவப் புரட்சியாக மட்டுமல்லாமல் சோசலிசக் கொள்கைகளைப் பின்பற்று கின்ற நிரந்தரப் புரட்சியாகப் பின்னர் உருமாறியது,

மேதை இலெனின் அவர்கள் தலைமையில், 1917-இல், இந்தப் புரட்சி ருஷ்யாவில் வென்றது. அவருடன் புரட்சியை முன்னெடுத்த ட்ராட்ஸ்கி அவர்கள், "இந்த வேலை நிறுத்தத்தின் பாதி வெற்றியானது என்னைப் பொறுத்த வரை ஒரு மாபெரும் தத்துவார்த்த மற்றும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது. தாராளவாத முதலாளித்துவத்தின் எதிர்ப்போ, விவசாய வர்க்கத்தின் தொடக்க நிலை எழுச்சிகளோ அல்லது அறிவு வயப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளோ அல்ல, மாறாக தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்தான் முதன் முதலாக ஜாரிசத்தை அதன் கால்களின் மண்டியிட வைத்தது. பாட்டாளி வாக்கத்தின் புரட்சிகரத் தலைமையக மானது கேள்விக்கிடமற்று ஒரு உண்மையாகத் தன்னை வெளிக்காட்டியது. நிரந்தரப் புரட்சித் தத்துவம் தனது முதல் சோதனையில் வெற்றிகரமாய் தாக்குப்பிடித்திருக்கிறது என்று நான் உணர்ந்தேன்" என்று 1905-ஆம் ஆண்டைய முதல் புரட்சியைப் பற்றி 25 ஆண்டுகள் கழித்து எழுதி யிருந்தார்.

பாட்டாளி வர்க்க விவசாயி, தொழிலாளர் ருஷ்யாவில் புரட்சி செய்து விடுதலை அடைந்ததுபோலவே ஆசியா

வின் மிகப்பெரிய நிலப்பரப்புக் கொண்ட சீனாவிலும் நடந் தேறியது. அதேபோல சுரண்டலுக்கு எதிராக ஆயுத மேந்திய புரட்சியின் மூலமாகத் தென்அமெரிக்க நாடான கியூபாவில் விடுதலை கிடைத்தது.

இந்தச் சூழ்நிலைகளுக்குச் சற்றும் குறைவில்லாமல் இருக்கும் ஒரு நாடுதான் இந்தியா. சுரண்டல், ஆதிக்கம், அடக்குமுறை, இவை அனைத்தும் நீக்கமற நிறைந் திருக்கிற இந்த நாட்டில் தொழிலாளர்கள் இன்றளவும் சுரண்டலுக்கு உள்ளாகிக்கொண்டுதான் இருக்கிறார்கள். பல்வேறு நிலையிலுள்ள, பல்வேறு வகைப்பட்ட தொழி லாளர்களுக்கும் இதுதான் நிலை. ஆனால், பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த இவர்களை, தம்மை சுரண்டும் முதலாளித்துவத்திற்கு எதிராக ஒரே குடையின்கீழ் ஒன்று திரட்ட முடியவில்லை.

பாட்டாளிகளான, தொழிலாளர்களான, இவர்கள் வெறும் வர்க்கமாக மட்டும் இல்லாமல், வருண - சாதித் தீண்டாமைக்குள்ளும் இருப்பதுதான் இவர்களின் ஒருங்கிணைவைத் தடுக்கின்ற முக்கியக் காரணியாக இருக்கிறது. "இந்தியாவில் தொழில்கள் மட்டும் பிரிக்கப் படவில்லை, தொழிலாளர்களும் பிரித்து வைக்கப்பட் டிருக்கிறார்கள்" - என்றார் மேதை அம்பேத்கர்.

தூய்மைப் பணி, துப்புரவுப் பணி, கையால் மலம் அள்ளுவது, கழிவுகளை எடுப்பது, செங்கல் சூளைகளில் வேலை செய்தல், தோல் - கைவினை போன்ற வேலைகள், செத்த மாட்டை அப்புறப்படுத்துதல், பிணம் புதைத்தல் போன்ற உயர் சாதி சமூகங்களுக்கு இழிந்த அல்லது தகுதியற்றதாகக் கருதப்படும் தொழில்களைத் தலித் மக்களுக்கு என்று ஒதுக்கி வைத்திருக்கின்றனர். சமூகமும் சரி.... அரசாங்கமும் சரி.... இந்த ஒதுக்கலில் மிகத் தெளிவாகவே இருக்கின்றனர்.

உலகையே அச்சுறுத்திய கொரானா தொற்றுக் கால கட்டத்தில், அனைத்துத் தரப்பட்ட மக்களும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். ஆனால், துப்புரவுப் பணியாளர்கள் மட்டும் தங்களது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் வீதிகளை, அடைபட்ட சாக்கடைக் கழிவுகளை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தச் சூழ்நிலையில்கூட அந்தத் துப்புரவுப் பணி யாளர்களுக்கு அரசு சார்பில் பாதுகாப்புக் கருவிகள், முகக் கவசங்கள், கையுறைகள் எதுவும் முறையாக வழங்கப் படவில்லை. அவர்கள் எல்லோரும் தலித் தொழிலாளர்கள் என்ற அலட்சியமே இதற்குக் காரணம்.

நகரின் சாலைகளில், தெருக்களில் நாள்முழுக்க குப்பைகளை வீசிவிட்டுச் செல்லும் மக்கள், அடுத்த நாள் காலையில் வந்து பார்க்கும்போது தூய்மையாக இருக் கிறதே அது எப்படி? இரவு முழுக்கக் கண்விழித்து, துப்புரவுப் பெண் தொழிலாளர் கொடுத்த உழைப்புதான் அதற்குக் காரணம். மக்கள் கூடும் பொது இடங்களுக் கெல்லாம் இது பொருந்தும். அந்தத் தொழிலாளர்களில் பெரும்பாலனோர் தலித் மக்களே!

அவர்களை இந்த அரசும், சமூகமும் எப்போதும் மரியாதைக் குறைவாகவே நடத்துகின்றன. அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு மட்டுமல்ல, உழைப்புக்கேற்ற ஊதி யமும் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை. கொடுந் துன்பத் திலும் துயரத்திலும் களப்பணியாற்றும் தூய்மைப் பணி யாளர்களைக் கடவுள் என்றும், புனிதமானவர்கள் என்றும் கூறி வருகிறார்கள். இக் கொரானா காலத்தில் பாத பூஜை கூடச் செய்தார்கள். இதெல்லாம் ஏமாற்று வேலை. இதனால் அந்தத் தொழிலாளர்களின் வாழ்நிலை உயர்ந்துவிடுமா?

கொடிய கொரானா காலகட்டத்தில் சென்னை போன்ற பெரு நகரங்களில், நாட்டின் பல இடங்களில் தூய்மைப் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது அதை யார் கண்டித்தனர்? தங்களுக்குப் பூப்போட வேண்டாம். வயிற்றுக்குச் சோறு போட்டால் போதும். அது தான் இந்தச் சமூகத்தாரிடமும், அரசாங்கத்திடமும் இத்தொழிலாளர் தோழர்கள் முன்வைக்கும் கோரிக்கை.

கொரானா உச்சத்தில் இருந்த சென்ற ஆண்டில், புதுச்சேரியில் தூய்மைப் பணியாளரான தலித் பெண்மணி ஒருவர், தனது தலையில் வேப்பிலையைச் செருகிக் கொண்டு துப்புரவுப் பணிக்கு போகிறார். அவரிடம் தலையில் வேப்பிலை வைத்துக்கொண்டு போவது பற்றி நையாண்டியாகக் கேள்வி கேட்கிறது ஒரு இளைஞர் கூட்டம். அதற்கு, "நாடுவிட்டு நாடு பரவும் 'குருமா'வைத் தடுப்பதற்குத்தான் வைத்திருக்கிறேன்" என்று வெள்ளந்தி யாகச் சொல்கிறார் அப் பெண்மணி.

என்ன நோய்? என்று திரும்பத் திரும்பக் கேட்கிறார்கள் அந்த இளைஞர்கள். அதற்கு அவர், "குருமா... குருமா..." என்கிறார். மேலும், இந்நேரத்தில் வீட்டுக்குள்ள இருக் காமல் வெளியே வரலாமா...?" என்கிறார்கள். "உயிர்மேல் பயம் இருக்கிறது தான். ஆனால், வேலைக்குப் (துப்புரவு) போனால்தான் சோறு!" என்கிறார் அப் பெண்மணி. புதுச் சேரியில் நடைபெற்ற இச் சம்பவம் சமூக வலைத் தளங் களில் வைரலாகப் பரவியது.

**இதன் உளவியல் என்ன? என்று நாம் சிந்திக்க வேண்டும். உடலுழைப்பைக் கொடுத்து உயிர்வாழும் உழைக்கும் மக்கள் கீழ்ச் சாதிகளாகவும், அந்த உழைப்பின் பலனை அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள் மேல் சாதி களாகவும் இருக்கின்ற இப் போக்குதான் இத் தொழிலாளர் களின் வாழ்நிலை, துயர நிலையில் இருப்பதற்குக் காரணம். துயரப்பட்ட நிலையிலிருக்கும் இம் மக்கள் அமைப்பாய்த் திரளவேண்டும்; போராடவேண்டும். அதற்கு அம் மக்க ளிடையே ஊடுருவியிருக்கும் - குறுக்குவாக்கில் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் உட்சாதி, தீண்டாமை அமைப்பு முறையே மிகப் பெரிய தடையாக இருக்கிறது.**

**ருஷ்ய மண்ணில் உண்டான விவசாய, தொழிலாளர் கிளர்ச்சிபோல இம்மண்ணிலும் நடைபெறாமல் இருப்பதற்கு வருண - சாதித் தீண்டாமைதான் காரணம். அந்த அடிமைச் சங்கிலியை உடைப்பதற்கான வேலையில் தொழிலாளர்கள் இறங்க வேண்டும். அதுவே தொழிலாளர்கள் அடைய வேண்டிய பொன்னுலகிற்கான வழியாகும்.**

# ஞானத்தைப் போதிப்பதா ‘ரிக்’ வேதம்?

**இரணியன்**

அண்மைக்காலமாக ‘தினமணி’ உட்பட்ட சங்பரிவார ஆதரவு ஏடுகள் சமற்கிருத மேன்மையை உரத்த குரலில் பேசத் தொடங்கி உள்ளன. அத்தோடு, வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் தொண்டாற்றிய ஐரோப்பியர் அனைவரையும் கொச்சைப்படுத்தவும், இழிவுபடுத்தவும், அவர்களின் பணிகளுக்கு உள்நோக்கம் கற்பிக்கவும் முனைப்பாக இறங்கியுள்ளன.

‘மாக்சு முல்லர் கட்டமைத்த பொய்ப் பரப்புரை!’ என்ற தலைப்பில், கடந்த 16.12.2020-இல், தினமணி ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளது.

ஐரோப்பா முழுமைக்கும் வடமொழி இலக்கியங்களை அறிமுகப்படுத்திய மாக்சு முல்லரின் முகத்தில் அருமையாக சேறு பூசி இருக்கிறது, அக்கட்டுரை.

வேதங்களைச் செருமன் மொழியில் மொழிபெயர்த்தவர் மாக்சு முல்லர். மற்ற ஐரோப்பிய மொழிகளுக்கும் வேதங்கள் பரவக் காரணமானவர் அவர். சமற்கிருத இலக்கியங்களை ஐரோப்பியருக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் முதன்மையானவர் அவர். அத்தகைய மாக்சு முல்லருக்கு ‘‘சமற்கிருதமே தெரியாது’’ என்கிறார் கட்டுரையாளர்.

வேதங்களை மொழிபெயர்த்த அவருக்கு, இந்தியாவின் வரலாற்றை எழுதிய அவருக்கு, இந்தியாவை வந்து பார்க்க ஏன் எண்ணம் வரவில்லை? எனவும் வினவுகிறார், கட்டுரையாளர்.

மேலும், ‘‘ஞானத்தைப் போதித்தது ரிக்வேதம்’’ என்கிறார். அந்த ரிக் வேதத்தை ‘ஆரியப் படையெடுப்பு’ என்று சித்தரித்தது மாக்சு முல்லர் குழு என்கிறார். ‘‘அவர்களின் மொழி ஆராய்ச்சிக்குள் அவர்களின் மதத்தைப் பரப்பும் செயல் திட்டம் இருந்தது’’ என்கிறார். ‘‘பல்லாயிரம் ஆண்டுகள் வரலாற்றில் சொல்லப்படாத ஆரியர் - திராவிடர் பாகுபாட்டை அவர்கள் முன்வைத்தார்கள்’’ என்கிறார். ‘‘ஐரோப்பிய மொழிகளும் இந்திய-ஆரிய மொழிகளும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று நிறுவ அவர்கள் முயல்வதற்குக் காரணம், ஐரோப்பிய வரலாற்றைவிட இந்திய வரலாறு பிற்பட்டதே என்று நிறுவ அவர்கள் ஆசைப்பட்டதே!’’ என்கிறார்.

சமற்கிருதம் இந்தியாவிற்கு வெளியில் இருந்து வந்தவர்களின் மொழிதான் என்பதை உலகிற்கு அறிவித்தவர்கள் ஐரோப்பிய மொழியியலாளர்கள் என்பதால், சங்பரிவார்கள் அவர்களின்மேல் சேற்றை வாரி இறைப்பதை ஒரு முழுநேரப் பணியாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள்.

மாக்சு முல்லர் போன்றவர்கள் சமற்கிருத மேன்மையை உயர்த்திப் பிடித்தவர்கள்; கால்டுவெல் முதலானவர்கள் தமிழிய மொழிகளின் தனித்தன்மையை ஆராய்ந்து சொன்னவர்கள்.

சமற்கிருத இலக்கிய வளம் உலகம் முழுவதும் அறியப்பட்டதற்கு மாக்சு முல்லரே முழுமுதற் காரணர். என்றாலும், செருமன் முதலான ஐரோப்பிய மொழிகளுக்கும் சமற்கிருத மொழிக்கும் உள்ள நெருக்கத்தை மொழிகளின் ஆய்வைக் கொண்டு அவர் விளக்கிக் காட்டியதால், சமற்கிருத மொழி இந்தியாவிற்கு வெளியிலிருந்து வந்த மொழி என்பது வெளிச்சமாகிவிட்டது. இது, இராஷ்டரிய சுயம்சேவா சங் (ஆர்எஸ்எஸ்) பரிவாரங்களுக்கு எரிச்சலை ஏற்படுத்துகிறது.

பல்லாயிரம் ஆண்டு வரலாற்றில் சொல்லப்படாதது ஆரிய-திராவிடப் பாகுபாடு என்கிறார்.

‘‘ஆரியன் கண்டாய் - தமிழன் கண்டாய்’’ என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லப்பட்டுள்ளது பாகுபாடல்லாமல் வேறென்ன?

‘‘ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்’’ என்று புறநானூறு கூறுவது ‘ஆரியர்’ என்னும் இனத்தைச் சுட்டுவதல்லாமல் வேறு எதனை?

ரிக் வேதத்தைப் பற்றிக் கூறும்போது மாக்சு முல்லர், ‘‘ஆரிய இன மனிதன் முதலில் பேசிய பேச்சுமொழி ரிக்வேத மொழிதான்’’ என்கிறார். ஏனெனில், வேத மொழி சமற்கிருதத்திற்கும் முந்தையவடிவம் என்பது மொழி நூலார் கருத்து.

தொன்மை ஆரிய மொழிப் பதிவில் ரிக் வேதம் முதலிடம் பெறுகிறது என்பதையும் மொழிநூலார் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்துடன், ‘‘ஆரிய இன மக்கள் பற்றிக் கூறும் நூல்களில் முதல் இடம் பெறுவதும் ரிக் வேதமே!’’ என்கிறார், மாக்சு முல்லர்.

நடு ஆசியப் பகுதிகளில் இருந்தும், வட துருவப் பகுதிகளில் இருந்தும் புலம்பெயர்ந்து வந்த பல்வேறு இனக்குழுக்களின் புலம்பல்களும் மனநிலைப் பதிவுகளுமே ரிக் வேதம் ஆகும். இவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்குள் நுழைவதற்கு முன்பு ஆயிரக்கணக்கான கல் தொலைவில் பாடப்பட்ட பாடல்களும், இந்தியக் கண்டத்திற்குள் நுழைந்துவிட்ட பின் பாடப்பட்ட பாடல்களும் ரிக் வேதத்தில் நிரம்ப உள்ளன என்கிறார்கள்.

சூரியன் உச்சத்தில் வட்டமிட்டுக்கொண்டு இருப்பதாக வரும் வருணனைகள், அவர்கள் வடமுனைப்பகுதிகளில் வாழ்ந்தபோது பாடப்பட்டவை என்கிறார்கள். அதேபோல, ரிக் வேதத்தில் குறிப்பிடப்படும் நிலைத் திணைகளை (தாவரங்களை)ப் பற்றி ஆராய்ந்தவர்கள், இந்த நிலைத் திணைகள் (தாவரங்கள்) இந்தியாவிற்கு வெளியே பலநூறு கற்களுக்கு அப்பால் காணப்படுபவை என்கிறார்கள். எனவே, அப் பகுதிகளில் ஆரியர் வாழ்ந்த

போது அவை பாடப்பட்டிருக்கவேண்டும் என்பது ஆய்வாளர்கள் கருத்து.

ரிக் வேதப் பாடல்களில் ஆரியர்களின் வாழ்க்கை முறைகளும், போராட்டங்களும், அவர்களின் எதிரிகள் பற்றிய கருத்து அறிவிப்புகளும், யாகங்களும் பதிவாகி உள்ளன.

வச்சிராயுதத்தை ஏந்திய இந்திரன், சோம பானத்தின் உருவகமான சோமன், சூரியன், அக்கினி, உசை போன்ற கடவுள்களை நோக்கிப் பாடப்பட்ட பாடல்கள் இவை.

வேதமொழிச் சொற்கள் கிரேக்கம், இலத்தீன், செருமன் போன்ற மொழிகளின் சொற்களுடன் நெருங்கிய தொடர்புடையவை.

கிறித்துவுக்கு முந்திய ஐரோப்பியக் கடவுள்களுக்கும், ரிக் வேதக் கடவுள்களுக்கும் அதிக நெருக்கம் இருப்பதாக மாந்தநூல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**இவற்றால் விளக்கம் பெறும் உண்மை என்ன வென்றால், சமற்கிருதமும் அதன் மூல மொழியான வேத மொழியும் ஆரியர்களின் மொழிகள்; ஆரியர்கள் பல்வேறு இனக்குழுக்களாக இந்தியாவிற்குள் வந்தேறியவர்கள். அவர்களின் ஆசைகளும், எண்ணங்களும், போராட்டங்களும், எதிரிகளை நோக்கிய வசைமொழிகளுமே ரிக்குகளாகப் பதிவுபெற்றுள்ளன என்பதுதான்.**

**வேதங்கள் இந்திய மக்கள் அனைவர்க்கும் உரியவை என்பது அப்பட்டமான பொய். ஞானத்தைப் போதிப்பது ரிக் வேதம் என்பது பொய்களிலேயே மிகப் பெரிய பொய்.**

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்" என்று முகம்மது நபி குர்ஆனில் கூறுவது போன்றோ, "ஏழைக்கு இரங்குபவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்" என்று இயேசு பைபிளில் கூறுவதுபோன்றோ, மனித மனத்தை மென்மையாக்கும் ஒரு வரியைக்கூட ரிக் வேதத்தில் காண முடியாது.

ரிக் வேதம் முழுவதும் குடிவெறி உளறலும், பகைவனை அழிக்கக் கோரும் வேண்டுதல்களும், பகைவரை நோக்கிய வசை மொழிகளுமே நிறைந்துள்ளன. குளிர் நிலப்பரப்பில் அவர்கள் வாழ்ந்ததால், நெருப்பையும் சூரிய ஒளியையும் புகழ்ந்து கூறும் பாடல்கள் நிறைந்து காணப் படுகின்றன.

ஆனால், வாழ்வின் மெய்யறிவை - ஞானத்தைக் கற்பிக்கும் ஒரே ஒரு வரியைக் கூட ரிக் வேதம் முழுவதும் தேடினாலும் கிடைப்பது கடினம். ரிக் வேதம் திருக்குறளைப் போன்ற வாழ்வியல் அறநூலோ, திருமந்திரம் போன்ற இறையியல் நூலோ அல்ல. திருவாசகம், தேவாரம் போன்ற இறைப் பற்றியல் மன உருக்க நூலுமல்ல. அது வெறுப்பு, பகைமை, பூசலை மட்டுமே பேசுகின்ற நாடலை மக்களின் மனப்பிறழ்ச்சிச் சிந்தனைப் பதிவு நூல்.

ரிக் வேதம் ஞானத்தைப் போதிப்பது, இந்தியச் சிந்தனைச் செழுமையின் முதன் மூலம், இந்தியச் சிந்தனை விழுமியங்களுக்கு எல்லாம் அடிப்படை என்று கூசாமல் பேசித்திரிபவர்கள் அருள்கூர்ந்து ரிக் வேதத்தின் மெய்யியல் ஞானத்தைப் பற்றி எழுதுங்கள்; அல்லது ஓர் ஆய்வரங்கை ஏற்பாடு செய்யுங்கள். ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பப் பேசி மக்களை நம்ப வைக்க முயற்சி செய்யாதீர்கள்.

ரிக் வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கிரிஃபிட் கூறுகிறார் :

"இந்தியாவிற்கு வந்து இறுதியாகக் குடியேறுவதற்கு முன்பான ஆரியர்களின் நிலைமைகளை ரிக் வேதப் பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன. சில, இந்திய மதத்தை விட இந்திய ஐரோப்பியப் பண்புக் கூறுகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன."

ரிக் வேதத்தின் பத்து மண்டலங்களையும் படித்தாலும் திருமூலர், சிவவாக்கியர், தேவார திருவாசக ஆசிரியர்கள், ஆழ்வார்கள் போன்றோரின் இறையியல் கருத்துகளுக்கு ஒப்பாக ஒரு சொல்லையும் காணமுடிவதில்லை!

திருக்குறள் சிந்தனைகளுக்கு இணையான வாழ்வியல் செய்தி ஒன்றுகூட இல்லை.

அதில், பழைமை என்பதைத் தவிர வேறு என்ன இருக்கிறது?

*இந்திரனே ! போற்றத் தகுந்ததும், வெற்றிக்கு மூலமாய் இருப்பதும், பகைவரைத் தாழ்த்துவதுமான திரண்ட செல்வத்தை எங்களுக்குத் தா !*
*சோம பானத்தைப் பருகி, இந்திரனுடைய வயிறு கடல் போல் பரவுகிறது; அது, மிகுந்த நீருள்ள மேல்வாய்போல் ஈரமாய் இருக்கிறது.* (மண்டலம் 1 : போற்றி 2)

*பொழியப்படும் இந்த சோமரசங்கள் நலம் தருபவை.*
*வாயுவே வா ! இந்தச் சோமத்தைப் பருகு !*

(மண்டலம் 1 : போற்றி 23)

*இந்திரனே ! நீ செல்வனான தசுயுவைக் கனத்த வச்சிரத்தால் கொன்றாய் ! யக்ஞங்களைச் செய்யாமலிருக்கும் சனகர்கள் உன் விதவித நாசத் தன்மைக்கு ஆட்பட்டு அழிந்தார்கள்.* (மண்டலம் 1 : போற்றி 33)

*சோமனே ! நீ பெருகு. ஒவ்வொரு திசையில் இருந்தும் உனக்கு வலிமை வருக ! எங்க ளுக்கு நீ வலிமையைத் தா !*

(மண்டலம் 1 : போற்றி 91)

*கருப்புத்தோல் கொண்டவர்களை நீக்குபவையும், துரிதமானவையும், துலக்கமானவையும், பாய்ந்து இறங்குபவையுமான சோம ரசங்களைப் போற்றுங்கள் !*

(மண்டலம் 9 : போற்றி 41)

*சோமன் அவளை முதலில் அடைந்தான்; பிறகு அவளைக் கந்தர்வன் அடைந்தான்; அக்கினி உன்னுடைய மூன்றாவது கணவனாய் இருந்தான்; உன்னுடைய நான்காவது கணவன் மானிடனாய்த் தோன்றுகிறான்.*

(மண்டலம் 10 : போற்றி 85)

ரிக் வேதம் முழுவதும் இப்படி உளறல்கள் தாம்.

தினம் 'மணிமணி'யாக வரையும் சங் பரிவாரங்களே, ஆதி ஆரிய ரிக்கு புகட்டும் ஞானம் எது என்பதை விளக்கப்படுத்துங்களேன்!

# பூலாம்பாடி கு. வரதராசன் தொகுத்துப் பதிப்பித்துள்ள 'பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் முழக்கம்' நூலை வெளியிட்டுத் தோழர் வே.ஆனைமுத்து ஆற்றிய உரை



தோழர் கு.வரதராசன் தொகுத்து இங்கே வெளியிடப்படுகின்ற 'பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் முழக்கம்' என்கின்ற இந்த நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சியின் தலைவர் ஓவியர் முகுந்தன் அவர்களே! மதிப்பிற்குரிய மய்ய அரசின் முன்னாள் அமைச்சர் திரு.ஆ.இராசா அவர்கள் வரமுடியாத நிலையில் இந்த நூலை நான் வெளியிட, அதைப் பெற்றுக்கொண்ட, தலைசிறந்த கல்வியாளர் - ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் கே.வரதராசன் அவர்களே! எனக்கு முன்னாலே உரையாற்றி அமர்ந்திருக்கிற தி.மு.க.வின் கொள்கைப் பரப்புத் துணைச்செயலாளர் பெருநற்கிள்ளி அவர்களே! மறுமலர்ச்சி தி.மு.க.வின் அமைப்புச் செயலாளர் ஆ.வந்தியத்தேவன் அவர்களே! முனைவர் தங்கப்பிரகாசம் அவர்களே! மற்றும் இங்கே கூடியுள்ள எண்ணற்ற தோழர்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பார்ந்த வணக்கம்.

இந்நூலின் தொகுப்பாசிரியரைப் பற்றி நான் முதலிலே சொல்ல வேண்டும். அவருடைய தந்தையார் குருசாமி இலப்பைக் குடிக்காடு நடுநிலைப்பள்ளியில் தொடக்கப்பள்ளி ஆசிரியராக இருந்தார்.

நான் அந்தப் பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை 1939ஆம் ஆண்டி லிருந்து படித்தேன். நடந்து போய்ப் படித்தேன். அப்போது நான் வடக்கலூர் அகரம் என்ற ஊரிலிருந்து பென்னக்கோணம் வழியாக நடந்து இலப்பைக் குடிக்காடு செல்லவேண்டும். வடக்கலூர் அகரத்துக்கும் இலப்பைக் குடிக்காடுக்கும் தொலைவு 5 கி.மீ. அன்றாடம் போக வர 10 கி.மீ. நடந்து சென்று படித்தேன்.

போகும் வழியில் அன்றாடம் பென்னக்கோணத்தில் குருசாமி ஆசிரியர் வீட்டில்தான் தண்ணீர் வாங்கிக் குடிப்போம். அதனால் எனக்கு குழந்தையிலிருந்தே வரதராசனைத் தெரியும். வரதராசனுக்கு நான் 1963ஆம் ஆண்டில் இன்றைக்கு 55 ஆண்டுகளுக்கு முன்பு மணம் செய்து வைத்தேன். அவரும் அவருடைய துணைவியார் சின்னப்பெண்ணும் மகன், மகள், மருமக்கள், பேரக் குழந்தைகள் எல்லோருடனும் தங்களுடைய திருமண நாளில் 2018ஆம் ஆண்டில் என் வீட்டிற்கு வந்து என்னைப் பார்த்தார்கள்; எனக்கு மரியாதை செலுத்தி னார்கள். வரதராசன் எனக்கு மிகவும் நெருக்கமாக வேண்டியவர். இது முதல் செய்தி.

தந்தை பெரியார் அவர்கள் எத்தனை முறை அழைத் தாலும் பெரம்பலூர் பகுதியிலே, அரும்பாவூர் பகுதியிலே, பூலாம்பாடி பகுதியிலே, கூட்டம், குடும்ப நிகழ்ச்சி என எது வாக இருந்தாலும் வந்துவிடுவார். அக் கூட்டங்களில் நானும் அந்தூர் கி.இராமசாமி, இலந்தங்குழி ஆ.செ.தங்க வேலு, கூடலூர் தி.க.சுப்பையா, வரகூர் மா.நாராயணசாமி ஆகிய எல்லோரும் கலந்துகொள்வோம். தி.க.சுப்பையா அருமையான தோழர். சைவராக இருந்தவர்; உண்டி கட்டிக் கொண்டிருந்தார். இவர்களோடு இணைந்து பணி யாற்றியவர் ஆசிரியர் கு.வரதராசன்.

வரகூர் மா.நாராயணசாமிக்கு வயது 89. எனக்கு வயது 94. இதோ முன்வரிசையில் அமர்ந்துள்ள அந்தூர் கி.இராம சாமிக்கு 99 வயது முடிந்து 100 வயதை எட்ட உள்ளார். நூறு வயது ஆகியும் என்னோடு பணியாற்றிய தோழர்கள் இன்னும் இருக்கிறார்கள் என்றால் அவர்களைப் பார்க்கும் போது நான் நிரம்பவும் மகிழ்ச்சி அடைகிறேன்; அந்த அளவுக்கு அவர்கள் எனக்கு வழிகாட்டிகள்.

அடுத்து நூலாக்கம் பற்றிச் சொல்கிறேன். நூலாக்கம் என்பது ஒன்று. நூலைத் தொகுப்பது என்பது வேறு ஒன்று. படிப்பது, அதில் குறிப்பெடுப்பது, அதைப் படியெடுப்பது, பின்னர் அவற்றைத் தொகுத்து நூலாக்குவது என்பது வேறு. பல இடங்களுக்கும் சென்று புத்தகங்களைப் படித்து, குறிப்பெடுத்து, படியெடுத்து அதை உரிய இடங்களில் சேர்த்துத் தொகுப்பாக்கி நூலாக்குவது என்பது கடினமான பணி. இதில் வந்தியத்தேவன் அவர்களுக்குப் பயிற்சி; எனக்கும் நிரம்பப் பயிற்சி.

இந்த நூலாக்கத்துக்காகத் தோழர் கு.வரதராசன் அவர்கள் சென்னைக்குப் போய், அங்கேயே தங்கி, பெரியார் திடலில் உள்ள 'விடுதலை' அலுவலக நூலகத்தில் உட்கார்ந்து, பழைய 'குடிஅரசு', 'விடுதலை' ஏடுகளைத் தேடி எடுத்து, புரட்டிப் பார்த்து நிறைய குறிப்புகள் எடுத்து இருக்கிறார்.

கு.வரதராசன் ஒரு சாதாரண ஆசிரியர்; உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் அவ்வளவுதான். அவர் மிகப்பெரிய படிப்பாளி இல்லை. தமிழ் படித்தவர். அவருடைய உழைப் போடு அவர் தன்னுடைய துணைவியாருடைய ஒத் துழைப்பு, மகனுடைய ஒத்துழைப்பு, மருமகளுடைய ஒத்துழைப்பு, பேரக் குழந்தைகளுடைய ஒத்துழைப்பு ஆகிய இவற்றையெல்லாம் பயன்படுத்தி ஓர் அருமை யான நூலை உருவாக்கியிருக்கிறார்.

நான் பிறந்த மாவட்டம், அந்தூர் கி.இராமசாமி, வரகூர் மா.நாராயணசாமி ஆகிய எண்ணற்ற தோழர்கள் பிறந்த மாவட்டமாகிய இந்தப் பெரம்பலூர் மாவட்டத்துக்கு ஒரு வரலாற்றை கு.வரதராசன் உருவாக்கியிருக்கிறார். தான் பிறந்த மாவட்டத்துக்குப் பெருமை செய்துள்ளார். இது பெருமை இல்லையா? அவருடைய அரிய பணியை நெஞ் சாரப் பாராட்டுகிறேன். அவருடைய குடும்பத்தாரையும் பாராட்டுகிறேன்.

தந்தை ரோவர் அவர்களை நிறைய தடவை நேராகவே பார்த்திருக்கிறேன். இப்போது எனக்கு வயது 94. அவர் ஜெர்மன்காரர். அவருடைய வழியிலே கல்வி வள்ளலாக ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் மேன்மைமிகு கே.வரதராசன் இருப்பதைப் பார்த்துப் பெருமைப் படு கிறேன். ‘பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் முழக்கம்’ என்கிற இந்த நூலை நான் வெளியிட, அதை அவர் பெற்றுக்கொண்டது என்பது எனக்கு நிரம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. அதோடு சடங்கு என்று அந்தச் செய்தியை விடவேண்டும்.

இன்னொரு செய்தியைச் சொல்கிறேன். நான் அதிக நேரம் பேச விரும்பவில்லை. இந்த நாட்டில் மக்கள் தொகையில் பார்ப்பனர்கள் நூற்றுக்கு 3 பேராகவும் – நல்லா கவனிக்க வேண்டும்; பார்ப்பனர்கள் நூற்றுக்கு 3 பேராகவும், ஆதிதிராவிடர்கள் நூற்றுக்கு 14 பேராகவும், பார்ப்பனரல்லாதவர்கள் – அதாவது பார்ப்பனரல்லாத இந்துக்கள் நூற்றுக்கு 72 பேராகவும், முகமதியர்கள் நூற்றுக்கு 7 பேராகவும், ஆங்கிலோ இந்தியர்களும் கிறித்தவர்களும் நூற்றுக்கு 4 பேராகவும் இருக்கிறார்கள். மொத்த மக்கள் தொகையில் இந்தப் பிரிவு மக்கள் எத்தனை எத்தனை விழுக்காடு இருக்கிறார்களோ அத்தனை விழுக்காடு அளவுக்குத்தானே அந்த அந்தப் பிரிவு மக்களுக்குக் கல்வியில் அரசு வேலையில் இடங் களைப் பங்குப் போட்டுக் கொடுக்கவேண்டும். இதைத் தான் பெரியார் சொன்னார்.

நூற்றுக்கு 3 பேராக இருந்த பார்ப்பனர்களே கல்வி யிலும், வேலையிலும் எல்லா இடங்களையும் எடுத்துக் கொண்டார்கள். 1920-இல் சென்னை மாகாணத்தில் ஆட்சிக்கு வந்த நீதிக் கட்சி அரசுதான், நூற்றுக்கு 3 பேராக இருந்துகொண்டு எல்லா இடங்களையும் அபகரித்துக் கொண்ட பார்ப்பனர்களுக்கு 16.7 விழுக்காடு இடங்கள் தான் என்று கட்டுப்படுத்திக் குறைத்து உத்தரவு போட்டது. நூற்றுக்கு 72 பேராக இருந்த பார்ப்பனரல்லாத இந்துக் களுக்கு 41.6 விழுக்காடு இடங்கள்; நூற்றுக்கு 7 பேராக இருந்த முகமதியர்களுக்கு 16.7 விழுக்காடு இடங்கள்; நூற்றுக்கு 4 பேராக இருந்த ஆங்கிலோ இந்தியர்களுக்கும் இந்தியக் கிறித்தவர்களுக்கும் 16.7 விழுக்காடு இடங்கள்; நூற்றுக்கு 14 பேராக இருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு (அப்போது ஆதிதிராவிடர் என்ற சொல் அரசில் கையாளப் படவில்லை) 8.3 விழுக்காடு இடங்கள் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன.

மொத்த மக்களை 5 வகுப்பாகப் பிரித்தார்கள். 5 வகுப்பு களுக்கும் பங்குப் போட்டுக் கொடுத்தார்கள். எல்லா வகுப்புகளுக்கும் பங்கு கொடுக்கப்பட்டது. ஆனால், அது விகிதாசாரப் பங்காக இல்லை, அவ்வளவுதான். சில வகுப்புகளுக்குக் கூடுதலாகக் கொடுக்கப்பட்டது. சில வகுப்புகளுக்குக் குறைவாகக் கொடுக்கப்பட்டது. ஆனால், எந்த வகுப்புக்கும் பங்கு கிடையாது என்று சொல்லப்பட வில்லை.

நூற்றுக்கு மூன்று பேராக இருந்த பார்ப்பனர்கள் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது எப்படி? எதனால்? யோசித்துப் பார்க்க வேண்டாமா? அதுதான் இந்து தர்மம் – இந்துச் சட்டம்.

இன்றைக்குத்தான் சுதந்தரம் வந்துவிட்டதே! நமக்குத் தான் டாக்டர் அம்பேத்கர் புதுசா அரசமைப்புச் சட்டம் எழுதிக் கொடுத்துவிட்டாரே! இப்போது எங்கே இந்துச் சட்டம் இருக்கிறது? என்று கேட்பீர்கள். என் கையில் இருக்கிறதே – இது டாக்டர் அம்பேத்கர் எழுதிய அரசமைப்புச் சட்டம். இதிலே உள்ள 372ஆவது விதியில் பிரிவு 1-இல் உள்ளதைப் படிக்கிறேன் கேளுங்கள் :

*Article 372* : ***Constinuance in force of existing laws and their adaptation :***

(1) Notwithstanding the repeal by this Constitution of the enactments referred to in article 395 but subject to the other provisions of this Constitution, all the law in force in the territory of India immediately before the commencement of this Constitution shall continue in force therein until altered or repealed or amended by a competent Legislature or other competent authority.

இதற்குத் தமிழில் என்ன பொருள்?

இந்த 372ஆவது பிரிவுக்குத் தலைப்பு என்ன தெரியுமா? “நடப்பில் உள்ள சட்டங்கள் தொடர்வதும் அவற்றை ஏற்றுக் கொள்ளுவதும்” என்பதுதான் தலைப்பு. இனி இந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ளதன் பொருள் என்ன என்பதைச் சொல்கிறேன். “அரசமைப்புச் சட்டத்தின் 395 ஆம் பிரிவில் செல்லாது என்று சொல்லப்பட்டுள்ள சட்டங்கள் நீங்கலாக இந்த அரசமைப்புச் சட்டத்தின் மற்ற பிரிவுகளுக்கு உட்பட்டு இந்த நாட்டில் இந்த அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன் நடப்பில் இருந்த எல்லாச் சட்டங்களும் அவை மாற்றப்படாமல் அல்லது இரத்துச் செய்யப்படாமல் அல்லது நீக்கப்படாமல் இருக்கு மானால் அந்தச் சட்டங்கள் எல்லாம் செல்லுபடியாகும்.”

இந்தப் பிரிவிலே ‘existing laws’ என்று தலைப்பிலும் ‘laws in force’ என்று உள்ளேயும் என்று ஆங்கிலத்திலே சொல்லப்பட்டுள்ளதே அதன் பொருள் என்ன? அப்படி ஏன் எழுதினார்கள்? இங்கேதான் பார்ப்பான் வருகிறான்;




இந்து மதத்தை நுழைக்கிறான். எழுதப்பட்ட சட்டத்தைவிட எழுதப்படாத சட்டம் வலிமையானது. அது என்ன எழுதப் படாத சட்டம் என்று கேட்பீர்கள். "எங்கள் சாதிப் பழக்க வழக்கம்" என்கிறார்களே, அதுதான் எழுதப்படாத சட்டம். 'பழக்க வழக்கச் சட்டம்' - 'custom and usuage ' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அத்தகைய பழக்க வழக்கம், ஒரு சட்டத்தால் இரத்துச் செய்யப்படாத வரையிலும் அந்தப் பழக்க வழக்கம் இந்தப் பிரிவு 372 (1)-இன்படி சட்டத் தகுதியைப் பெற்றிருக்கிறது.

இனி செய்திக்கு வருகிறேன். இதை ஏன் இவ்வளவு விளக்கமாகச் சொல்கிறேன் தெரியுமா? நூற்றுக்கு 3 பேராக உள்ள பார்ப்பனர்கள், பெரும்பான்மை மக்களை அடிமை களாக்கி, பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றிக் கொண்டு, மூவாயிரம் ஆண்டுகளாக அனுபவித்து வர முடிகிறது என்றால் எப்படி? அதுதான் பார்ப்பானுக்குள்ள சமுதாய மரியாதை.

உலகத்தைப் படைத்தவர் பிரம்மா. அந்தப் பிரம்மாவின் நெற்றியிலே பிறந்தவர்கள் பிராமணர்கள்; தோளிலே பிறந்தவர்கள் சத்திரியர்கள்; தொடையிலே பிறந்தவர்கள் வைசியர்கள்; பாதத்தில் பிறந்தவர்கள் சூத்திரர்கள். நாமெல்லாம் சூத்திரர்கள் - பிரம்மாவின் பாதத்திலே பிறந்தவர்கள். இந்த நான்கு பிரிவுகள்தான் சாதி. தீண்டப் படாதவர்கள் இருந்தார்கள்; அவர்களுக்குச் சாதி இல்லை.

இதெல்லாம் எதிலே எழுதப்பட்டிருக்கிறது? மனுதர்ம நூல் - மனு சாஸ்திரம் என்றெல்லாம் சொல்கிறார்களே அந்த மனுஸ்மிருதி நூலில் எழுதப்பட்டுள்ளன. மனு ஏன் அப்படி எழுதினான். பார்ப்பானை உசத்தி வைக்கவும் நம்மைத் தாழ்த்தி வைக்கவும் அப்படி எழுதினான். எப்போது எழுதினான்? மூவாயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன் எழுதினான். பார்ப்பானுக்கு நாமெல்லாம் அடிமை களாக இருந்து உழைக்க வேண்டும் சேவகம் செய்ய வேண்டும் என்பதற்காகவே எழுதினான்.

இந்தச் சங்கதிகளை எல்லாம் நம் மக்களிடம் பெரியார் சொன்னார்; நாங்கள் சொல்கிறோம். வேறு யாராவது சொல்கிறார்களா? இன்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி சொல்கிறாரா? நேற்றிருந்த பிரதமர் இந்திரா காந்தி சொன் னாரா? அதற்கு முன் பிரதமராக இருந்த பண்டித சவகர் லால் நேரு சொன்னாரா? யாரும் சொல்லவில்லையே!

பெரியார்தான் கேட்டார், "மூவாயிரம் ஆண்டுக் காலத் துக்கு முந்தி எழுதினது, இப்போது ஏண்டா சட்டமாக இருக்க வேண்டும்?" என்று கேட்டார். ஏன் அப்படிக் கேட் டார். மனு ஸ்மிருதியிலே பார்ப்பான் உயர்ந்தவன் என்று எழுதப்பட்டுள்ளதையும், சூத்திரன் தாழ்ந்தவன் என்று எழுதப்பட்டுள்ளதையும் இன்றைக்கும் இரத்து செய்யாமல் அப்படியேதான் இருக்கிறது. சூத்திரன் என்றால் என்ன - பொருள் தெரியுமா? பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகன் என்று பொருள். அதற்குத்தான் இந்த 372(1) பிரிவு பாதுகாப்பு அளித்து வருகிறது.

வடநாட்டில்தான் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், தீண்டப்படாதவர் என்ற நான்கு பிரிவுகள் உண்டு. தென்னாட்டில் சத்திரியரும் வைசியரும் கிடையாது. தென்னாட்டில் பரசுராமர் சத்திரியர்களையும் வைசியர் களையும் கொன்றுவிட்டார். பிராமணர், சூத்திரர், தீண்டப் படாதவர் ஆகிய பிரிவுகள் மட்டுமே உண்டு. இந்தச் சட்டத்தின் ஒரு பிரிவுக்குப் பெயர் 'தாயபாகப் பிரிவுச் சட்டம்' என்று பெயர் - இது வடநாட்டு இந்துக்களுக்கு. இன்னொரு பிரிவுக்குப் பெயர் 'மிதாட்சரப் பிரிவுச் சட்டம்' - இது தென்னாட்டு இந்துக்களுக்கு.

மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டுள்ள செய்திகள், பழக்க வழக்கச் சட்டங்கள், தாயபாகப் பிரிவுச் சட்டம், மிதாட்சரப் பிரிவுச் சட்டம், இந்துச் சட்டம், அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 17, 25 மற்றும் இங்கே நான் குறிப் பிட்டுப் பேசிய அந்த 372ஆம் பிரிவு ஆகியவற்றைப் பற்றியெல்லாம் நான், தந்தை பெரியார் அவர்களுடன் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் விவாதிப்பேன். அதை அவரும் வரவேற்று என்னுடன் விவாதிப்பார்.

தந்தை பெரியார் அவர்கள் இறப்பதற்கு 40 நாள் களுக்கு முன்னால், அவருடன் மகிழுந்தில் சுற்றுப் பயணம் செய்தேன். 11 நாள் சுற்றுப் பயணம். 1973 நவம்பர் 17 முதல் 1973 நவம்பர் 28 முடிய! கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரைக்கும்; இடையில் பல ஊர்களில் கூட்டம். மனு ஸ்மிருதி, இந்துச் சட்டம், அது பற்றிய அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் ஆகியவற்றை விளக்கி நீயே கூட்டங் களில் பேசு என்று பெரியார் என்னைப் பணித்தார். இந்த 11 நாள்களில் நானும் பெரியாரும் மட்டும் 10 ஊர்களில் பேசினோம். பெரியாரும் வீரமணியும் ஒரு ஊரில் மட்டும் பேசினார்கள். அந்த ஒரு ஊர் திருநெல்வேலி. பெரியார் என்னைப் புரிந்துகொண்டு நீயே பேசு என்று என்னிடம்

சொல்கிறார் என்றால் அது எப்படி? நான் அந்த அளவுக்கு அந்தச் சட்டங்களைப் படித்திருக்கிறேன். 1800-ஆம் ஆண்டிலிருந்து வெள்ளைக்காரன் நமக்குச் சட்டங்களை எழுதி வைத்திருக்கிறான். அவற்றையெல்லாம் நான் படித்துவிட்டுத்தான் பேசுகிறேன்.

பண்டித நேரு வெளிநாட்டில் படித்தவர். டாக்டர் அம்பேத்கர் வெளிநாட்டில் படித்தவர். மதச்சார்பற்ற சிந்தனை - மதச்சார்பற்ற சட்டம் என்பதெல்லாம் மேலை நாட்டுப் படிப்பினால் நேருவும் அம்பேத்கரும் புரிந்து கொண்ட செய்திகள். மதச்சார்பற்ற தன்மையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தை அவர்கள் எழுதிவிடக் கூடாது என்று நூறாண்டு வாழ்ந்து மறைந்த காஞ்சி சங்கராச்சாரி கவலைப்பட்டார். அவர் கும்பகோணத்தில் இருந்த அக்னி கோத்திரம் தாத்தாச்சாரியார் என்னும் வைணவப் பார்ப்பனரைக் கூப்பிட்டார். அவரிடம், "இந்து மதத்துக்கு ஆபத்து வந்துடுச்சு, அதைத் தடுக்க வேண்டும்; நீ கும்பகோணத்திலிருந்து காஷ்மீரம் வரைக்கும் எல்லா ஊருக்கும் போ! அரசமைப்புச் சட்டத்தை எழுதுகிற பொறுப்பிலே இருக்கிறவர்களை எல்லாரையும் பார்த்துப் பேசு. தில்லிக்கும் போ! அங்கே பண்டித நேருவும் இருப்பார்; அம்பேத்கரும் இருப்பார், கே.எம்.முன்ஷி இருப்பார். அவர்களையும் பார்த்து, இந்தியாவுக்கு ஏற்ற மாதிரி, மக்களிடையே உள்ள பழக்க வழக்கம் செல்லும்; எவ்வளவு காலத்துக்கு அந்த பழக்க வழக்கம் இருக்கிறதோ அவ்வளவு காலத்துக்கும் அது செல்லும் என்கிற தன்மையில் அரசமைப்புச் சட்டத்தில் எழுதுவதற்கு ஆவன செய்துவிட்டு வா!" என்று கட்டளையிட்டார்.

372ஆவது பிரிவில் இப்போதுள்ள வாசகம் என்பது, காஞ்சி சங்கராச்சாரியின் கட்டளைப்படி, அக்னி கோத்திரம் தாத்தாச்சாரியின் முயற்சியினால் எழுதப்பட்ட வாசகம். அதற்கு முன்பு எழுதப்பட்டிருந்த வாசகம் வேறு.

"இந்தச் சட்டம் நடப்புக்கு வந்த பிறகு ஏற்கெனவே பழக்கத்திலும் வழக்கத்திலும் உள்ள சட்டங்கள் செல்லுபடி ஆகாது" என்று அம்பேத்கர் எழுதி இருந்தார். அதை பாபு இராசேந்திரப் பிரசாத் பார்த்தார். உடனே அவர் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். "அதை நிறைவேற்றினால் அரசமைப்புச்சட்ட அவையின் தலைவர் பதவியிலிருந்து விலகுவேன்" என்று பாபு இராசேந்திர பிரசாத் எச்சரித்தார். தாம் எழுதிய வாசகங்களை மாற்றிவிட்டார்கள் என்பதை அம்பேத்கர் கண்டு பிடித்துவிட்டார். ஆனாலும், அவரால் ஒன்றும் செய்ய முடியாது விட்டுவிட்டார். இவையெல்லாம் அரசமைப்புச் சட்ட விவாதங்கள் என்கிற நூலில் சொல்லப்பட்டுள்ளன.

அதன்பிறகு அம்பேத்கர் 'இந்துச் சட்டத்திருத்த மசோதா' தயாரிப்பதில் ஈடுபட்டார். அந்த மசோதாவை நாடாளு மன்றத்தில் விவாதத்துக்கு வைத்தார். உறுப்பினர்களிடமிருந்தும் மக்களிடமிருந்தும் அந்தத் திருத்தங்களுக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. ஏன் அந்த எதிர்ப்பு?

அப்போது குழந்தைத் திருமண முறை நடப்பில் இருந்தது. ஒரு ஆண் எத்தனைப் பெண்ணை வேண்டுமானாலும் மனைவியாக்கிக் கொள்ளலாம். பெண்களுக்குச் சொத்தில் வாரிசு உரிமை இல்லை.விதவைகள் மறுமணம் செய்துகொள்ளக் கூடாது. பெண்கள் அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் இந்துச் சட்டத் திருத்த மசோதா முடிவு கட்டியது. திருமணத்துக்குக் குறைந்த பட்ச வயது நிர்ணயிக்கப்பட்டது. ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்று அந்த மசோதா கூறியது. மேலும், பெண்களுக்குச் சொத்துரிமை, விதவைகள் மறுமணம் செய்துகொள்ளும் உரிமை ஆகியவையும் இந்துச் சட்டத் திருத்த மசோதாவில் இடம்பெற்று இருந்தன.

தொடக்கத்தில் இந்த மசோதாவுக்கு ஆதரவு காட்டிய பிரதமர் நேரு, எதிர்ப்பு பலமாகக் கிளம்பியபோது பின் வாங்கி விட்டார். அதனால் இந்த மசோதா நிறைவேற்றப் பட முடியாத நிலை ஏற்பட்டபோது, அம்பேத்கர் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

சட்டப்படி நாமெல்லாம் இந்து. இந்துக்களில் நாம் சூத்திரர்கள். சூத்திரர் என்றால் பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகன்னு பேரு. முறையா ஒரு அப்பன் ஒரு ஆத்தாளுக்குப் பிறந்தவன் என்றாலும் அவனும் சூத்திரன்தான்; தீண்டப் படாதவன்தான். பார்ப்பானுக்கு வைப்பாட்டி மகன்தான். நம்ம கூடப்பிறந்த சகோதரன், பண்ணையடிக்கிறவன், மாடு மேய்க்கிறவன், தண்ணீர் இறைப்பவன் எல்லாம் சூத்திரன்தான்.

2019-ஆம் ஆண்டிலும் இதுதான் நிலைமை. இந்தச் சூத்திரப்பட்டத்தை ஒழிக்கத்தான பெரியார் சாகும்வரை பாடுபட்டார்; முடியவில்லை. தீண்டாமை ஒழிந்ததா? இல்லையே! ... ... ...

இது எல்லா உயிர்களுக்கும், எல்லாப் பிறப்பிற்கும், எல்லா மனிதர்க்கும் பொருந்தும். எல்லா உயிரினங்களிலும் ஆண், பெண் உண்டு. புல்லுக்கும் பூவுக்கும் ஆணுண்டு, பெண்ணுண்டு; ஆண் - பெண் சேர்க்கை உண்டு; அது பிறப்பை உருவாக்கும். ஆனால், ஒரு கொள்கையை உருவாக்க முடியுமா? சிங்கத்தால், ஒட்டகத்தால், யானையால் ஒரு கொள்கையை உருவாக்க முடியுமா? எந்த ஜீவனாலும் மனிதனைத் தவிர கொள்கையை உருவாக்க முடியாது. காரணம் அந்த ஜீவன்களுக்குச் சிந்திக்கத் தெரியாது; கொள்கையை உருவாக்க முடியாது. மனிதன் மட்டுமே சிந்திக்கிறவன்; கொள்கையை உருவாக்க முடியும்.

யாரோ நாகசாமியாம்; தொல்லியல் ஆராய்ச்சியாளராம். அவர் சொல்கிறார், "வேதங்களின் சாராம்சம்தான் தொல்காப்பியம்; வேதங்களின் சாராம்சம்தான் திருக்குறள்" என்று சொல்கிறார். அதை ஆங்கிலத்தில் எழுதுகிறார் - அகில உலகத்துக்கும் தெரியப்படுத்த! நாம் அதை எதிர்த்துத் தமிழில் பேசுகிறோம்; எழுதுகிறோம். இந்த நம் எதிர்ப்பு போதாது! போதாது..! மக்கள் எல்லாம் சேர்ந்து எதிர்க்க வேண்டும். எதிரி எந்த மொழியில் எழுதுகிறானோ அந்த மொழியில் நாமும் எழுதவேண்டும்.

நான் இவ்வளவு வலுக்கட்டாயமாகப் பேசுவது ஏன்? பெரியார் பெயராலே பல இயக்கங்கள். நாம், நம்ம வீட்டுல உட்கார்ந்து கொண்டு பேசினால் போதுமா? எத்தனை ஆயிரம் பேர் வீட்டுக்குப் போய்ப் பேசினோம்? என்ன பேசினோம்? நான் எல்லா ஊரிலும் போய்ப் பேசினேன்.

வடகிழக்கே அசாம் வரைக்கும் போய்ப் பேசினேன். வடமேற்கே பஞ்சாப், ராஜஸ்தான், அரியானா, காஷ்மீரம் எல்லாம் போய்ப் பேசினேன். நாங்கள் ஒன்றும் பெரிய கட்சி இல்லை. ஒரு ஆயிரம் பேர் இருப்போம். எங்களிடம் எந்த வசதியும் கிடையாது; சொத்தும் கிடையாது. தமிழில் ‘சிந்தனையாளன்’ என்கிற மாத ஏட்டை 44 ஆண்டுகளாக நடத்திக்கொண்டு வருகிறோம். ‘Periyar Era’ என்கிற பேரில் ஆங்கிலத்தில் மாத ஏடு நடத்தினோம்; தொடர்ந்து நடத்த முடியவில்லை. நிறுத்திவிட்டோம்.

உத்தரப்பிரதேசம் முசாபர் நகரில் 07.05.1978-இல் பிற்படுத்தப்பட்டோர் மாநில மாநாட்டில் ஒன்றரை மணி நேரம் பேசினேன். வடஇந்தியாவில் அதுதான் என் முதல் பேச்சு. பின்னர் 1978 சூன் மாதம் தென்இந்தியாவிலிருந்தும் வடஇந்தியாவிலிருந்தும் தலைவர்களை அழைத்து மாநாடு நடத்தினேன். 1978 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பீகாரில் தமிழ்நாட்டிலிருந்து நான்கு பேர் கொண்ட குழுவாகச் சென்று 32 நாள் பரப்புரை செய்தோம். 1979 மார்ச்சு மாதம் 23ஆம் நாள் தில்லியில் 35 ஆயிரம் பேர் கலந்துகொண்ட ஒடுக்கப்பட்டோர் பேரணி, போட் கிளப் திடலில் பொதுக்கூட்டம், பெரியாரின் பேச்சுகளும் எழுத்துக்களும் அடங்கிய இந்தி மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தினோம். அந்த ஆண்டு மார்ச்சு 25ஆம் நாள் தில்லியில் பிரதமர் மொரார்ஜி தேசாயை 25 பேர் கொண்ட குழுவினராகச் சந்தித்து, “பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மய்ய அரசின் கல்வியிலும் வேலையிலும் இடஒதுக்கீடு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்” என்று கோரினோம். அதற்கு அடுத்த நாள் இராசஸ்தான் மாநிலத் தலைநகர் ஜெய்ப்பூரில் ஒடுக்கப்பட்டோர் பேரணி நடத்தினோம். பேரணியைத் தொடர்ந்து சட்டமன்றத்தின் முன் மறியல் செய்தோம்.

இப்படியாக நாங்கள் இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் சென்று விகிதாசார வகுப்புவாரிப் பங்கிட்டுக்காக ஆதரவு திரட்டினோம். ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசினோம். அதை இந்தியில் மொழி பெயர்த்தார்கள்.

இங்கு, தமிழ்நாட்டில் இருந்துகொண்டு பேசினால் எழுதினால் எல்லாம் நடந்துவிடுமா? அதனால்தான் நாங்கள் தில்லிக்குப் போனோம்; வடமாநிலங்களில் சுற்றிப் பரப்புரை செய்தோம். தில்லியில் அமைச்சர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பார்த்தோம். அவர்களுக்குச் சட்டமும் தெரியாது, விட்டமும் தெரியாது. பிற்படுத்தப்பட்டோருக்கு அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதை எடுத்துச் சொல்லி, புரிய வைத்துக் காரியங்களைச் செய்தோம்.

அந்தச் சந்திப்புகளின்போது வினய் கட்யால் என்கிற அயோத்தி நாடாளுமன்ற உறுப்பினரைச் சந்தித்துப் பேசினோம். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஆங்கிலப் பதிப்பைப் புரட்டிக்காட்டி, அவரிடம் நம் கோரிக்கையை விளக்கினேன். அவர் பாரதிய ஜனதாக் கட்சிக்காரர். பஜ்ரங்தள் என்கிற அனுமான் அணியின் தலைவர். அவர் என் கையில் இருந்த அரசமைப்புச் சட்டப் புத்தகத்தைப் பார்த்துவிட்டு, “இதைக் கொடுங்க பார்க்கலாம்!” என்று சொன்னார். “இது எங்கே கிடைக்கும்?” என்று கேட்டார். “உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றத்தில் இலவசமாகக் கொடுப்பார்கள்!” என்று சொன்னேன். அந்தச் சந்திப்பின் போது என்னுடன் சங்கமித்ராவும், பெரியாரின் அண்ணன் மருமகன் தாதம்பட்டி ம.இராசுவும் உடனிருந்தார்கள்.

தமிழ்நாட்டு அமைச்சர்களானாலும், இந்திய அரசின் அமைச்சர்களானாலும் சரி! நடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், நாம் எல்லோரும் இந்த அரசமைப்புச் சட்ட புத்தகத்தையும் மற்ற சட்டங்களையும் நல்லா படிக்க வேண்டும்; விலா வாரியாகப் படிக்க வேண்டும்.

அரசாங்கம் திட்டங்கள் போட்டு அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு என்ன செய்கிறார்கள். கடந்த 2016ஆம் ஆண்டில் நான் இங்கே பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் விவசாயிகளின் பிரச்சனைக்காக பரப்புரை ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டேன். இந்த அரசாங்கம் அம்பானிக்கு 30 ஆயிரம் கோடி கொடுக்கிறது. விவசாயிக்கு வெறும் 50 ஆயிரம் தரேன்னு சொல்கிறது. அது எப்படிப் போதும்?

இதெல்லாம் நமக்கு எதைச் சொல்கிறது? நம் நாட்டில் தந்தை பெரியார் வெற்றி பெறவில்லை; அம்பேத்கர் வெற்றி பெறவில்லை என்பதைத்தான் நமக்குக் காட்டுகிறது. இப்படிச் சொல்வதற்கு வெட்கமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் நாம் பெரியாரை வெற்றி பெற வைப்போம்! அம்பேத்கரை வெற்றி பெற வைப்போம்! என்னோடு சேர்ந்து சொல்லுங்கள், **“பெரியாரை வெற்றி பெற வைப்போம்! அம்பேத்கரை வெற்றி பெற வைப்போம்!”**

(அவையினரும், பெரியாரை வெற்றி பெற வைப்போம்! அம்பேத்கரை வெற்றி பெற வைப்போம்! என்று சேர்ந்து குரல் கொடுத்தார்கள்)

இங்கே இந்தக் கூட்டத்திற்கு திராவிடர் கழகத்துக்காரர்கள், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினர், பெரியார் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், அ.தி.மு.க., ம.தி.மு.க. என எல்லோரும் ஒன்றுபட்டு வந்திருக்கிறீர்கள். இது மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இதைப்போலத்தான் திருச்சியில் பெரியார் பற்றாளர்கள் எல்லாரும் ஒன்றாகக் கூடினார்கள். கி.வீரமணி, கலி.பூங்குன்றன், கொளத்தூர் மணி, கோவை கு. இராமகிருட்டிணன் ஆகியோருடன் நானும் திருச்சியில் கருஞ்சட்டைப் பேரணியில் 50 ஆயிரம் பேர் பங்குகொண்டோம். எதிரியை நடுங்கச் செய்தோம்; ஒன்றுபட்டு நின்றோம்.

இங்கே நான் சொன்னதை அப்படியே நம்பாதீர்கள். சிந்தனை செய்யுங்கள், சரி என்றால் அதன்படிச் செய்யுங்கள். ஒன்றுபடுவோம்! போராடுவோம்! பெரியாரை வெற்றி பெறச் செய்வோம்! அம்பேத்கரை வெற்றி பெறச்செய்வோம்! வள்ளுவத்தை நிலைக்க வைப்போம்! வாழ்க பெரியார்! வளர்க கு.வரதராசன் தொண்டு!

(10.03.2019 அன்று, பெரம்பலூர், சின்னமணி-இராசேசுவரி திருமணமண்டபத்தில் ‘பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் முழக்கம்’ நூலை வெளியிட்டு வே. ஆனைமுத்து ஆற்றிய சிறப்புரை)

- தொகுப்பு : **இரா.ச. கவிமாறன்**

## அறிவிப்பு

**உரிமை மற்றும் வெளியீடு பற்றிய விவரம்**
**அறிக்கை படிவம் IV (விதி எண்.8-இன்படி)**

**சிந்தனையாளன்** – மாத இதழ்

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடப்படும் இடம் | : மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |
| 2. | அச்சிடுவோர் | : ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ் எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு) (ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457 |
| 3. | வெளிவரும் காலம் | : மாதந்தோறும் |
| 4. | வெளியிடுவோர் பெயரும் முகவரியும் | : **வே. ஆனைமுத்து** மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |
| 5. | ஆசிரியர் பெயரும் முகவரியும் | : மேலே உள்ளபடி |
| 6. | இதழுக்கு உரிமையாளர்களின் பெயர்(களும்) முகவரி(களும்) | : **மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி** மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050. |

இங்கு மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்த வரை யில் உண்மையானவை என்று இதன்மூலம் உறுதி கூறுகிறேன்.

சென்னை
28.02.2021

ஒப்பம்
**வே. ஆனைமுத்து**
வெளியீட்டாளர்

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - மார்ச்சு 2021

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **ஆறு. கலைச்செல்வன்** | மஞ்சக்கொல்லை | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மார்ச்சு 2021

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**சிந்தனையாளன் இதழ் வளர்ச்சிக்காக**

கரூர் **தமிழன் குமராசாமி எஸ்தர்** உருவா **10,000**-மும், போரூர் இராமச்சந்திரா மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் **மல்லிகேசன்** உருவா **2,000**-மும் வழங்கி மகிழ்ந்தனர். ஆசிரியர் குழுவின் பாராட்டுகள்...

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ்,** எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு)
(ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457

Edited and Published by **V. ANAIMUTHU** on behalf of **Marxist Periyarist Communist Party**
No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-600 050.
and Printed by **SREE MUGAMBIKAI HI-TECH PRINTS** No.24, Oil Monger Street (Vaniyar Street),
Opp. Zam Bazaar Market, Triplicane, Chennai - 600 005. Ph : 044-28484457 and